5 SEP 1944

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

KUMBAKONAM.

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	25,00,000
வெளியிடப்பட்ட மூலதனம்	ரூ.	21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	18,75,000
காப்பு (ரிசர்வ்) திரவியம்	ரூ.	2,50000
மொத்த வரவு சிலவுகள்	ரூ.	2,25,00,000மேல்

பிராஞ்சுகள்:

அமதலவால்ஸா	கும்பகோணம்	மாயவரம்	திருநெல்வேலி
அனகாபள்ளி	மதராஸ்	பாலக்காடு	திருச்சினுப்பள்ளி
சிதம்பரம்	மாம்பலம்	புதுக்கோட்டை	வேலூர்
காஞ்சீவரம்	மைலாப்பூர்	சீயாழி	விஜயபுரம் (திருவாரூர்)
ஈரோடு	திருவல்லிக்கேணி	தாட்பள்ளிக்கூடம்	விருதுநகர்
காரைக்குடி	மதுரை	தஞ்சாவூர்	விஜயநகரம்
	சாலூர்	பார்வதிபுரம்	

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.;B.L.;
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

சென்னை ஸாகர், கிரௌன் இருதியேட்டர்களிலும்
மற்றும் பல முக்கிய நகரங்களிலும் வெற்றியுடன்
நடைபெறுகிறது

தாஸி அபரஞ்சி

ஜெமினி
தயாரிப்பு...





T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று ,000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

- **ஸ்டார்டிங் அதிசுலபம்:**—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- **மும்முறை வடிகட்டும் வசதி:**—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- **சமகனம்:**—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- **மிகவும் நம்பிக்கையானது:**—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- **நேர்த்தியான தோற்றம்:**—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்குமுன் மாதிரிகளைப்

T·V·S

கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVS.K - 7 TM

சந்தோஷ அறிவிப்பு.

இம்மாதத்திய இதழ் சர்க்காரின் காகித கட்டுப்பாடு உத்திரவால் சற்று தாமதமாகியது. தாமதத்தை பொருட்படுத்தாமல் நேயர்கள் 'காவேரி' மீது என்றும் மாறா அன்பு செலுத்த வேண்டுகிறோம்.

பொருளடக்கம்

தாரண மலர் 4 | ஆவணி இதழ் 1

குழப்பம்	... ...	6
கதம்பம்	... ...	8
மருதி	... சாரி	10
பதினெட்டாம் பெருக்கு	... தி. சே. சௌ. ராஜன்	17
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	... ராமையா	20
காதலும் ஊடலும்	... ஜி. எஸ். மணி	23
விஜயாவின் காதல்	... சு. சுப்புலக்ஷ்மி	32
காதலின் சின்னம்	... சுந்தரராமன்	40
இதென்ன உலகம்!	... கிருத்திவாஸ்	43
விதியும் காலமும்	... கே. சுந்தரம்மாள்	49

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப்பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

காவேரி

தாரண மலர் 4 | ஆவணி இதழ் 1

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

குழப்பம்

நாட்டில் என்றுமில்லாதவிசேஷ பரபரப்பு. பாகிஸ்தான் கொள்கைக்குக் காந்திஜியின் ஆதரவு. "அபாயம்! குடிகெட்டுவிடும்" என்று கூக்குரலிடுகிறுர் மகாகனம் சாஸ்திரியார். "ஒப்புக்கொள்ளமாட்டோம்" என ஓலமிடுகிறுர்கள் சிக்கியர்கள். "ஹிந்துக்களே, உஷார்!" உஷார்! என்று கர்ஜனைசெய்கிறுர்கள் ஹிந்து மகாசபைத்தலைவர்கள். "எல்லாம் வீண் பிரயாசை" என்று சொல்லி விட்டார் வைசிராய் பிரபு. "அதுவே சரி" யென ஆனந்தம் கொள்கிறுர்கள் பிரிட்டிஷ் ஸர்க்காரின் அடியார்களான சுதேசசமஸ்தானுதிபதிகள். "பாகிஸ்தானும் வேண்டும், திராவிடநாடுபிரிவினையும் வேண்டும்!" என்றுகூட்டத்தோடு கோவிந்தா போடுகிறுர் மாஜி மந்திரி ராமநாதன்.

குறை கூறுவது சுலபம்; கண்டிப்பது எளிது, வழிகாட்டுவது கடினம்.

ஒற்றுமை வேண்டும். இன்றேல் சுதந்திரம் கிடையாது. ஜின்னுவின் ஆதரவு பலம்; விரோதம் பலஹீனம்.

சற்றேதணிதல் பணிதலாகாது. ஜின்னுவின் கோரிக்கை தெளிவுபடவில்லை. அவருக்கே விளங்காதது. அதனுலேயே "பேசுவோம்" என்றவுடன் ஜின்னுவுக்கு ஜ்வரம்கண்டது! ஓய்வெடுத்து நிதானிக்க ஜ்வரம் ஜின்னுவுக்கு உதவியது!

நிற்க, ஜின்னுவும் அறிவற்றவரல்லர். வைசிராயின் பதில் ஜின்னுவின் மாயமயக்கத்தையும் போக்க வல்லதுதான்.

எதிர்ப்பையும் பொறுப்பையும் உணர்ந்தவர்கள் இருதலைவர்களுமெனக் கொள்வோம். எந்த வகையில் ஜின்னுவின் கோரிக்கையுள்ளது என்பது போகப் போகத்தான் தெரியும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை மட்டும் தெளிவுபட்டுவிட்டது. முட்டுக்கட்டைகள் பல போடத் தீர்மானித்துவிட்டனர். உண்மையான தேசீய அரசாங்கம் அமைப்பது முடியாதெனக் கூறிவிட்டனர். யுத்தத்தில் வெற்றி அதிகரிக்க அதிகரிக்க ஏகாதிபத்திய வெறியும் விஷம் போல் ஏறி வருகிறது.

அன்னிய அரசாங்கம் அடிமைத்தளைகளை விலக்காது. சரித்திரம் அதற்கு அத்தாக்ஷி. "தன் கையே தனக்குதவி" என்றகொள்கையே வெற்றிதரும்.

அன்னிய அரசாங்கத்தின் போக்குத் தெளிவான பிறகும் எதற்கு ஜின்னுவுடன் சமரசம்? சிக்கல்கள் தீர முயற்சி வேண்டும். சும்மா இருத்தல் நிலைமையைச் சீர்படச் செய்ய உதவாது.

எந்த அளவில் ஜின்னுவுக்குப் பணிவது? நாட்டின் நலத்துக்கும், எல்லாமக்களின் நலத்துக்கும் தீங்கு ஏற்படாத அளவுக்கு! ராஜாஜியின் திட்டம் அப்படிப்பட்டதா? பஞ்சாப் மாகாணம் வங்காளமாகாணம் அத்திட்டத்தை எதிர்த்துள்ளன. அம் மாகாண மக்கள் ஒப்புக்கொள்ளாவிடில் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. ராஜாஜியின்திட்டம்சிந்திப்பதற்குஉணவுபோன்றது. பொறுப்புள்ள தலைவர்கள் தவறுகளை ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டார்களென நம்புவோம்.

எப்படியும் தற்போதைய சீர்கேடான நிலைமை அகலவேண்டும். அரசாங்கம் மக்களின் நலத்தைப் புறக்கணித்து. ஏதேச் சாதிகாரம் புரிவது தடைபட வேண்டும். அதிகாரிகளின் பிதற்றல் அலறல் பிடிவாதம் இவைகள் ஒழிய வேண்டும்.

மற்ற 'மைனாரிட்டிகளி'ன் கோரிக்கைகளும் தீரவேண்டாமா? 'மைனாரிட்டிகள்' பெரும் பாலும் அன்னிய அரசாங்கத்தின் கற்பனை கள். பெரிய முட்டுக்கட்டை தகர்த்தெறியப் பட்டவுடன் சிறிய முட்டுக் கட்டைகள் தூள் தூளாகப் பறந்துவிடும்.

சுதேச சமஸ்தானாதிபதிகள்? விண்கவலை! அன்னிய அரசாங்கமே அடிபணிய முன் வந்தால் அடியார்கள் பின்பற்றுவார்கள். வேறுவழியில்லை.

தாழ்த்தப் பட்டவர்கள்? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் அக்கரையும், அன்பும் உண்மையல்ல என்பது தெரிந்தது தான். போலித்தலைவர்களான அம்பட்கார் போன்றவர்களின் கூற்றின் தன்மையும் வெட்டவெளிச்சமானது தான்.

ஆங்கிலோ இந்தியர்கள்?—ரொம்பநல்லவர் கள். ஒருவரிடமும் நம்பிக்கைகொள்ளாமல் திண்டாடுகிறார்கள்.

''மற்றவர்கள்'!? மற்றவர்கள் யார் என்பது அந்தக் கடவுளுக்கும் தெரியாது!

எப்படியும் நாட்டில் ஒற்றுமை ஏற்பட ஏதாவது செய்யவேண்டும். ஜின்னாவுடன் சமரசம் பேசுவது தவறன்று. நடப்பதைப் பொறுத்துப்பார்த்து, விளங்கியபின் நல்லது கெட்டது கூறுவோம். ஏற்கனவே நிலைமை குழப்பமாயிருக்கையில் அறியாதவர்களும் குழப்பம் விளைவிப்பது அழகன்று. நாட்டில் ஒற்றுமை ஏற்பட ஆண்டவனை அனைவரும் வேண்டுவோம்!

225594

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

கதம்பம்

அமைதி. (நாடகம்.)

காட்சி 1,

(இடம்: தேவலோகம். கடவுள் சயனித்திருக்கிறார், யுத்ததேவதையின் பிரலாபம்.)

யு-தே: ஹா! ஹா! கேட்பாரில்லையா! என் பசியைத் தீர்க்கமுடியாத கடவுள் எதற்கு?

(நாரதர் வருகை)

நார: ஏ. பேயே! அறிவில்லாத மூடமே! கடவுள் படுத்து உறங்குவது கண்தெரியவில்லையா?

யு-தே: நாரத முனியே! பசிக்கொடுமையினால் ஏதோ உளறிவிட்டேன்; மன்னிக்கவேண்டும்.

நார: பூலோகத்தில்தான் அகோரயுத்தம் நடந்துவருகிறதே, இன்னும் என்ன உனக்குப் பசி?

யு-தே; இன்றையபசி தீர்ந்தால் போதுமா? நாளை என்செய்வேன்? எல்லோரும் யுத்தத்துக்குப்பின் பற்பல மனோராஜ்ய திட்டங்கள் வகுத்து வருகையில் நான் மட்டும் சும்மா இருப்பதா? இந்த யுத்தம் தப்பித்தவறி முடிந்துவிட்டால் என் கதி என்னவது? எனதுபசி எவ்வாறு தீரும்?

நார: கவலைவேண்டாம். உலகில் சுயநலம் பிடித்துள்ள சர்வாதிகாரிகள் உள்ள அளவும், சாம்ராஜ்ய மோகம் பிடித்துள்ள வல்லரசுகள் உள்ள அளவும், அடிமையின் அவதிகள் உள்ள அளவும், உனக்குச் சிறிதும் பசிக்குறை நேரிடாது. நிற்க, இந்த யுத்தம் முடியவிட்டல்லவோ உனக்குக் கவலை ஏற்படவேண்டும்? போய்வா! நான் யாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறேன்,

காட்சி 2.

(கடவுளும், நாரதரும்.)

கடவு: நாரத முனியே! என் கவலையைப் போக்கத் தாங்கள் தான் உபாயம் சொல்ல வேண்டும். யுத்ததேவதை வேறு நேற்றுவந்து என் தூக்கத்தைக் கெடுத்தது. உலகில் மக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறார்கள். கர்ப்பத்தடை முறைகளும், பஞ்சம், பிணி முதலியவைகளும் ஏன்? இந்த யுத்தம்கூட பிரஜோற்பத்தியை அதிகம் பாதிக்கவில்லை. இப்படியே காலம் போய்க்கொண்டிருந்தால் ஒரு நாள் ஸர்வாதிகாரிகளும், சாம்ராஜ்ய மோகம்பிடித்தவர்களும் நம் உலகையும் படையெடுத்து விடுவார்களோவென அஞ்சுகிறேன்! என்ன செய்யலாம்?

நார: ஏது? "நாரதமுனியே" என்ற மரியாதைமுறையில் இறங்கினீர்கள்? காரியம் ஆகவேண்டுமென்றால் வெள்ளைக்காரர்கள்தான் தூக்கிவைத்துப் பேசுவார்களென்று நினைத்திருந்தேன். இருக்கட்டும். என்ன செய்ய வேண்டும்?

கட: பூவுலகில் சர்வாதிகாரிகளுக்கும், சாம்ராஜயப் பித்தர்களுக்கும் நல்லுணர்ச்சி ஏற்படவேண்டும். நம்முடைய ஆபத்தும் நீங்கவேண்டும்? யுத்ததேவதைக்கு ஒரு வழி பிறக்கச் செய்யவேண்டும்.

நார: எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பைசாச உலகத்தினின்றும் நான்கைப் பிடித்து அனுப்பிப் பூலோகத்தில் ருஷ்யா, பிரிட்டன். அமெரிக்கா, சைனு இந்தத் தலைவர்களுடைய பகுத்தறிவைச் சூன்யப்படுத்தச் செய்துவிடுவது. இந்த நான்கு "வல்லரசு" தேசத் தலைவர்களும் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு ஒருவர் மண்டையை மற்ருருவர் உடைத்துக்கொள்வார்கள். தங்கள் அருளால் பிறகு ஞானோதயம் ஏற்படலாம். அப்பாவி சைனுவுக்கு அனுப்பப்படும் பிசாசு சற்றே சாந்தமுள்ளதாக இருக்கட்டும்!

காட்சி 3,

(இடம்; லண்டன். சர்ச்சில்துரை விசனத்துடன் உலாவுதல்.)

சர்: ஆஹா! என்ன ஆச்சரியம்! நேற்று உதைபட்ட ருஷ்யா இன்று ஐரோப்பாவிலேயே முதன்மையாக விளங்குகின்றதே? ருஷ்யாவின் ஆதிக்கம் அதிகமானால் நமது கதி என்ன? ருஷ்யாவைப் பகைத்துக்கொள்வது இயலாத காரியம். ஒதுங்கிக்கிடந்த அமெரிக்காவின் போட்டித்தொல்லை வேறு. சைனுவை வேறு இழுத்து வைத்துத் தொலைக்கவேண்டி வருகிறது! இருக்கட்டும். நான்கு வல்லரசுகளும் சேர்ந்து யுத்தத்துக்குப்பின் உலக சமாதானத்தைக்காக்க வேண்டுமென மெதுவாக வார்த்தையை விட்டுப் பார்ப்போம். அமெரிக்கா தலையையாட்டிவிடும், கவலையில்லை! சைனுவைப்பற்றி அக்கரையே எடுத்துக்கொள்ள வேண்டாம். ருஷ்யா என்ன செய்யுமோ? பார்ப்போம்.

காட்சி 4.

(இடம், நடுக்கடல்; சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும்.)

ரூஸ்: இந்தப் பத்திரிகைச் செய்தியைக் கவனித்தீர்களா? ருஷ்யா முறைப்பதைப் பாருங்கள். "ஐரோப்பாவைப் பற்றியவரையிலும் முக்கியமாக ருஷ்யாவைச் சேர்ந்துள்ள தேசங்களைப் பற்றியவரை சமாதானத்தைக் காப்பது ருஷ்யாவின் ஏகதேச உரிமை." நமது சூழ்ச்சி பலிக்குமா? ஏது? நம்பிக்கை எழவில்லை. அதிருக்கட்டும். என் தேசத்தில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியைக் கவனித்தீர்களா? "சென்ற யுத்தக்கடனையும் இப்பொழுதைய யுத்தக் கடனையும் அன்னியர்களிடமிருந்து வசூலிக்க

இதுவேதருணம், கடன்களைத் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலைமையிலிருக்கும் தேசங்களிடமிருந்து கடனுக்குப் பதிலாக நாடுகளாவது பெற்றுவிடலாம்.''

சர்: ரூஸ்வெல்ட்! நீர் கூறுவது எரிகிறவீட்டில் எண்ணெயை ஊற்றுவதுபோல் இருக்கிறது. உமக்குப் போட்டியாக வரவிருக்கும் தாமஸ்டிவி வேறு பூசைவேளையில் கரடியை விட்டு ஓட்டுகிறுன்.

ரூஸ்: ஐயோ, அது என்ன? (சர்ச்சில் ஒரு பத்திரிகைச் செய்தியைக் காட்டுகிறுர். ரூஸ்வெல்ட் படிக்கிறுர்.)

:'நான்கு பெரிய வல்லரசுகளே உலக சமாதானத்தைக் காக்கக் கடமைப் பட்டவர்கள் என்று சொல்வது அறிவுடைமையல்ல; நேர்மையுமல்ல. நடவாத, முடியாத காரியம். நான்கு வல்லரசுகளின் பெயரால் வகுத்துள்ள திட்டம் சிறிய தேசங்களைப் பலவந்தப் படுத்தி அவைகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகும். இந்தத் திட்டத்திஞல் உலக சமாதானம் அழிந்துவிடும்.''

(சமாதான தேவதையின் தோற்றம்.)

சமா-தே: சர்வாதிகாரிகளே! சாம்ராஜ்யப் பித்தர்களே! உலக சமாதானம் நிலைக்க வேண்டுமாஞல் சாம்ராஜ்யமோகம் ஒழிய வேண்டும். சிறிய தேசம், பெரியவல்லரசு என்ற மனப்பான்மை மாறவேண்டும். உலகத்தினின்றும் அடிமை என்ற சொல் அகல வேண்டும். யாவர்க்கும் சம உரிமை கிடைக்க வேண்டும். எல்லாத் தேசங்களும் சுதந்திர நாடாக விளங்கவேண்டும். உங்கள் திட்டங்களை உடைப்பில் போடுங்கள். உலகத்தை எக்காலத்திலும் ஏமாற்றமுடியாது. கடவுள் ஒருவர் உண்டென எண்ணி நேர்மைவழியில் நடவுங்கள். இன்றேல் அடுத்த அகோரயுத்தத்தை அதிவிரைவில் காண்பீர்கள்.

(சமாதான தேவதை மறைகிறது.)

ரூஸ்; எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே. ஆனுல் தாங்கள் முயன்ருல் உலகில் சமாதானம் நிலவலாம். இந்தியாபோன்ற நாடுகளின் அடிமைத் தனத்தை அகற்றி வழிகாட்டினுல் உலகம் புகழும் தங்களை.

சர்: பாவீ, என்ன சொன்னீர்? நாவையடக்கும். ஸாம்ராஜ்யத்தை விருத்திசெய்ய இருக்கிறேஞ அல்லது அதையழிக்க இருக்கிறேஞ?

ரூஸ்; புத்தி! புத்தி! மன்னிக்கவேண்டும். எப்படியாவது தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் எங்களையும் மறந்துவிடாமல் சேர்த்துக் கொண்டு கிருபைசெய்யவேண்டும்,

சர்: நியாயமான வேண்டுகோள்! மறப்பேஞ நண்பராகிய உம்மை நான். விடும் கவலையை, என் சொற்படி கேளும்; வருங்கால யுத்தம் வரையில் நாம் இருப்பது என்ன நிச்சயம்! வீண் கவலை நமக்கு எதற்கு?

(இருவரும் போகிறுர்கள்,)

Grow Vitamin at your Kitchen Garden

SRINIVASA GARDENS

KADALANGUDI, (Via) NACHIARKOIL
KUMBAKONAM

A Collection—நாட்டுக் காய்கறி விதைகள் 20 பாக்கெட்டுகள் விலை ரு. 2—8—0

[அவரை, புடல், பாகல், பூசனி, பறங்கி, வெள்ளரி, கக்கரி, சுரை, பீர்க்கு, கீரை, கொத்தவரை, வெண்டை, பீன்ஸ், பிரஞ்சு டபிள் பீன்ஸ், தட்டப் பயறு, பயறு, வாளாவிரை, மிலான், தக்காளி, கத்தரி]

B-Collection— ,, ,, 24 பாக்கெட்டுகள் ரு. 3—0—0

[ஷி 20 பாக்கெட்டும், மிளகாய், மீசி அவரை, அரைக்கீரை முதலிய நான்கும்]

C-Collection— ,, ,, 30 பாக்கெட்டுகள் ரு. 3—8—0

[A & B 24 பாக்கெட்டும், முள்ளங்கி, லெட்டியூஸ், காரட்டு, கத்திரி, புருஜாதி, வெண்டை பச்சை or White Velvet ஆகிய ஆறும்]

முன்பணம் அனுப்பினுல் தபால் செலவில்லை. V.P-யில் அனுப்பினுல் Postage Extra.

ஒட்டுமாங்கன்றுகள் எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவை டஜன் 1-க்கு ரு. 16—0—0
எலுமிச்சை நார்த்தை ரு. 6—0—0

மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொளளவும. கேட்லாக் இனம்.

K. R. கிருஷ்ணஸாமி அய்யங்கார், புரோப்ரைட்டர்.

மருதி

சாரி

கிருஷ்ணன், எம். ஏ., விசாகப்பட்டினம் துறைமுக உத்யோகஸ்தராக வேலையை ஒப்புக்கொண்டபொழுது, கூடவே பத்மாவும் குழந்தை ஸரோஜாவும் வந்தார்கள். ஸரோஜாவுக்கு வயது ஒன்று. பத்மா தன்னுடைய 22 பிராயத்தையும் மாயவரம் சீர்காழி இந்த இரண்டு இடத்திலும் கழித்தவள். கிருஷ்ணனுக்கு எம். ஏ. பரீக்ஷை தேறி ஐந்து வருஷ காலம் வேலையில்லாமல் திண்டாடுவதில் சென்றது. அதிர்ஷ்ட வசமாக, அவருடைய மைத்துனர் ராமன். I. C. S. அவர்களின் சிபார்சினால் விசாகப்பட்டினத்தில் இந்த உத்யோகம் கிடைத்தது. சம்பளம் 400 ரூபா. தம்பதிகளின் சந்தோஷத்திற்கு எல்லையேயில்லை.

நல்ல வீடொன்றைக் காற்றோட்டமான இடத்தில் அமர்த்திக்கொண்டு, குடிபோனார்கள். மாயவரத்திலிருந்து சமையல் வேலை செய்வதற்கு ஒரு பையனை அழைத்து வந்திருந்தபடியால் மற்ற வீட்டுவேலைக்கு ஒரு பெண் பிள்ளையும் ஒரு வேலைக்காரனும் அமர்த்தப் பட்டார்கள்.

ஒருநாள் மாலை 5 மணி. கிருஷ்ணன் ஆபீசிலிருந்து வீடு வந்து, டீ சாப்பிட்டுக்கொண்டே தம் மனைவியைப் பார்த்து, "என்ன பத்மா! நீ மிகவும் நாகரிகமான கோஷ்டியில் சேரப் போகிறாய். எங்கள் துரையின் மனைவி நம்மிருவரையும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை தேநீர் விருந்துக்கு அழைத்திருக்கிறாள்." என்றார்.

பத்மா—"அய்யோ. நான் வரவேமாட்டேன். எனக்கு டீ சாப்பிடுவது எப்படி யென்றே தெரியாது. அதெல்லாம் மன்னி சுசீலாவுக்குத் தான் பழக்கம். அப்புறம் சரோஜாவை என்ன செய்கிறது? யார் கவனித்துக்கொள்வார்கள் அவளை?" என்றாள்.

கிருஷ்ணனுக்குக் கோபம் வந்தது. "இந்தா பத்மா! இப்படியெல்லாம் நீ அசடுமாதிரி சாக்குச் சொன்னால், நாம் ஒரு நாளும் முன்னுக்கு வரமுடியாது. துரை தன்னுடைய வீட்டிற்கு நம்மைக் கூப்பிடுவது சாமானிய காரியமில்லை. என் வேலைக்கு அதனால் பிறகு நலம் ஏற்படலாம். உடனே மருதப்பனிடம் சொல்லிக் குழந்தைக்கு ஒரு ஆயா பார்த்து வரச் சொல்லு. ஸரோஜாவையும் நீயே வளர்த்தால் கெடுதியுண்டு. சில சமயங்களில் வேலைக்காரர்களிடம் விட்டுச் செல்ல உனக்கும் பழக்கமாக வேண்டும்" என்று சொல்லி எழுந்து போய்விட்டார்.

ஆறு மாதத்திற்குப்பிறகு பத்மாவைப் பார்த்தால் உங்களுக்கு அடையாளம் தெரியாது. சீர்காழி, மாயவரத்துப் பெண்ணல்ல, அவள். ஒரே நவநாகரிக மங்கை இப்பொழுது—விதம் விதமான ஆடை ஆபரணங்களும், புதிய அலங்காரங்களும் அவளுடைய இயற்கை அழகை முன்னிலும் அதிகப்படுத்திக் காண்பித்தன—விசாகப்பட்டினத்து முக்கிய ஆடவர், ஸ்திரீகளின் கோஷ்டியில் கிருஷ்ணனும், பத்மாவும் சேர்ந்தவர்கள். ஒருநாள் மாலை அவர்கள் வழக்கம்போல் வெளியில் சென்று திரும்பினர். காரைவிட்டு இறங்கியதும், போட்டிபோட்டுக் கொண்டு ஒரே ஓட்டமாகக் குழந்தை ஸரோஜாவின் பக்கம் இருவரும் சென்றனர். ஸரோஜா தூங்கினாள் "மருதீ! குழந்தை பால் சாப்பிட்டாளா? அழாமல் தூங்கினாளோ? அம்மா எங்கே யென்று கேட்கவில்லையே" என்று பத்மா மூச்சுவிடாமல் கேள்வி கேட்டாள். மருதி யாரு? அவள்தான் குழந்தையின் 'ஆயா' —ஆனால் ஆயாவென்று மருதியைச் சொன்னால் பொருந்தாது. அவளுக்கு வயது 17 தான்

TRADE MARK

தாய்மார்களே!

உங்களுடைய குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளை நீக்கவும் தடுக்கவும்

கிரைப்-விட்-டி

மிகவும் அவசியமானது

Distributors in Ceylon:-

LAJAPATHRAI STORES

25/¼ Dam Street, Pettah, COLOMBO

நிரம்பியிருக்கும். நிறையக் குழந்தைகளுடன் பிறந்தவள். ஆகவே சரோஜாவைக்கவனித்துக் கொள்ளவும், பக்ஷமாக நடத்தவும், எல்லா விதத்திலும் தகுந்தவள். வேலைக்கார மருதப்பனுடைய இரண்டாவது பெண். சற்று மாநிறமாகவும், சிரித்த முகத்துடனும் இருப்பாள். ரொம்பவும் புத்திசாலி. சுறுசுறுப்பாக இருந்ததால், குழந்தை வேலையுடனில்லாமல், பத்மாவுக்கும் அனேக விதத்தில் உதவி செய்வாள், துணிகளைத் துவைப்பது, இஸ்திரி போடுவது, ஸ்நானத்திற்கு ஜலம் போடுவது, கிருஷ்ணனின் அறைகளைச் சுத்தம் செய்வது, அவருடைய உடுப்புக்களைக் கவனித்து எடுத்து வைப்பது முதலான சில்லறை வேலைகளெல்லாம் மருதியைச் சேர்ந்தவை.

''பத்மா, என்ன இருந்தாலும் நீ கர்நாடக மனுஷிதான்! இவ்வளவு பொறுப்பான வேலைக்காரியிடம் குழந்தையை விட்டுப் போயிருந்தும் கூட, திரும்பிவந்ததும் நீ ஸரோஜாவிடம் எவ்வளவு கவலை காண்பிக்கிறாய்?—நாம் வெளியிற் சென்று திரும்பி வந்ததே பெருங்குற்றம் போல் நினைப்பதாகவன்றோ தோன்றுகிறது—என்ன மருதி! நீ என்ன சொல்கிறாய்?'? என்று விளையாட்டாகக் கிருஷ்ணன் கேட்டார். மருதிக்கு வெட்கத்தினால் முகம் சிவந்தது, பதில் பேசவில்லை. பத்மாவும், கிருஷ்ணனும் தங்கள் அறைக்குச் சென்றனர்.

''மை க்யா கரு கித்ஜாவூம்'' ஸைகல் பாடிய இந்தப்பாட்டைப் பத்மாவின் அறையிலிருந்து வரும் கிராமபோன் சங்கீதத்தில் கேட்க முடிகிறது. மருதி அந்த அறைக்கு வெளியில் உட்கார்ந்து ஏதோ தைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் மன நிலையும் இந்த வார்த்தைகளின் பொருளுக்குப் பொருத்தமாகத்தானிருந்தது. மருதப்பனுடன் ஒரு மணி நேரமாகப் போராடி, அதில் ஜயிக்க முடியாமற் களைத்துப் போய், கவலையுடன், தன் எஜமானியைத் தேடிவந்தாள் மருதி. சமயம் சரியில்லை யென்று தெரிந்து கொண்டாள். அப்பொழுதுதான், எஜமானரும், அம்மாளும் ஓய்வு எடுக்கும் நேரம். ஆகவே, கொஞ்சம் காத்திருக்கலாமென்று நினைத்து, ஏதோ பழைய சொக்காய் ஒன்றைச் சரிப்படுத்தித் தைத்துக் கொண்டே அறைக்கு வெளியில் உட்கார்ந்தாள். பாட்டின் சக்தியோ, அல்லது அவள் மனத்தை அழுக்கிய கஷ்டத்தின் சக்தியோ மருதிக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது. அடக்கமுடியாமல் விம்மி அழ ஆரம்பித்தாள், இவள் விசிப்புச் சத்தம் கேட்டதும், பத்மா கதவைத் திறந்து வெளியே ஓடிவந்தாள்.

பத்மா:— ''மருதீ-என்ன இது. ஏண்டி இப்படி அழறாய்! ஸரோஜா உன்னைக் கிள்ளி விட்டாளா?''

மருதி;— ''ஐயோ, அம்மா..........குழந்தை என்னம்மா செய்யும்...........எனக்கு............ நாளைக்கு.,...''மேலே பேச்சேயில்லை, அழுகைதான்.

உங்களுடைய குழந்தைக்கு இவ்வளவுதானா செய்யமுடியும்

இன்னும் நிரம்பச்செய்யவேண்டும். உங்கள் குடும்பம்—உங்கள் அருமைக் குழந்தைகள்-சுபிக்ஷமாக வாழ அடிகோல வேண்டும். உங்கள் பிள்ளைகள் படிக்கவும் பெண்கள் இன்புற்று மணம் செய்து கொள்ளவும்—எல்லாவற்றைக் காட்டிலும், உங்கள் மன அமைதிக்காகவும் இதைச் செய்யவேண்டும். அதை இப்பொழுதே செய்யவும். இத்தகைய பணிகளுக்கெல்லாம் ''நேஷனல்'' உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறது — — —

நேஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஃ ஃ ஃ

நெருப்பு, விபத்து மோட்டார், மற்றும் எல்லாவித இன்ஷ்யூரன்சுக்கும் சிறந்தது

நேஷனல் பயர் & ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா,

சென்னை கிளை ஆபீஸ்:

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனா பஜார் ரோடு,
எஸ்பிளனேடு

சப்-ஆபீஸ்கள்,

பங்களூர் & மதுரை

பத்மா:—"மருதி—அழாதே, உனக்கு என்ன வேண்டும்? அழாமல் சொல்லு. நான் உதவி செய்கிறேன். ஐயாவைக் கேட்டுப் பணம் வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன், முதலில், என்ன நடந்ததென்றுசொல்லு—" என்றாள்,

மெள்ள மெள்ள விஷயம் வெளியில் வந்தது,

பத்மா;— ஐயோ—நீ தேவடியாள் ஜாதியா! இதை முன்பே நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை?

மருதி:—என் தாயார்தான் தாஸிகுலத்தைச் சேர்ந்தவள். ஆனால் முறைப்படி என் தகப்பனைக் கலியாணம் கட்டிக்கொண்டு பிறந்த குழந்தைகள் நாங்கள் ஏழுபேரும். என் தகப்பனாரின் சம்பாத்தியம் எங்களுக்குப் போரவில்லை. என் அக்கா மனிசி ஆனதும், அம்மா ஒரு நாளைக்கு, ஒருத்தருக்கும் தெரியாமல், கோவிலில் பொட்டுக்கட்டிவிட்டாள்—அவளுடைய சம்பாத்தியமும் சேர்ந்து தான் நாங்கள் ஜீவிக்கிறோம். இப்பொ.........ஒரு மாசமா.........அய்யாவும் அம்மாவும் என்னை... ...." மருதிக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை, துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

பத்மாவுக்கு விஷயம் உடனே புரிந்துவிட்டது. "ஆனால் உனக்கு அதில் இஷ்டமில்லையோ?" என்றாள். மருதியின் முகத்தில் தோன்றியகோபத்தைப் பார்க்கவேண்டுமே...

பத்மா:—'மருதி, இங்கேயே இரு. இதோ வருகிறேன்' என்று சொல்லி உள்ளே சென்றாள். கிருஷ்ணன் விழித்துக்கொண்டிருந்தார். "பத்மா என்ன இது? யார் இப்படி அழுறது?" என்று கேட்டார்—விஷயத்தை அவரிடம் சொல்லி, மருதியைக் காப்பாற்றும்படி கேட்டுக்கொண்டதும், கிருஷ்ணன் துள்ளி எழுந்தார். "என்ன அனியாயம் இது? நான் அந்த மருதப்பனைக் கூப்பிட்டு இப்பவே உதைக்கிறேன். இஷ்டமில்லாதவளைக் கட்டுப்பாடு செய்ய இவன் யார்? மருதியைச் சமாதானப் படுத்து. இனி அவளை வீட்டுக்கே அனுப்ப வேண்டாம். நம்மிடமே இருக்கட்டும்." என்று பரபரப்புடன் வெளிக் கிளம்பினார். அறையின் வெளியில் நின்ற மருதிக்கு இவ்வளவும் காதில் விழுந்தது. கண்ணீர் மறைந்தது. கை கூப்பி, கிருஷ்ணன் இருந்த பக்கம் தலை வணங்கி அவரைத் தன் தெய்வமாகப் பாவிக்கலானாள்.

ஃ ஃ ஃ

அன்று முதல் மருதிக்குச் சாப்பாடு, இருப்பு படுக்கை எல்லாம் கிருஷ்ணன் வீட்டிலேயே நடந்தன. மருதப்பனும் அவளை இனித் தொந்தரவு செய்தால் தன் வேலைக்கு ஆபத்து நேருமென்று சும்மா இருந்துவிட்டான். மருதி இப்பொழுது சந்தோஷத்தினால் மிகவும் மாறிப் போனாள். கிருஷ்ணன் தனக்குச் செய்த பேருதவியை மறக்கவில்லை. தன் மனத்தில் நிரம்பியிருந்த நன்றியைப் பலவிதமான சிச்ருஷையினால் காண்பிக்கலானாள். கிருஷ்ணனுக்கு ஆபீஸ் அறை துடைப்பது, உடுப்பு எடுத்து வைப்பது, ஆபீஸ் பைல் முதலியவற்றைக் காரில் கொண்டுபோய்ச் சேர்ப்பது, காலையிலும், மாலையிலும் அவருக்கு டீ தயார்செய்து மேஜைமீது அலங்காரமாக வைப்பது, இவை போன்ற இன்னும் அனேக சிறிய வேலைகளையும், மருதி தானே உத்ஸாகத்துடன் செய்யலானாள். பத்மாவுக்கும், ஸரோஜாவுக்கும் நடந்த உபசாரங்களுக்கோ கணக்கேயில்லை. கிருஷ்ணனும் இந்தச் சிறிய காரியங்களையெல்லாம் கவனித்தார். மருதியினிடம் அவருக்கு பரிதாபமும், வாத்ஸல்யமும் நிறைய இருந்தன. அவ்வளவுதான்!

ஃ ஃ ஃ

பத்மாவுக்கு என்ன நேர்ந்தது? ஏனிப்படி ஸதா ஏக்கம்பிடித்து, உத்ஸாகமில்லாமல் திரிகிறாள்? மனத்துள் என்ன கவலை புகுந்துகொண்டு அவளை இப்ப்டி அழிக்கிறது? மருதியின்மேல் அவளுக்கு இருந்த அன்பெல்லாம் ஒரே வெறுப்பாக அல்லவோ மாறிவிட்டது! ஸரோஜாவையும் அவளிடம் அதிகமாக நெருங்க விடுவதில்லை. என்று முதல் இந்த மாறுதல்? 'நீ தேவடியாள் ஜாதியா? ஏன் எனக்கு முன்பே சொல்லவில்லை' என்றாளே—அன்று முதல்தான்—ஆனால் அச்சமயம் பத்மாவுக்குத் தன் புருஷனின் நற்குணங்களைப்பற்றியும்,

நரையை ஒழியுங்கள்!

நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலென் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

கேடரைன்

மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணாடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ,,** கெமிஸ்ட்ஸ்,

286, சைனா பஜார் ரோட், மதராஸ்.

மருதியை அவர் ஆபத்திலிருந்து காப்பாற்றிய தைப்பற்றியும் ஒரு பெருமைதான் இருந்தது. நாளடைவில் சந்தேகப்புழு அவள் மனத்தில் புகுந்து, அங்கே துளைக்க ஆரம்பித்து, அழகிய அவளது சுபாவத்தையே மாற்றிவிட்டது. "கிருஷ்ணன் என்மேல் முன்புபோல அன்பாக இருக்கிருரோ? ஸரோஜாவைக்கூட அவர் அதிகம் கவனிப்பதில்லை அல்லவா? மருதியிடம் ஏன் இப்படி அவருக்குத் திடீரென்று அனுதாபம்? இந்த மருதியும், நன்றி என்கிற உணர்ச்சியினுல் மட்டுமா அவருக்கு இவ்வளவு சிச்ருஷைசெய்கிருள்?" இவைபோன்ற எண்ணங்கள் பத்மாவை இரவில் தூங்கவிடுவதில்லை. தன்கணவனும், இந்தப்பெண்மருதியும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தன் சந்தேஹம் ஊர்ஜிதப்படும் வகையில் நடந்துகொள்ளவில்லையென்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும், பத்மா வீணுகத் தன்மனத்தைப் புண்ணுக்கிக் கொண்டாள். இந்தக் காரணமும், மருதியைத் தன்னுடைய பலத்த சிபார்சினுலேயே காப்பாற்ற அவர் முன்வந்தார் என்கிற காரணமுமே உடனே, அந்தப்பெண்ணை வேலையினின்று நீக்கிவிட அவள் நினைத்ததைத் தடுக்க ஏதுவாக இருந்தன. நாட்கள் சென்றுகொண்டிருந்தன. சந்தோஷமும், அமைதியும் எங்கேயோ பறந்துபோய் விட்டன.

ஃ ஃ ஃ

"அம்மா நம்பளுக்குப் பட்ணத்துக்கு மாத்தியாச்சு!" என்று சொல்லிக்கொண்டே சமையற்கார வைத்தி ஓடிவந்தான். பத்மா, படுக்கையில் படுத்து ஏதோ, பகற்கனவு கண்டு கொண்டிருந்தாள். இதைக்கேட்டதும் வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்தாள். "அம்மாடி, கடவுள்தான் இந்த மாற்றலைக் கொண்டுவந்து விட்டார். இந்தப் பிசாசு மருதியை இங்கேயே தொலைத்துத் தலை முழுகிவிட்டு நம்ம ஊரைப் பார்க்கப் போகலாம். என் சங்கடமெல்லாம் தீருவதற்குக் கடவுளே இந்த வழி காட்டினுர்" என்று தெய்வத்தை வணங்கினுள்.

ஃ ஃ ஃ

மாலை ஆறு மணி ரயிலில் புறப்பட ஏற்பாடாகிவிட்டது. அன்று வரையில் தானும் பட்டணம் போவதாக மருதி நினைத்திருந்தாள். காலையில் தன்னுடைய சம்பளத்தைக் கணக்குப்பார்த்து எஜமானியம்மா கையில் கொண்டு வந்து கொடுத்ததும் விஷயம் புரிந்தது. "அம்மா, என்னையும் அழைத்துப் போங்கள். ஐயாவைக் கேளுங்கள். இங்கே இருந்தால் என் தாயார் எனக்குப் பொட்டுக்கட்டி விடுவாள்; அம்மா...........ஒரு செட்டியார் ஒரு மாதமாக எங்கள் வீட்டில் வந்து காத்திருக்கிருனும்...........எனக்குப் பயமாக இருக்கிறது. அம்மா, உங்களுக்குப் புண்ணியமுண்டு என்மேல் சற்று இரக்கம் வையுங்கள்".........

லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

[ஹெட் ஆபீஸ்: லாகூர்]

நம்பிக்கையூட்டும் புள்ளி விவரங்கள்

எங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தும்திட்டசம்பந்தமான விசாரணைகள் வரவேற்கப்படும்.

1943-ஹூ புதிய பாலிஸிகள் 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்

முன் வருஷத்தைவிட கிட்டத்தட்ட (1 கோடி ரூபாய் அதிகம்)

★

அமுலிலுள்ள பாலிஸிகள் $10\frac{1}{4}$ கோடிக்குமேல்
மொத்த ஆஸ்தி $2\frac{1}{2}$,,
ஆயுள் நிதி $2\frac{1}{3}$,,

இந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

விவரங்களுக்கு எழுதவும்:-

பிராஞ் மானேஜர்
4/105, அரமனைக்காரத்தெரு,
ஜி. டி. மதராஸ்.

சென்னைக் கிளை ஆபீஸின்
விலாஸ மாற்றத்தைக் கவனியுங்கள்

C. R. சேஷன், M. A.,
பிராஞ்ச் மானேஜர், மதராஸ்.

என்று கதறினாள். பத்மாவின் மனம் துளியும் இளகவில்லை. மருதியின் வருத்தத்திற்கு அவள் வேறு காரணங்களை நிச்சயித்துக்கொண்டாள். அச்சமயம் கிருஷ்ணன் அங்கே வந்து "ஏன்? மருதி வரவில்லை? ஸரோஜாவை யார் பார்த்துக்கொள்வது? மருதப்பன் ஒருவேளை போகக் கூடாதென்று சொல்கிறானோ" என்று சிபார்சு செய்தது பத்மாவுக்குத் தன்னுடைய சந்தேகம் உண்மைதான் என்று ஊர்ஜிதப்படுத்தியது. அவள் ஒரே பிடிவாதமாக, மருதிக்கு இடங்கொடாமல், அவளைப் போகச்செய்தாள். கிருஷ்ணன் அந்தப் பெண்ணின் அனாதரவான நிலைமையைக் குறித்து எவ்வளவு சொல்லியும் இவள் காதில் ஏறவேயில்லை. கோபம்தான் மூண்டது.

ஃ ஃ ஃ

மாலை ஆறு மணிக்குப் பிளாட்பாரத்தில் ஒரே கூட்டம். மழை ஓயாமற் பெய்தது. சிநேகிதர்கள் அனைவரும் கூட்டமாக வந்து பத்மாவுக்கும், கிருஷ்ணனுக்கும் மாலை போட்டு உபசாரம் சொல்லி, வழியனுப்பினர். பத்மாவுக்கு மனத்தில் நிம்மதியும் சந்தோஷமும் குடிகொண்டிருந்தன. எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டாள். பிளாட்பாரத்துக் கோடியில் ஒரு கம்பத்தில் சாய்ந்த வண்ணம், கொட்டும் மழையையும் பாராட்டாமல், கண்களில் நீர் ஆறாகப் பெருக இவர்களையே உற்றுநோக்கி நின்றுகொண்டிருந்த மருதியை, அவள் கவனித்தும், பாராததுபோல் முகத்தைத்திருப்பிக் கொண்டாள். அருகில் அழைத்து அன்பாக ஒரு வார்த்தை சொல்ல அவளுடைய மனத்தில் தாராளம் இல்லை. ரயில்புறப்பட்டது. "பத்மா! கொஞ்ச நாளாக உனக்கு விசாகப்பட்டணம் ஒத்துக்கொள்ளவில்லையென்று நினைக்கிறேன். எப்பொழுதும் சோர்ந்தாற்போல இருந்தாய். இன்றுதான் உன் முகத்தில் சந்தோஷக் குறியை நான் பார்க்கிறேன்." என்று கிருஷ்ணன் அன்புடன் சொன்னார். பத்மாவுக்கு ஏன் வெட்கம்? முகமெல்லாம் சிவந்துபோயிற்றே? மனத்தில் இடங்கொடுத்த சில ரகசிய எண்ணங்கள் அவள் நினைவில் தோன்றி வாட்டின.

ஃ ஃ ஃ

பதினைந்து வருஷங்கள் கழிந்துவிட்டன. மறுபடி விசாகப்பட்டினத்திற்கே மாற்றி வந்துவிட்டார் கிருஷ்ணன். கடைத்தெருவில் ஒரு துணிக்கடைக்கு முன் நிற்கும் 'காரில்' இருப்பதுதான் கிருஷ்ணன், அவர் மனைவி பத்மா, அவரது மகள் ஸரோஜா-"ஸரோஜ்! உனக்குப் பிடித்த மாதிரி நீயே ஒரு புடவை பார்த்து எடுத்துக்கொள்ளு. எனக்குச் சிரமமாக இருக்கிறது, நான் கடைக்குள் வரவில்லை" என்று தன் பெண்ணைப் பார்த்துப் பத்மா சொல்லுகிறாள். ஸரோஜா காரிலிருந்து இறங்கி, தந்தையுடன் கடைக்குப்போகிறாள். பதினைந்து வருஷங்களுக்குமுன்பு நாம் பார்த்த பத்மா, இந்த ஸரோஜாவைப்போலவேதான் இருந்தாள், இல்லையா? இப்பொழுது காரில்

மேதாஸ்

மஸ்தானா மாத்திரைகள்

சிறந்த டானிக்

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை
இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு,
தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல்,
காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை.

அமர்ந்திருக்கும் 35 வயதுடைய பெண்மணிக்கும் அந்தப் பத்மாவுக்கும் எவ்வளவு வித்தியாசம்? பத்மா கண்ணை மூடிக்கொண்டு, வழக்கம்போல் பழைய ஞாபகங்களில் மனதைச் செலுத்தினாள். மனம் எங்கெல்லாமோ சென்றது. பாவம் மருதிக்குப் பிறகு, என்ன நேர்ந்தது? இப்பொழுதுஉயிருடன் இருக்கிறாளோ? எங்கே இருப்பாள்............?''

''அம்மா என்னைத் தெரியுதுங்களா?''-பத்மா திடுக்கிட்டுக் கண்ணை விழித்தாள். காரின் சமீபம் ஒரு குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு நிற்கும் பெண் யாரு? மருதியோ? அவளுடைய ஆவியோ? இப்பவும் இவள் எவ்வளவு அழகாக இருக்கிறாள்—''உங்களைக் காரில் பார்த்ததும் அடையாளம் புரியவில்லை. ஸரோஜம்மா நடந்து செல்வதைப் பின்புறம் பார்த்ததும் நீங்கள்தானென்று ஒரு நிமிஷம் பிரமித்துப் போனேன் அம்மா—எப்படி உங்க அச்சாக இருக்கு''—

''மருதி! நீயா—எனக்கு நம்பவே முடியவில்லையே. நீ எங்கே வேலை செய்கிறாய்? இது யாருடைய குழந்தை?'' என்று பத்மா என்னென்லாமோ பேசினாள்.

மருதி முதலில் பதில் சொல்லவில்லை. துக்கமாகச் சிரித்தாள். சற்று நேரத்தில் சமாளித்துக்கொண்டு ''இது நம்ப பிள்ளைதாம்மா—அதோ பாருங்க; எதிர் சரகில் அந்த மெத்தை வீடு என்னுடையது தான். இது எனக்கு 5-வயது பிள்ளை. 4 பெண்கள் இருக்கின்றனர் எனக்கு'' என்றாள்.

பத்மா நிமிர்ந்து பார்த்தாள். எதிரே அழகிய சிறிய மெத்தை வீடொன்று தென்பட்டது. இரண்டு பெண் குழந்தைகள் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தன. வீட்டில் ஒரு புறம் ''மருத நிலையம்'' என்கிற பெயர் தென்பட்டதும், பத்மாவுக்குத் தன் நெஞ்சில் ஈட்டி பாய்ந்ததுபோன்ற உணர்ச்சி உண்டாயிற்று. ......ஐயோ, மருதியின் கதி இப்படியா ஆயிற்று? தானல்லவோ இதற்கெல்லாம் காரணம். கண்களில் நீர் சோர்ந்து பார்வையை மறைத்தது. ''மருதி, உன்.........உன்.........'' மேலே பேசித் தெரிந்துகொள்ள விரும்பியதை அவளால் சொல்ல இயலவில்லை. மருதிக்கு விஷயம் உடனே புரிந்துவிட்டது. அவள் சிரித்தாள். ''செட்டியார்......தாம்மா......முதலில்'' என்று ஒரேவார்த்தையாக அவள் விளங்க வைத்தாள். பத்மா அவள் முகத்தை உற்று நோக்கினாள், மருதியின் மனதை அவளால் அறிய முடியவில்லை. . . . ''ஆ! அதோ ஐயா திரும்பி வருகிறார். ஸரோஜம்மா எத்தனை அளகாக இருக்கு......நான் போரேம்மா...... ஐயாவைப் பார்க்க எனக்கு வெட்கமாக இருக்கு'' என்று சொல்லி மருதி ஒரே பாய்ச்சலாக வீட்டிற்குள் ஓடி மறைந்தாள்.

''அம்மா, அம்மா! இந்தப் பித்தாபுரம் புடவையைப் பாரேன். இதை வாங்கட்டுமா? காலேஜிக்கு உடுத்திக்கொண்டு போனால் எவ்வளவு நன்றாயிருக்கும். இதன் ஜரிகை கண்ணைப் பறிக்கிறதே'' என்று ஸரோஜா ஓடி வந்தாள்.

''எனக்கென்னவோ உடம்பு ஒருமாதிரியாக இருக்கு. இதையே வாங்கிக்கொள்ளு. சீக்கிரம் வீட்டிற்குப் போவோம், வா'' என்றாள் பத்மா.

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்

இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்.

1943 டிஸம்பர் 31-ஆந் தேதி முடிய வருடத்தின் புதிய பாலிசிகள்
ரூ. 5 கோடிக்கதிகம்

ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி ....ரூ. 5,39,00,000
அமுலிலுள்ள மொத்தவியாபாரம் ....ரூ. 24,82,00,000

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும்:—

மதராஸ் பிராஞ்சு :

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொசைடி
லிமிடெட்,

107, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. மதராஸ்.



கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஸ்நானம் சாவகாசமாகச் செய்து இன்புற வேண்டிய ஓர் முக்கிய காரியமாயிருந்தது. கல்லில் செதுக்கின மஞ்சத்தின்மீது இராஜவம்ச ரமணிகள் சொகுசாகச் சாய்ந்துகொண்டு வீற்றிருக்கச் தாதிமார்கள் ஜலத்தில் ஊறவைத்துச் சுத்தமான நுரை வரும்படி செய்துள்ள ஸோப்புக் காய்கள் தேய்த்து அவர்களை ஸ்நானம் செய்வித்து வந்தனர். இன்றோ, இன்னும் மேலானதும் அதிக ஸௌகரியமுமான வழிதான் எல்லோருக்கு மிருக்கிறதே—அதாவது ஹமாம் ஸோப்பு! ஹமாமின் நறுமணங்கமழும் ஏராள நுரையானது மயிர்க்கண்களினுள் ஊடுருவிப் பாய்ந்து நன்கு சுத்தம் செய்வதோடு களைப்பை நீக்கி மட்டற்ற உற்சாகமும் சுகமும் அளிக்கவும் செய்கிறது.

ஹமாம்



உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா

19, வாணியவீதி, P. B. நெ. 31, சென்னை

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்

பதினெட்டாம் பெருக்கு

தி. சே. சௌ. ராஜன்

ஆடி பதினெட்டு தமிழ் நாட்டிற்கென ஒரு தனிப்பட்ட திருநாள். பண்டைக் காலத் தமிழ்மக்கள் வீரம் செறிந்தவர்கள். வீரத்தன்மை ஆண்மைக்கு அறிகுறி. தமிழ்ப் பெண்மணிகள் வீரர்களை மணம் புரிந்து கொள்வதில் ஆற்றலுள்ளவர்களாகவிருந்தார்கள்; போர்ப் பண்ணை விவசாயப் பண்ணை இரண்டிலும் திறம்பட வாழ்ந்தவர்கள். நாட்டை இழந்து,வீரம்குன்றி அடிமைவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் இந்நாட்டில்கூட பழைய சிற்சில, வழக்கங்கள் அடிப்படையான கொள்கைகள் மறந்துவிடப்படினும், வெறும் சடங்குகளாகப் பின் பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஆடி பதினெட்டுக் கொண்டாட்டமும் ஒன்று. இந்தத் திருவிழா சாஸ்திர, புராண, இதிகாசங்களை ஆதாரமாகக் கொண்டதன்று. அசுரர்கள் அழிந்த கதையுமன்று. செய்நன்றி மறவாத தமிழர், தமது வாழ்விற்கும், செல்வத்திற்கும் இன்றியமையாத சில சாதனங்களை மறவாது கொண்டாடும் ஓர் பண்டிகை. தமிழ்நாட்டில் நீர் வளம், நிலவளம் பொருந்திப் பொன் விளையும் புனித பூமி எனப் பெயர் பெற்ற சோழநாட்டின் ஒப்பற்ற செல்வம் பொன்னி என்று பெயர் பெற்ற காவிரி ஆறு. சோழ நாடு என்ருல் காவிரி என்றே கூறலாம்.

குடகுச் சீமையில் மலைச்சிகரத்தில், தவம் புரிந்த அகத்தியன் கலசத்தை, காக்கை ஒன்று உருட்ட அப்பெரியாரின் தவநீர் வற்ருத ஓர் ஆருகப் பெருகியதாகக் காவிரிப் புராணம் சொல்லுகிறது. கதை ஒருபுறமிருக்க, காவிரி குடகில் உற்பத்தியாகிறது ஓர் உண்மை. இன்னும் அங்கிருந்து புறப்பட்டு, ஐந்நூறு மைல் தூரம் ஓடி வங்காளக் குடாக்கடலை அடைய முயன்றுகொண்டிருக்கிறது. நற்சுவையும் வளப்பமும் பொருந்திய இந்த நீரை ஒரு சிறிதளவேனும், உவர் நீரோடு கலக்க வொட்டாமல் சோழநாட்டினர் வெகுகாலமாக உறிஞ்சி உயிர்வாழ்ந்துகொண்டு வருகிருர்கள். இருகரையும் புரண்டு ஓடும் வெள்ளப்பெருக்கு வெகு ஆண்டுகளாக ஆடி பதினெட்டு அன்று கண்கொள்ளாக் காட்சியையும் ஆனந்தத்தையும் மக்களுக்கு அளித்து வருகிறது.

ஆனந்தக் கொந்தளிப்புடன் குதித்தோடும் நதியில் ஆண் பெண் அனைவரும் புனித நீராடி, காவிரி அம்மனுக்குப் பூஜைசெய்து, உணவுபடைத்து, கோடி உடுத்தி, பலகாரங்கள் சமைத்து உண்டு கொண்டாடுகிருர்கள். இதில் காவிரிக்கரைகளிலுள்ள தெய்வங்களும் பங்கெடுத்துக்கொள்கின்றன. மனிதரால் கொண்டாடப்பட்ட தெய்வங்களும் இதில் பங்கெடுத்துக்கொள்வது முறை தானே. ஆகையால் சோழநாட்டில் காவிரியின் இரு கரையிலுள்ள க்ஷேத்திரங்களினின்று மூர்த்திகள் புறப்பட்டு, மக்களோடு மக்களாக அத்தெய்வங்களும் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு, இன்புறுகின்றன. நதிகளில் ஜீவநதிகளென்றும், காட்டாறுகள் என்றும் பாகுபாடு நமது நாட்டில் உண்டு. தமிழ்நாட்டு ஜீவநதிகளில் பெருமை பெற்றது காவிரி நதி. இந்நதி கடலுடன் சேருமிடம் பண்டை நூல்களில் கூறப்பட்ட காவிரிப்பூம்பட்டினமென்ற பெருந் துறைமுகம். அத்துறைமுகம் சோழர்களோடு மறைந்துவிட்டது. காவிரி மட்டிலும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆடி பதினெட்டன்று ஆற்றில் வெள்ளப்பெருக்கு இருந்தாலும் இல்லாவிடினும் பதினெட்டு விழா நடந்துவருகிறது. காவிரிக்குப் பூஜை அளிப்பது தாங்கள் நதிக்கு அளிக்கும் செய்நன்றியென மக்கள் நினைக்கிருர்கள். மனிதர்களின் சேர்க்கையினுல் மனித உலகம் பெருகி வளர்கிறது. ஆற்று நீரும், கடல் நீரும் சேர்வதனுல் ஜலராசிகள் உலகத்திற்கு எவ்விதம் பயன்படுகிறதென எனக்குத் தெரியாது. ஆனுல் தொன்று தொட்டு நமது நாட்டில் ஆறுகள் பெண்வர்க்கமென்றும் கடல் ஆண்வர்க்கமென்றும், பெண்ணுகிய நதி ஆணுன சமுத்திர ராஜனை அடையும்பொருட்டு விரைந்து ஓடுகிறதென எண்ணம். காவிரிஅம்மன் சோழநாட்டின் தாய் என்பதற்கு ஐயமில்லை. தமிழ் மக்கள் அனைவரும் அதே உணர்ச்சியுடன் கொண்டாடுகிருர்கள்.

காவிரி நதிக்கு வெகுதூரம் தள்ளி வடக்கிலும், தெற்கிலும் உள்ள மக்களும் இந்த விழாவில் பங்கெடுத்துக்கொள்ளுகிருர்கள். தங்கள் கிராமத்தில் தங்களது இனத்தினர் அல்லது குடும்பத்தாருக்கென வைத்திருக்கும் சுவாமி, பெட்டிக்குள் பலமாதங்களாக உறங்கிக்கொண்டிருக்கும். பதினெட்டிற்கு முதல் நாள் அந்தந்த ஜாதியார்கள் ஒருங்குகூடி, பெட்டிக்குள்ளிருக்கும் சுவாமி

யைப் பெட்டியோடு எடுத்துக்கொண்டு, மேளம் தாளம், தாரை, தப்பு, கொம்பு, மணி, கரகம் இவைகளோடு புறப்படுவார்கள். பழைய சோழநாட்டு நாகரிக சின்னங்களான உடை, நடை, அலங்காரம் எல்லாம் சில சித்திரங்களில் கண்டிருக்கிறேன். பதினெட்டு அன்றுதான் அந்தப் புராதன உலகம் உறக்கத்தினின்று விழித்தெழுந்ததுபோல, காட்சி அளிக்கிறது. தனித்தனிக் கூட்டங்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் சுமார் ஐம்பது பேர்களிருக்கலாம். பெரும்பாலோர் ஆண் மக்கள். வயதுவந்த இளைஞர்கள். அலங்காரம் செய்யப்பட்ட குதிரையொன்று. போர்க்கோலம் தரித்து, கச்சை கட்டி, வாள் பிடித்து கேடயம் தாங்கி, மிடுக்குடன் குதிரையைச் சுற்றி நடக்கும், சோழநாட்டின் படையினர் சந்ததியார்கள், இவர்கள் புடைசூழ ஐம்பது, அறுபது மைலுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்து கால் நடையாக பிரயாணம் செய்து பதினெட்டன்று முற்பகலில் காவிரியை அடைந்து, தங்கள் பெட்டிக்குள்ளிருக்கும் சுவாமிக்கும் நீராட்டிப் புது-வேடங்கள் மீண்டும் புனைந்து, கரகக் கலசத்தில் காவிரி நீரை எடுத்துத் தலையில் தாங்கி, ஆடல் பாடல்களுடன் திரும்புகிறார்கள். நானிருப்பது அகண்ட காவிரிக் கரையில் ஒரு குக்கிராமம். ஒரு சிறிய மலைக் குன்று சுமார் நானூறு அடி உயரமிருக்கிறது. அது காவிரி நதியை வந்து மோதுகிறது. இந்தத் தடையால் வடகிழக்கில் ஓடும் ஆறு தென் கிழக்கில் திரும்புகிறது. தஞ்சை ஜில்லாவிற்கெனவே இம்மலை காவிரி நதியைத் திருப்பிவிடுகிறதென்று சொல்லவேண்டும். திருச்சி ஜில்லாவிற்கு வட எல்லையாகவிருக்கும் கொல்லிமலை அடிவாரம் கிராமங்களிலிருந்து அநேகர் இந்த யாத்திரை பல வருடங்களாகச் செய்து வருகிறார்கள். சுமார் ஐம்பதினாயிரம் ஜனங்களுக்கு மேல் கூடுகிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியும், ஆரவாரமும் அளவிடமுடியா. திரும்பவும் கூட்டம் கூட்டமாகவே புறப்பட்டுச் சுவாமியுடனும் கரக கலசங்களுடனும் போய் வீடு சேர்கிறார்கள். போகும் வழியில் எங்கள் ஊருக்கு ஐந்துமைல் வடக்கில் இவர்கள் ஒரு நாள் தங்குகிறார்கள். அந்த ஊருக்குச் சோழன்பட்டி என்று பெயர். அந்த ஊரில் எந்தச்சோழன் எந்தக் காலத்தில் அரசு புரிந்தான் என்பதற்கு ஸ்தல புராணம் கிடையாது. அல்லது அரசுபுரியாமல் தெய்வமாகச் சோழனுக்குக் கோயில் உண்டாயிற்று என்பதும் சொல்லமுடியாது. ஊர் மிகவும் கேவலமான ஏழைக் குடி. சோழன் கோவிலும் அப்படியே. ஆனால் பதினெட்டுக்கு மறுநாள் அந்த ஊரிலுள்ள சோழன் கோவிலுக்கு ஒரு தனி மகிமை வந்துவிடுகிறது. காவிரியைக் கண்டு களித்துத் திரும்புபவர்கள் சோழன் கோவிலில் தரிசனம் செய்துவிட்டுப் போகிறார்கள். ஆனால் அன்றையதினம் சோழன் கோவிலுக்கு முன்பு பிசாசு ஆட்டம் நடைபெறுகிறது. எவரெவர்களுக்கு, ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, பிசாசுகள் அவரவர்கள் உடலிற்குள் திருட்டுத்தனமாக வெளிவராமல் ஒளிந்துகொண்டிருக்கின்றனவே அவைகள் அன்று அக்கோயில் முன்பாக ஆடத் துவக்கிவிடுகின்றன. ஒரே சமயத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் பேய் பிடித்ததுபோலத் தலை விரித்தாடுகிறார்கள். இதைப் பிசாசு ஆட்டத்திருநாள் என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் காட்சியைப் பார்க்கும் வடிகட்டின நாஸ்திகன்கூட பிசாசு என்பது ஓர் உண்மையென நம்புவதற்கு இடமுண்டாகும். பிசாசு மனிதர்களிடத்திலிருக்குமானால் குறிப்பிட்ட அன்றைத் தினத்தில் அந்த இடத்தில் வெளிவரவேண்டிய அவசியமென்ன, சோழராஜாகோவிலுக்கும் பிசாசிற்கும் என்ன உறவு, இவைகளுக்கெல்லாம் காரணம் சொல்லவேண்டும்.

பிசாசு என்பது மனிதனை விட்டுத்தனியாக இருப்பதில்லை. அப்படி ஒருசமயம் தனியாக இடிந்த கோவில், பழைய புளியமரம் இவைகளில் வசித்தாலும்கூட எந்த மனிதனை எப்பொழுது பிடிக்கலாமெனக்காத்துக்கொண்டிருப்பதாக நம்மவர்களில் பெரும்பாலோர் எண்ணுகிறார்கள். உடுக்கு அடித்துப்பிசாசை மனிதனுடலினின்று எழுப்புவதும், அதைப் பிடித்தவனிடமிருந்து துரத்தி ஓட்டுவதும், அதற்கு அடையாளம் காண்பித்து ரூபிப்பதும் நமது கிராமங்களில் தினந்தோறும் நடைபெறும் சம்பவம். பிசாசு என்பது கிடையாது என்று நவீன நாகரிகமுள்ளவன் கிராமங்களில் சொல்வானானால் அவன் பைத்தியக்காரன் என்றுதான் கிராமவாசிகள் எண்ணுகிறார்கள். அன்னியர்களுக்கு நாமும், நமது நாடும் அடிமைப்பட்டு ஆடிக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்ச்சி அவர்களுக்குக் கிடையாது. ஆனால் பிசாசுகளுக்கும், பேய்களுக்கும், நாம் பாத்திரமானவர்கள் என்பது அவர்களின் உண்மை உணர்ச்சி. எங்கள் ஊரில் பேய் ஓட்டுவதற்கு நபர் ஒன்றுக்கு ஐந்து பணம். ஆனால் சோழன்பட்டியில் பணம் ஒன்றும் கொடாமலே பேய் வெளிவந்து ஆடுகிறது. அதுவும் பதினெட்டு மறுநாள் மாத்திரம். ஒருகால் சோழராஜனுக்குப் பேய்பிடித்து அந்த ஊரில் நீங்கியிரு

க்குமோ வென்பது எனக்கு ஒரு சந்தேகம். சோழராஜனுக்குப் பிர்மஹத்தி பிடித்ததாகவும் திருவிடைமருதூரில் கோவிலின் கீழக் கோபுரவாயிலில் தனக்கு இருப்பிடம் கண்டு, அரசனைவிட்டு அகன்றதாகவும் கதை. கோவிலும் இருக்கிறது. பிர்மஹத்தியும் இருக்கிறது. ஆனால் சோழன் அடியோடு மறைந்துவிட்டான். அதேமாதிரி ஒரு சோழனைப் பிடித்த பிர்மஹத்தி திருவிடமருதூரில் சிறைப்பட்டது. மற்றொரு சோழனைப் பிடித்த பேய் சோழன்பட்டியில் அவனை ஏன் விட்டிருக்கக்கூடாது? அப்படி விடப்பட்ட பேய் வருஷத்திற்கொருமுறை அங்கு வருபவர்களை ஏன் ஆட்டுகிறதாக வைத்துக்கொள்ளமுடியாது. பேயின் போக்கு ஓர் வரம்பிற்கு உட்பட்டதாக இருக்காது. அப்படி நிபந்தனைக்கு உட்பட்டால் அது பேயன்று. ஆகையால்பேய்க்கூத்திற்கு யாரால் காரணம் கண்டுபிடிக்க முடியும்?

ஆனால் உலகில் எல்லா மக்களையும் ஒரு பெரும் பேய் ஆட்டிவைக்கிறது. ஆங்கில அமெரிக்க, ருஷிய, சீன, ஜர்மானிய, ஜப்பானியர்களைக்கூட ஆட்டிவைக்கிறது. அப்பேய்தான் மனம். மனம் இல்லையேல் பேயும் இல்லை. மனிதனுக்கு உண்டாகும் எண்ணங்கள் பக்குவமடைந்து, பரிசீலனை செய்யப்பட்டு, விவேகத்தால் பாகுபாடு அடைந்து வெளிவருமானால் தெய்வத் தன்மையை அவனிடம் காண்கிறோம். கோபம், ஆசை, சுயநலம், அகங்காரம், திமிர், இவைகளால் மனம் பீடிக்கப்பட்டு, உண்மைக்கு எதிராகப் போராடினால் அதுதான் பேய். பேயும் தெய்வமும் மனிதன் உள்ளத்திலிருந்து தான் வெளியாகின்றன. அதன் செய்கை காரணமாகப் பேயும், தெய்வமாக மாறுகிறது.

சரித்திரபூர்வமாக சோழன் மறைந்துவிட்டான். சோழநாடு என்பது எல்லையற்ற ஓர் எண்ணம். காவிரிநதி ஓடும் வரையில் சோழன் ஞாபகம் ஏழைமக்களின் மனதை விட்டு அகலாது. ஆங்கில அரசாங்கம் என்கிற உணர்ச்சி பதினெட்டாம் பெருக்கைக் கொண்டாடும் மக்கள் மனதில் கிடையாது. அவர்களில் பெரும்பாலோர் எழுத்து வாசனை அறியாதவர்கள். உலகத்தில் ஓர் கடும்போர் நடக்கிறதை அவர்கள் அறியார்கள். எந்தச் சோழன் காலத்து உத்தரவோ அதை நடத்துகிறவர் யார், எவர், எங்கிருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால் காவிரி நதிக்குத் தங்களது நன்றியைச் சோழராசாவின் மூலம் செலுத்திவருகிறார்கள். மறைந்துபோன சோழன் ஒருவன் திரும்பி வருவானாகில், தனது மக்களும், தனது சீமையும், உருமாறாது, அப்படியே இருப்பதைத் தான் காண்பான். அதைத்தான் நானும் கண்டேன். இருநூறு வருஷகாலமாக ஆட்சி புரியும் அரசாங்கம் இவர்களை ஏன் தொடக் கூட இல்லை. இவர்கள் யாருடைய பிரஜைகள்? அவர்களைக் கேட்டால் அவர்கள் தாங்கள் சோழராஜா பிரஜைகள் என்றுதான் இன்னும் சொல்லுவார்கள். அந்த ராஜாவிற்காகத்தான் காவிரி இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறதென்றும் சொல்லுவார்கள். பேய்கள் மூலமாகவும், பிர்மஹத்திகள் மூலமாகவும் அரசு செலுத்தும் சோழர்களின் சிரஞ்சீவித் தனத்தை என்னவென்று சொல்லுகிறது? நமது கல்லூரிகளில் சரித்திரம் படிக்கும் மாணவர்களைத்தான் கேட்கவேண்டும்.

பதினெட்டாம் பெருக்கில் இன்னும் ஒரு பழைய வழக்கம், முற்றிலும் மறைந்துவிடாமல், இரண்டோரிடங்களில் தலைகாட்டிக் கொண்டிருக்கிறது. வருஷத்திய பழைய சட்டங்களை (பனை ஓலையில் எழுதப் பழகின எழுத்துக்கள் அடங்கியவை) அலங்காரமாக ஓர் சிறிய தேர்கட்டி அதில்வைத்து அவற்றை காவிரியாற்றில் மிதக்கவிட்டு விடுவது. பழைய பனைஓலைச்சட்டங்களைப் பழைய காகிதத்தைப்போல் தற்காலம் விலை கொடுத்து வாங்குவோர் கிடையாது. பனை ஓலைக்கு நாட்டில் பஞ்சம் கிடையாது. ஆகையால் எழுதப்பழகிய ஏடுகளை ஒன்று எரிக்கலாம் அல்லது ஆற்றில் மிதக்கவிடலாம். ஆற்றில் மிதக்கவிடுவதற்கு ஓர் நாள் வேண்டுமே. தமக்கு அறிவை ஊட்டுவதற்குக்காரணமாக இருந்து, தமது வேலையைச் செய்துமுடித்த பழைய ஓலைகளை அன்புடன் கொண்டாடி மனிதனுடைய உடல் எரிந்த சாம்பலை எவ்விதம் புனிதநதிகளில் கரைத்துவிடுகிறார்களோ அதுபோல இறந்துபோன ஓலைகளைக் காவிரியில் மிதக்கவிடுகிறார்கள் என்பது எனது கற்பனை. யுத்தத்தின் காரணமாக இந்த ஓலைகளுக்கு இன்னும் பஞ்சம் ஏற்படவில்லை. எழுதுவதற்குப் பவுண்டன்பேனா தேவையில்லை. இங்க் வேண்டாம்; வியர்வையால் கெட்டுவிடாது. செல்லரிக்காமலிருந்தால் நூற்றுக்கணக்கான வருஷங்கள் உயிருடனிருக்கும். தேவையானால் அதில் அச்செழுத்தும் அடிக்கலாம். நல்லவேளையாக இந்தப் பழைய வழக்கம் அநாகரிகமாகக் கருதப்பட்டதாலோ, அல்லது மேல் நாட்டில் பனைமரங்கள் இல்லாதகாரணத்தாலோ,காகிதத்திற்கு வந்திருக்கும் ஆபத்து இப்பொழுது பனை ஓலைகளுக்கு வரவில்லை. மனிதனின் எண்ணங்களின் உரு எழுத்துக்கள். ஆகை

22-ம் பக்கம் பார்க்க

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

சுமார் இரண்டு வாரங்களுக்குமுன் நானும் அம்மாஞ்சியும் ஒரு சங்கீதக் கச்சேரிக்குப் போயிருந்தோம். அன்றையதினம் நம்முடைய வித்வான்களில் பிரபலமானவர் ஒருவர் கச்சேரிசெய்வதாக இருந்தது. கச்சேரி மாலை 5½-மணிக்கு நடைபெறும் என்று அறிவிப்பு. ஆனால் 6½-மணிவரையில் வித்வானைக் காணோம். விசாரித்ததில் அவர் ஏதோ வெளியூரிலிருந்து 5½-மணிக்கு வரும் ரயில் வண்டியில் வருவதாகவும், கச்சேரிக்கு ஒரு மணி நேரம் தாமதமாக வருவாரென்றும் அறிந்தோம். அப்படியே சம்பவித்தது. வித்வான் அலுத்து சலித்து ஆரவாரத்துடன் வந்தார். அப்படியே தேக சிரமத்தாலும் ரயில் பிரயாணத்தால் விளைந்த சாரீர அசௌக்கியத்தாலும், வித்வானுக்கு ஒன்றும் ஓடவில்லை. கச்சேரி ரக்தி கட்டாமல் கஞ்சி வழிந்தமாதிரி நடந்தேறிற்று. பக்கவாத்தியக்காரர் நல்ல சம்பிரதாயமான பிடில் வாத்தியக்காரர். விஷப்பரீக்ஷைகளில் இறங்க மிகவும் பயந்தவர். ஆகவே அவர் தீர்க்கமாகவும், ரக்தியுடனும், ஸுஸ்வரமாகவும் வாசித்ததில் வித்வானுக்கு இடைஞ்சல் ஏற்பட்டது. வித்வான் பக்கவாத்தியக்காரரைச் சினந்து எறிந்து கடித்து உதறினர். அம்மாஞ்சியும் நானும் ஒருநாளும் சிரியாமல் திருநாளில் சிரித்து, திருநாளும் வெறுநாளாச்சுது என்பதுபோல் வீடுவந்து சேர்ந்தோம்.

"சபைகளில் நடக்கும் கச்சேரிகளுக்குப் போகவேண்டாம் என்று நான் சொல்லியும் நீ கேட்காமல் என்னையும் இழுத்துக்கொண்டுபோய் இந்தமாதிரி முகத்தில் கரியைத்தீற்றிக்கொண்டு வந்தாயே, உன் சபல புத்திக்கு நான் எவ்வளவென்று வருத்தப்படுவது!" என்றுன் அம்மாஞ்சி, வாஸ்தவம். காற்றுடிபோல் பறந்து, பம்பரம்போல் சுற்றிவரும் வித்வான்களை நம்பி எந்தக் கச்சேரிக்குப்போவது? நல்லநாளிலேயே நாழிப்பால் என்பதுபோலும், ஏற்கனவே துர்ப்பலை, அதிலும் கர்ப்பிணி என்பதுபோலும், சாதாரணமாகவே சாரீர சம்பத்துக் குன்றியிருக்கும் நம் கர்னடக சங்கீத வித்வான்கள் ஸதா திக்விஜயம்செய்துகொண்டு, சங்கீதத்தில் நிசிராத்திரி சூர்யநமஸ்காரம் செய்ய முயன்றால் காரியம் நடக்குமா? எப்படி நடக்கும்? பாடாந்தரம் குறைந்து, மனோபாவம் குன்றி, சாரீரம் வரண்டுபோய், பக்கவாத்தியக்காரர்களுடன் முஷ்டியுத்தம்செய்து, தங்களுக்கு அபகீர்த்தி சம்பாதித்துக்கொண்டு, கர்னடக சங்கீதத்துக்கும் க்ஷீண திசை விளைவிக்கிறார்கள். இதனல் விளைவது என்ன வென்பதை அம்மாஞ்சியின் வாக்குக்களால் தெரிவிக்கிறேன். "சபைகளில் நல்ல ஸதஸ் என்பதைக்கூட்டுவது அஸாத்தியமாய்விடுகிறது. முதலாவது, வித்வான்களின் போக்கு இவ்வளவு நம்பிக்கையற்று இருப்பதால் பணத்தில் சிறிது லக்ஷியம் இருப்பவர்கள் கச்சேரிகளுக்கு வர அச்சப்படுகிறார்கள், இரண்டாவது, துணிந்து வருவோமென்றாலும், டிக்கட் வாங்கினல் இடம் கிடைப்பது பகீரதப்பிரயத்தனமாயிருக்கிறது. ஐந்து ரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கினல் ஒரு ரூபாய் குசர் கொடுத்து ரிஸர்வ் செய்யவேண்டிவருகிறது. இந்தப் புது ஒழுக்கம் எதற்காக வென்று ஏற்படவில்லை. பத்து ரூபாய் கொடுத்தாலும், ஒரு ரூபாய் கொடுத்தாலும், ஒவ்வொரு டிக்கட்டுக்கும் நம்பர் ஏற்பட்டிருப்பதால், தம்தம் நம்பர் பிரகாரம் நாற்காலிகளில் உட்கார்ந்துகொள்ளலாம் என்று ஏற்பட்டுவிட்டால், டிக்கட்டுகள் வாங்க முந்திக்கொண்டவர்கள் முன்வரிசைகளிலும், பிந்தினவர்கள் பின்வரிசைகளிலும் உட்காரவேண்டும் என்று ஏற்படும். பால்காரனிடம் குசர் கேட்பதுபோல், டிக்கட் வாங்குபவர்களிடம் ரிஸர்வேஷனுக்குக் கட்டணம் கேட்பது ஒரு அசந்தர்ப்ப ஆசாரம். ஆதலால், கச்சேரிகளுக்கு வரும் கூட்டத்தில் பெரும்பாலார், காலேஜ் மாணவர்கள், சங்கீதத்துக்கு வெண்டிப்போன சாதுக்கள், சபா கமிட்டி மெம்பர்கள், அவர்களுடைய சிப்பந்திகள். இன்னும் ஒரு ரகத்தினர் உண்டு, அதாவது, ஒவ்வொரு கச்சேரிக்குப் பிறகும், "ஸ்பீச்" கொடுக்கும் பிரஸங்கி. இது ஒரு நூதன சம்பிரதாயமாக ஏற்பட்டிருக்கிறது. கச்சேரி முடிவதற்கு ஒரு கால் மணிநேரத்துக்குமுன் மாலைகள் போட்டபிறகு பிரஸங்கியானவர் எழுந்து தம் சார்பாகவும், சபா சார்பாகவும், கேட்டவர்கள் சார்பாகவும், தோத்திரம்செய்து வந்தனம் அளித்து, "கன்னு பின்னு மன்னு தென்னு உங்கப்பன் கோவில் பெருச்சாளி" என்று கவி கல்பனை செய்ததுபோல் செய்துவிட்டு உட்காருவார். இந்தச் சம்பவத்தில் இரண்டுவித வேடிக்கை

கள் உண்டு. ஒன்று: பிரஸங்கி ஒவ்வொருவரும், தமக்குச் சங்கீதத்தில் பெரிய ஞானம் இல்லை என்றும், ஞானமுள்ளவர்கள் எதிரில் வீற்றிருக்கும்போது தாம் பேசத்துணிந்தது தவறுதலானபோதிலும், தம் கடமையையே தாம் செலுத்துவதாகவும் சொல்லுவார். இரண்டாவது: ஒவ்வொரு சபா பிரஸங்கியும், கச்சேரியைக் கவனமாகக் கேட்கமாட்டார்கள், அநேக சமயங்களில் அவர்கள் கச்சேரியின் அந்தி சமயத்தில்தான் கொட்டகைக்குள் வருவார்கள். ஆயினும் ஏக சந்தக்கிராஹிகள்போல் சிறிதுநேரம் மௌனம் சாதித்துவிட்டு (அதாவது என்னடா உளறுவது இன்றையதினம் என்ற யோசனையில் இருந்துவிட்டு) பிறகு மழைக்காலத்துத் தவளைகள்போல் திடீரென்று கிளம்புவார்கள். ஆகக்கூடி, காசைக்கொடுத்துக் கச்சேரி கேட்கப்போனால், இந்த வேடிக்கைகளை நன்றாகப் பார்த்துவிட்டுவரலாம். வேறு பெரிய லாபம் கிடைக்காது என்பது நிச்சயம்,''

இந்த வருஷம் மயிலைச் சங்கீத சபையார் செய்த சங்கீத அபிவிருத்தி கைங்கரியத்தில் மிகவும் மெச்சத்தக்கது சமீபத்தில் நடைபெற்றது. அது என்னவென்றால் பம்பாய் ஸ்ரீமதி கேஸர்பாய் அவர்களின் சங்கீதக் கச்சேரி. உஸ்தாத் அல்லாடியாகான் சாயபுவின் சிஷ்யையாகிய கேஸர்பாய் குருசிஷ்ய பரம்பரையில் இருபத்துஐந்துவருஷகாலமாக ஈடுபட்டு ஸம்பிரதாய ஸங்கீதத்தில் ஒரு பழுத்த பழம்போல் இருந்து வருகிறார். கேஸர்பாயினுடைய ஸங்கீதத்தைக் கேட்பது பம்பாய் வாசிகளுக்கே பிரயாஸம். அவர் இலகுவாகக் கச்சேரி செய்ய வருவதில்லை. நிஜ ஸங்கீத அபிமானிகளுக்கே அவர் சுலபி: வீண் ஜம்பப் பேர்வழிகளைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. அகில இந்திய ரேடியோ பம்பாயில் சென்ற சுமார் 8 வருஷ காலமாக இருந்த போதிலும், கேஸர்பாய் ஒரு முறையாகிலும் அங்குக் கச்சேரி செய்ததில்லை என்றால், அவருடைய ஆசாரம் எத்தகையது என்று ஏற்படும். இந்த முறை மதராஸில்தான் ஒரு தினம் ரேடியோ ஸ்டேஷனிலிருந்து இரவு 8 முதல் $9\frac{1}{4}$ வரையில் பாடினார். இந்தக் கச்சேரியை ஏற்பாடுசெய்த மதராஸ் ரேடியோ அதிகாரிகளுக்கு வசீகர சக்தி அஸாத்தியம் என்று நன்றாய்த் தெரிகிறது.

சில மாதங்களுக்குமுன் ரோஷனாரா பீகம் செய்த கச்சேரியைக் கேட்டவர், இப்பொழுது கேஸர்பாய் செய்த கச்சேரியைக் கேட்டுவிட்டு, ஒன்றுக்கு ஒன்றை ஒப்பிட்டு, சிலர் சமத்காரமாகவும், மற்றும் சிலர் அசட்டுத்தனமாகவும் அபிப்பிராயம் அளித்தனர். சம்பிரதாயமாகப் பாடுபவர்களின் ஸங்கீதத்தை ஒப்பிடுவது என்பது தவறு; ஏனென்றால் நல்ல சம்பிரதாயத்திலேயே பல வழிகள் உண்டு. ஒரு குரு பரம்பரைக்கு ஒரு வழியும், மற்றொரு பரம்பரைக்கு மற்றொரு வழியும் ஏற்பட்டிருக்கும். ரோஷனாராபீகம் உஸ்தாத் அப்துல் கரீம்கான் என்பவருடைய பரம்பரையைச் சார்ந்தவர்; கேஸர்பாய் உஸ்தாத் அல்லாடியாகானுடைய பரம்பரையைச் சார்ந்தவர். முன் சொன்னவர் வழி ஒன்று, பின் சொன்னவர் வழி மற்றொன்று. அப்துல் கரீம்கான் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் சிறிது கலப்புக்கள் சேர்த்துக்கொண்டார். அவருடைய சாரீரத்துக்கும், அவருடைய சிஷ்யையான ரோஷனாரா பீகத்தினுடைய சாரீரத்துக்கும் அவர் வழி இணைந்திருந்தது. அல்லாடியாகான் சென்றவழி நல்ல ஆசாரமான ஹிந்துஸ்தானி வழி. கேஸர்பாய் அதையே கைப்பற்றிச் செல்லுகிறார். ரோஷனாராவினுடைய சாரீரம் மிகவும் ஸன்னம்; மேல் ஷட்ஜமம், ரிஷபம், காந்தாரம்கூட அவருடைய சாரீரத்தில் பேசிவிடுகிறது. இளம்வயது; தைரியம் ஜாஸ்தி; விவஹாரமும் ஜாஸ்தி. கேஸர் பாயினுடைய சாரீரம் காத்திரமுடையது, பெருத்து முற்றிப்பழுத்

சேலம்

கல்யாணப்பட்டு ஜவுளி ரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

தது. மேலே செல்லும்போது ஸன்னமா கிறது. வேலைப்பாடு அஸாத்தியம், அகார ஸாதகம் பிரமாதம். ராகங்களைப் பாடும் போது ஒவ்வொரு ஸ்வரத்தையும் நிர்ப்பய மாகவும், நீடித்தும் பிடித்துக்காண்பிக்கிறார். அப்படிச் செய்வதில்தான் நமக்குப் பொறி கலங்கிப்போகிறது. கமகங்கள் பிடிக்கும் போது, என்ன வேகமாயிருந்தாலும் ஒவ்வொரு ஸ்வரமும் விஸ்தாரமாகத் தெரிகிறது. இவ்வளவிலும் ஆறுதல் முற்றிலுமுண்டு. மொத்தத்தில் அவருடைய ஸங்கீதம் வெகு உயர்ந்ததென்றே சொல்லவேண்டும்.

சிறிய விஷயங்களிலும் ஸ்ரீ கேஸர்பாய் நம்மைத் திருப்திப் படுத்தினார். கச்சேரி 6-மணி என்றால், இருபது நிமிஷங்களுக்கு முன்னே வந்து, ஸ்ருதி தயார்செய்துகொண்டு "டான்," என்று 6-மணிக்கு ஆரம்பித்துவிட்டார். பக்கவாத்தியங்களால் கச்சேரிக்குச் சிறிதும் இடையூறு கிடையாது. தபேலாகாரர் இருந்த இடம் தெரியாமல் தம் வேலையைச் செய்தார். ஸாரங்கி வாசித்தவர், ஹா ஹா, வாஹவா, என்று சொல்வதில் கருத்தாயிருந்தாரே ஒழிய தம் வேலைப்பாடாலோ, அல்லது குறுக்குவில் போட்டோ உபத்திரவப்படுத்தாமல் இருந்தார். ஹிந்துஸ்தானி கச்சேரிகளில் இது மெச்சத்தகுந்த விஷயம் என்றே சொல்லவேண்டும். தலைக்குத்தலை பெரியதனம் இல்லாமலிருப்பதிலும், அனுசரணையாக வாசித்துக் கச்சேரியை ஒப்பேற்ற வேண்டியது என்ற கருத்திலும் இந்துஸ்தானி கச்சேரிகளில் வாசிக்கும் பக்கவாத்தியக்காரர்கள் கௌரவமானவர்களே. நம்முடைய ஆட்களோ? அடேயப்பா—குறுக்கே புகுந்து காலைத்தட்டிக் கீழேவிழ்த்துவதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு அல்லவோ வருகிறார்கள்? அவர்களையும் மெச்சி நம் ரஸிகர்கள் சந்தோஷப்படுகிறார்களே? "பார்த்திரா, மிருதங்கக்காரனை — அவர் கொஞ்சம் வேகமாய் ஓடினார் என்று தெரிந்து கொண்டு, காலத்தை ஒரு இழுப்பு இழுத்து நிறுத்திப்பிட்டான்–யமப்பயல் ஸார் அவன்" என்பார்கள். யமப்பயல்தான்! யமதூதனாயிருந்தால்தான் ஸங்கீதத்தையும் கொல்லத் துணிவான். அப்படிப்பட்ட யமகிங்கரர்கள் இந்துஸ்தானி ஸங்கீதக் கச்சேரிகளில் கைங்கரியம் செய்வது கிடையாது. ஆதலால்தான் அவர்களுடைய ஸங்கீதம் எப்பொழுதும் தேனும், பாலும் சர்க்கரையும், பழரசமும் கலந்து இருக்கிறது.

இரண்டு வாரங்களுக்குமுன் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9½-மணிக்கு "ஸங்கீதப் பிரியன்" என்ற ஒரு சிறிய ஹாஸ்ய நாடகத்தை மதராஸ் ரேடியோ ஸ்டேஷனிலிருந்து ஒலி பரப்பினர். அதைக் கேட்டவர்களுக்கு அன்று முழுவதும் சிரித்த உபத்திரவத்தால் வயிற்றுவலி தீரவில்லையாம். அம்மாஞ்சியும் நானும் சிரித்துச் சிரித்துக் கண்ணில் ஜலம் வந்துவிட்டது. அந்த நாடகத்தை எழுதியவர் நமது நண்பர் வி. சி. கோபாலரத்தினம் என்று நாடகம் முடிவடைந்த போதுதான் தெரிந்தது. கோபாலரத்தினம் எழுதியதை ஒலி பரப்பினது ரேடியோ ஸ்டேஷனுக்குக் கௌரவமா அல்லது அவருக்குக் கௌரவமாஎன்று கேட்கவேண்டியதில்லை. அதற்கப்புறம் சிலநாட்கள்வரை ஒவ்வொரு நாளும் காலை 9½-மணிக்கு ஏதாவது நல்லதாகக் கிடைக்குமோ என்று நானும் அம்மாஞ்சியும் ரேடியோவைத் திறந்துவைத்திருந்தோம் என்றால் அதிலேயே நேயர்கள் உணர்ந்துகொள்ளலாம்.

ஆகஸ்டுமாதம் 3ஆம் தேதி காலை "ஹிந்து' பத்திரிகையில் முதல் பக்கத்தில் பாருங்கள்' என். எஸ். கிருஷ்ணன் காதைப்பிடித்து டி, ஏ. மதுரம் திருகுகிறார். அதற்குமேல் இங்கிலிஷில் "பொதுஜனங்களால் மிகவும் ரசிக்கப்பட்டது" என்று எழுதியிருக்கிறது. நம் தேசத்துக்கு முதல் முதல் வந்த ஒரு அன்னிய தேசத்தவர் இதைப்பார்த்தால் அவருக்கு நம்மைப்பற்றி உண்டாகும் மரியாதைக் குறைவு எவ்வளவாயிருக்கும், நமது ஹாஸ்யத்தன்மை இவ்வளவு க்ஷீண திசையை அடைந்திருக்கிறது. இப்பொழுதாவது நேயர்களுக்குத் தெரிகிறதா? "பிரபாவதி" என்ற படத்தில் காதைத்திருகும் காக்ஷியைக் காணவே பெரும்பாலார் போவார்கள் என்பது திண்ணமாயிருக்கிறதுபோலும்! பிரசாரங்களில் என்ன நூதன வகைகள் ஏற்பட்டிருக்கின்றன! சிவ சிவ! சிவ சிவ!

19-ம் பக்கம் தொடர்ச்சி.

யால் எழுத்துக்கள் சக்தி வாய்ந்தவையென்றால் அதில் உண்மையிருக்கிறது. எழுத்தின் சக்தி தெய்வத்தினிடமிருந்து வந்தது. உலக சிருஷ்டிக்குமுன் எழுத்துதான் சிருஷ்டிக்கப்பட்டதென்பது ஓர் தத்துவம். ஆனால் பதினெட்டாம் பெயருக்கு எழுத்துக்கள் அடங்கிய ஓலைகள் ஆற்றில் மிதக்கவிடுவது தத்துவமா, அல்லது வெறும் பழக்கமா என்று நிச்சயமாக என்னால் சொல்லமுடியாது. அதைத் தீண்டாமைத் தத்துவத்தை அலசிப் பிழிந்து, ஊர்ஜிதம் செய்யும் பெரியார்களுக்கு விட்டுவிடுகிறேன். காவிரிப் பெருக்கு வாழ்க. பதினெட்டு வாழ்க.

காதலும் ஊடலும்

ஜி. எஸ். மணி

ராகவன் தன் மனைவி ராதையைப்பிறந்தகம் அனுப்பியிருந்தான். கல்யாணமாகி இரண்டு வருஷங்களாகின்றன. அப்போது தான் புதுக் குடித்தனம் வைத்திருந்தார்கள். ராகவனிடம் வந்த சில மாதங்களுக்கெல்லாமே ராதை மறுபடி பிறந்தகம் போக ஆசை கொண்டாள். அத்தனை சீக்கிரத்தில் அவளை அனுப்ப அவனுக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லைதான்! என்னமாவிருக்கும்? இருந்தும் ராதையின் மனம் கோணுதபடிக்கும் நடந்து கொள்ள விரும்பினன். அப்போதுதான் வந்திருக்கும் ஆசை மனைவியல்லவா!

ஆகவே அரை மனதுடன், "ரொம்ப நாளைக்கு அங்கேயே தாமசித்துவிடாதே! 'போனேன்—வந்தேன்' என்று சுருக்கவே வந்துவிடு. இல்லையானல் இங்கே என் 'பாடு' 'லாட்டரியாகிவிடும்'" என்று கண்ணைச் சிமிட்டிச் சிரித்துக்கொண்டே சொன்னன்.

ராதைக்கும் அவனைவிட்டுப் பிரிய மனமில்லை தான். ஆனலும் பிறந்தக ஆசையும் ஒரு பக்கம் அவளை வலியப் பிடித்திழுத்தது! ஸ்திரீகளுக்குரிய ஸ்வபாவம் தானே? அதைமாற்ற யாரால்தான் முடியும்?

ஆகவே—"நான் வரும் வரையில் உங்கள் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கோ! அடிக்கடி கடுதாசி எழுதிக்கொண்டே இருங்கோ!" என்று புன்னகையுடன் எச்சரித்துவிட்டுப் புறப்பட்டாள்.

"உனக்கும் அப்படியேதான்! போய்ச்சேர்ந்ததுக்கு உடனே எழுது!" என்று சொல்லி ராகவன் ராதையை வழியனுப்பினன்.

அவளை அழைத்துப்போக வென்று வந்திருந்த—ராகவனின் மைத்துனன்—ராதையின் அண்ணன்-ஸ்ரீனிவாஸனுடன் ராதை ஊருக்குக் கிளம்பினள்.

2

ஆயிற்று. ராதை புறப்பட்டுப்போன பிறகு இரண்டு நாள்கள் வரையில் ராகவன் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தான்.

மூன்றுவதுநாள் அதியாவலுடனே தபால்காரனை எதிர்பார்க்கலானன். அவன் வழக்கம்போல் வருவதற்கு அரைமணி முன்னதாகவே தன் வீட்டு வாசலண்டை தயாராக நின்றுகொண்டு அவன் வருகைக்காகத் தவம் கிடக்கலானன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தபால்காரன் தெருக்கோடியில் வருவது தெரிந்தது. ஏனே ராகவனின் நெஞ்சு' படக்' 'படக்'கென்று அடித்துக்கொள்ளவும் ஆரம்பித்தது!

அவன் அருகில் நெருங்க நெருங்க இவன் நெஞ்சும் ஸ்டேஷனை நெருங்கும் 'போட்மெயி'லின் வேகத்திலே ஓடத் தொடங்கியது.

தபால்காரனும் வந்தான்.

ஆனல் ராகவனுக்குக்கடிதம் ஒன்றும் கொடுக்காமலே அப்பால் நகர்ந்தான்.

ராகவனுக்கு என்னவோ போலாகிவிட்டது! அடுத்த க்ஷணமே தொடர்ந்தாற்போல் ஒரு சந்தேகமும் உதித்தது............

ஒருவேளை தனக்குக்கடிதம் வந்திருந்தும்—அவன் வேறு பல ஞாபகங்களால்—தன்னிடம் கொடுக்கத்தான் மறந்துபோய் அப்படிப் போகிருனே? ஏன் இருக்காது!............

அவனுக்குப் பொறுக்கவே முடியவில்லை. தபால்காரனை நோக்கி—"ஏனப்பா! எனக்கு ஏதாவது லெட்டர் இருக்கா?" என்று கேட்டேவிட்டான்.

தபால்காரன் தலைநிமிர்ந்து ராகவனை நோக்கினன். கையில் வைத்துக்கொண்டிருக்கும் கத்தைக் கடிதங்களையும் ஒருமுறை அலக்ஷ்யமாகப் புரட்டிக்கொண்டே, "உங்களுக்கு ஒண்ணுமில்லை, ஸார்!—இருந்தா உடனேயே குடுத்துவிட மாட்டேனுங்களா!" என்று சிரித்தபடி அதிகப்படியாகவும் ஒன்றைச் சொல்லிவிட்டு அப்பால் நகர்ந்தான்.

ராகவனுக்கு விளக்கெண்ணெய் குடித்தது போலாகிவிட்டது,முகம். ஆனல்மனசோவெகு தீவிரமாக யோசனை செய்யத் தொடங்கிவிட்டது—"திங்கள்கிழமை சாயந்திரமே கட்டாயம் ஊர்போய்ச் சேர்ந்திருப்பாள்! அன்றே எழுதித் தபாலில் சேர்க்க ஒருவேளை நேரமில்லாமல் போயிருக்கலாம்! சரி—வேண்டாம்!—மறுநாள்? அட, அதையுந்தான் தள்ளேன்! முதல்நாள் முழுக்க ரயில் பிரயாணம் செய்ததில் அசாத்ய அலுப்பு ஏற்பட்டிருக்கலாம்! சரி!—ஆனல் புதனவது எழுதியிருந்தால்—இன்று வியாழக்கிழமை எனக்குக்கிடைத்திருக்கவேணுமே? என்னவோ—யார் கண்டது? —நாளைக்காவது வரலாம்! ஏன்—நாளைக்கு நிச்சயம் வரும்! நாளைக்கு வந்தே தீரும்!"

மேற்படி நம்பிக்கையுடனே ராகவன் மறுநாளும் அதே நேரத்திற்குத் தாபால்காரனுக்காக வாசலில் காத்திருந்தான்.

வழக்கம்போல் அவன் வரும் நேரத்திற்குத் தான் வந்தான். 'ராகவன் காத்திருக்கிறானே' யென்று தபால்காரன்கூட சீக்கிரம் வந்துவிட முடியுமா, என்ன, பின்னே?

முதல் நாளைப்போல் அவன் தன் வீட்டு வாசலுக்கு எதிராக வரும் வரையில்கூட அன்று ராகவனால் காத்திருக்க முடியவில்லை! பக்கத்து வீட்டு வாசலண்டை வரும்போதே—"ஏனப்பா! நமக்கு ஏதாவது 'லெட்டர்'...?" என்றான்.

''ஒண்ணுமில்லைங்க!'' என்ற ரொம்ப அலக்ஷியமாகச் சொல்லிவிட்.டு மேலே நடந்தான் தபால்காரன்.

ராகவனுக்குத்தான் எத்தகைய ஏமாற்றம்!—''இன்னிக்குமா இல்லை! ஒருவேளை எழுதிப் போட்டிருந்தும், நம்ப கைக்கு வராமல் எங்கேயாவது 'மிஸ்' ஆகியிருக்குமோ? எண்றெண்ணி ஏங்கியது அவன் மனம்.''

ஆனால் சற்றேனும் மனம் சளைக்காமல் அவன் ஐந்தாவது நாளும் கடிதத்தை எதிர்பார்த்து வாசற்படியில் தவம் கிடந்தான்! 'அன்றும் அவளிடமிருந்து ஒன்றும் வராவிட்டால் தந்தியடித்துக் கேட்டுவிடுவது என்பதாக அவன் தீர்மானம்.

ஆனால் நல்ல வேளையாக அப்படி ஒன்றும் நேரவில்லை; கடிதம் எங்கும் தவறியும் போகாமல் அவன் கைக்கே அன்றைய தினம் தான் வந்துசேர்ந்தது.

உள்ளம் பதைபதைக்க, நடுங்கும் கரங்களுடனே, ராகவன் அவசரமாகக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

ஆனால் கடிதம் வந்ததும் அவனுக்குத்தான் என்ன ஏமாற்றம். திரும்பவும் அவன் மைத்துனன் அல்லவா எழுதித் தொலைத்திருக்கிறான், அதை.

"அன்புள்ள ராகவனுக்கு,

நாங்கள் இங்கே சௌக்கியமாய்த் திங்கள் கிழமை வந்து சேர்ந்தோம். வந்ததும், அதிமுக்கியமாகக் கவனிக்கவேண்டிய சில அவசர ஜோலிகள் ஏற்பட்டுவிட்டதால் உனக்கு உடனே கடிதம் எழுதமுடியவில்லை. அவகாசமில்லாமல் போய்விட்டது. ரொம்பவும் மன்னிக்கவேண்டுகிறேன்—........''

ராகவன் கடிதத்தை முழுதும்கூட படித்து முடிக்கவில்லை. அப்படியே அதைச் சுக்குச் சுக்காகக்கிழித்து அருகில் ஓடிய சாக்கடையில் ஆத்திரத்துடன் விட்டெறிந்தான்,

'இவனைக் கடுதாசி எழுதச்சொன்னது யார்? தனது அவசர வேலைகளுக்கிடையில் இவன் அப்படியாவது எழுதுவானேன்?.........ஏன்? 'அவளு'க்கென்ன வேலை எனக்கு ஒரு கடிதம் போடுவதை விட? அவளுக்கும் ஏதாவது அவசரமோ! தூ! என்ன பிருகிருதி' என உள்ளூரப் பொருமியது அவன் மனம். ஆனாலும் மறுகணமே—ஒருகால்—வந்ததும், வராததுமாய், 'முதலில், தானே எழுதவேண்டாமென்று வெட்கப்பட்டுக்கொண்டு, முதலில் அவனைவிட்டு எழுதச்சொல்லிவிட்டு, மறுநாள் அவள் எழுதுகிறாளோ, என்னவோ!' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டவனாய் மறுநாளும் தபால்காரனை மிதமீறிய ஆவலுடன் எதிர்நோக்கியவனாய்த் தன் வீட்டு வாசலில் ஒற்றைக்காலில் நின்றான்!

தபால்காரன் வரும்போதே—"இன்னிக்கு ஏதாவது இருக்கா, பார்?" என்றான்.

தபால்காரன் "ஒண்ணுமில்லிங்களே!" என்று புன்சிரிப்புடன் சொல்லிக்கொண்டே நிற்காமல் நடந்தான்.

மறுநாளும் அதே கதைதான்!

அதன் பிறகும் அப்படியே!

அப்புறம் தபால்காரனாகவே ராகவனைப் பரிதாபகரமாகப் பார்த்துச் சிரித்தபடி, "இன்னி.க்கும் ஒண்ணும் உங்களுக்கு வரல்லை சாமீ?" என்று வருத்தப்படும் நிலைமைக்கும் வந்து விட்டது.

இதனால் ராகவனுக்கு மட்டும் மனசு என்னவோ சற்றாவது சலிக்கவேயில்லை, ''நம்பிக்கை மலையையும் நகர்த்தும்'' என்ற நம்பிக்கையில் அதிக நம்பிக்கை வைத்திருந்தானே அவன்!

தபால்காரனும் மிகவும் நல்லவனாகத்தான் காணப்பட்டான்.

தினந்தோறும், கொஞ்சமேனும் அலுக்காமல் சலிக்காமல் ராகவன் தன்னிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்து ஏமாந்துகொண்டே இருக்கும் அவனது பரிதாபமான ஸ்திதியைக் கண்டு இரக்கப்பட்டுத்தானோ, என்னவோ, தான் வெகுதூரத்தில் வரும்போதே தன்னையே அதிக ஆவலுடன் உற்றுக் கவனித்துக் கொண்டு தவிக்கும் ராகவனை—தான் அவன் வீட்டு வாசல் வரையில் வரும் அச்சிறிய நேரத்திற்குள்ளாகக்கூட மேலும் சந்தேகத்திலேயே இருத்தி, மேலும் தத்தளித்துத் தவிக்கவிடக்கூடாதென்றெண்ணித் தானோ—மேற்படி தபால்காரன் எட்ட வரும்போதே தன் ஒரு கையைத் தலைக்குமேலே உயரத்தூக்கி, "ஒன்றுமில்லை"யென்ற பாவனையில் சமிக்ஞை செய்யவும் தொடங்கிவிட்டான்!

அப்புறம்தான் ராகவனுக்கே ரொம்பவும் வெட்கமாகப்போய்விட்டது போலிருக்கிறது! இருந்தாலும் ராதையிடமிருந்து கடிதத்தை நாள்தோறும் எதிர்பார்ப்பதை மாத்திரம் ஏனோ அவனால் நிறுத்தவே முடியவில்லை!

வாசலில் நேராக நின்று தபால்காரனிடம் அவமானப்படுவதை என்னவோ அவன் இப்போது நிறுத்திவிட்டான்! ஆனால் வாசற் பக்கமாகப் பார்த்துக்கொண்டிருந்த தனது அறை ஜன்னல் கதவின் பின்புறம் ஒளிந்துகொண்டு, அவன் வரும் நேரத்தில், கதவின் இடுக்கு வழியாகத் தனக்கு ஏதாவது கடிதம் கொண்டுவருகிறானா வென்று கவனிக்க ஆரம்பித்தான். அப்படிச்செய்வது அவனுக்கே அவமானமாகத்தான் பட்டது.......இருந்தும் அப்படியும் செய்யாமல் அவனால் அலக்ஷ்யமாக இருக்கமுடியவில்லை!.........

ஆனால் அவன் எப்பாடுபட்டென்ன? ராதையிடமிருந்து ஒரு வரியும் அவனுக்குக் கிடைக்கவில்லை! ராதை எழுதிப்போட்டாலல்லவா ராகவனுக்குக் கிடைக்கும்?

இவ்விதமே ஒன்றரை மாத காலமும் கழிந்தது!

'பொறுமையோ பூஷணமோ' வென்றிருந்த ராகவனுக்கும் சகிப்புத்தன்மை எல்லை கடந்ததாகிவிட்டது! அவனுக்கும் கோபம் வந்தது; ரோஷம் பொத்துக்கொண்டது; அப்படியே மனசு ஒடிந்து போய்விட்டான்!

"புதுக் குடித்தனம் வைத்து இன்னம் ஒரு வருஷம்கூட சரியாக ஆகவில்லை! அதற்குள்ளாக இத்தனை அலக்ஷ்யமா! தன்னிடம் அவளுக்கு இத்தனை பிடித்தமில்லாமல் போய்விட்டதா!

"ஊருக்குப் போகும்போது மாத்திரம் எத்தனை இனிமையாகப் பேசினாள்! நீங்களும் கடிதம் போடுங்கள்; நானும் அடிக்கடி எழுதுகிறேன்! என்று எத்தனை தடவை கொஞ்சினாள்! உங்களை விட்டுப் பிரிய எனக்கும் தான் மனசில்லை; இருந்தாலும் கொஞ்ச நாள்தான். பல்லைக் கடித்துக்கொண்டிருந்து விடுங்கோ! உம்?" என்று என்ன குழையடித்தாள்!

"அத்தனையும் பாசாங்கா! அவ்வளவும் வேஷமா! 'சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தேம்பித் தவிப்பரே!' என்பது அவள் விஷயத்தில் தான் என்ன அழகாகப் பலித்திருக்கிறது! வாஸ்தவத்தில் இந்தப் பெண்களே கொஞ்சமும் நம்பக்கூடாதவர்கள் தான் போலிருக்கிறது!" என்றெல்லாம் நினைக்கலானான் ராகவன்.

போய் ஒன்றரை மாசத்திற்கும் மேலாகவே ஆகிறது! இதுதான் சுருக்க வருகிறதென்று பெயரோ! இன்னமும் தான் வருகிறாள்? இன்னமும் கடிதம் எழுதக்கூட இல்லையே—அதற்குள் இங்கே, என்னிடம், புறப்பட்டு வந்துவிடவா மனசு வந்துவிடப் போகிறது?"

மாய்மாலம் செய்தல்லவா அவனை மயக்கி ஏமாற்றிவிட்டாள்! அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவன் '—ஈ—ஈ' என்று பல்லைக் காட்டினதால் தானே, அவனைச் சரியான இளிச்சவாயன்' என்றெண்ணி அவன் நெற்றியில் 'பட்டை நாமத்தைப் பரக்கச்' சாத்திவிட்டாள்!'

நினைக்க நினைக்க ராகவனுக்குக் கோபமும், அவமானமும் தாங்கவே முடியாமல் போய்விட்டன!

'சீ' அவன்தான் எப்பேர்ப்பட்ட மடையன், முட்டாள்! உண்மையில் இளிச்சவாயன்தான் போலிருக்கிறது!பின்? அவள் இப்படிப் பராமுகமாகவிருந்து அவனை அலக்ஷியப்படுத்தி அவமானம் செய்யும் பொழுது—அவன் மாத்திரம்—சீச்சீ! நினைக்கவும் வெட்கமாகத்தானிருக்கிறது!—அவளிடமிருந்து ஒரு எழுத்திற்காக

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★

★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

ஏன் இப்படித் தவித்துத் தவம் கிடக்க வேண்டும்?— சீச்சீ! அவனும் ஒரு 'புருஷனா!'? வெட்கம்!

எத்தனையோ லக்ஷம் தடவைகள், ராகவன், தானேயாவதுமுதலில் இதைப்பற்றி அவளுக்கு கடிதமெழுதி, தன் கோப தாபங்களையெல்லாம் காட்டாற்றுவெள்ளம் போல் காட்டிக் கொண்டுவிடலாமா! வென்றுகூட நினைத்தது முண்டு! அப்படியே எத்தனையோ கடிதங்களும் எழுதி எழுதி—ஆனால், நல்ல வேளையாக ஒன்றைக்கூட கட்டில் சேர்க்காமல்—அப்படியப்படியே கிழித்தும் போட்டிருக்கிறான். சொல்லற்கரிய ஆத்திரத்துடனே கார சாரமாக எழுதுவது, உடனேயே கிழித்து நெருப்பில் போட்டுவிடுவது! அவ்வளவுதான் அவன்செய்த வேலை. அந்தமட்டில்அவன் 'பொறுமைசாலி' என்று தான் சொல்லவேண்டும்! ஏன்? எழுதியும் கட்டில் சேர்க்காமலிருப்பானேன்? வேறொன்றுமில்லை;—தன் கௌரவம் என்ன ஆவது என்ற அந்தக் 'கௌரவம்' குறுக்கே நின்றது தான் காரணம்! 'அவளாக எழுதாதவரையில் அவன் மட்டும் முந்திக் கொள்வானேன்'— என்ற தீர்மானம்!

நாட்கள் ஒன்றன்பின்னொன்றாக வந்து போய்க் கொண்டேயிருந்தன. ராதையிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லை, அவளும் சீக்கிரத்தில் வருவதாகத் தெரியவில்லை.

ராகவனும் நம்பிக்கையை இழந்துவிட்டான்.

"இருக்கட்டும் சொல்கிறேன்! பழிக்குப் பழி வாங்குகிறேன்!" என்று நூறாவது தடவையாக மனதிற்குள்ளாகவே கறுவிக் கொண்டான்!

3

ராகவனே கனவிலும் எதிர்பார்க்காத சமயத்தில் திடீரென்று ஒருநாள் ராதையிடமிருந்து அவனுக்குக் கடிதம் வந்து அவனையே திகைக்கச் செய்தது! அதில்—

"உங்கள் கடிதத்தின் வழியைப் பார்த்துப் பார்த்து என் கண்ணெல்லாம் பூத்துப் போய் விட்டது! இதற்குள்ளாக என்மீது உங்களுக்கு ஏன் இத்தனை பராமுகம்? ஏன் இந்த அலக்ஷியம்? அப்படியென்ன தப்பிதம் நான் செய்தேன்? என்னையறியாமலேயே அவ்விதம் மன்னிக்கமுடியாத குற்றமாக ஏதேனும் செய்திருந்தாலும், அதை மறந்து என்னை மன்னிக்கும்படி உங்களை ரொம்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொருவர் தங்கள் தங்கள் சம்சாரத்தின் மீது எத்தனையோ ஆசையும், அருமையுமாயிருக்கிறார்கள். உங்களுக்கு என்மீது ஆசையே இல்லையா? நான் அங்கே இருந்த வரையில், அறுபது நாழிகையும், என்னை ,'அப்படியே—இப்படியே' என்று கொஞ்சிக்கொண்டேயிருப்பீர்களே! அத்தனையும் பொய்தானா? வெறும் வேஷமா? நான் இந்தண்டை வந்ததும் அந்தண்டை உங்களுக்கு என் ஞாபகமே 'அற்றுப்' போய் விட்டதா? ஆனாலும் இந்தப் 'புருஷர்களை அப்படியே நம்பிவிடக்கூடாதென்பது ரொம்பவும் வாஸ்தவம் தான் போலிருக்கிறது?' 'புருஷர்களெல்லாரும் காரியவாதிகள்—தங்கள் நோக்கம் நிறைவேறும் வரைக்கும் கொஞ்சிக்கெஞ்சுவார்களென்பது என்விஷயத்தில் என்னவோ பலித்துவிட்டதென்று தான் எண்ணுகிறேன்?

"இதை நினைத்தால் எனக்கு ரொம்பவும் வருத்தமாகத்தானிருக்கிறது. 'நீங்களாக எனக்குஎழுதாதவரையில்நானும்உங்களுக்கு ஒரு வரிகூட எழுதுவதில்லை' என்ற தீர்மானத்துடன்தான் இதுவரையில் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தேன். ஆனால் என்னால் பொறுக்கவேமுடியாதவரையில் காலம் நீடித்துவிட்டது. என்தீர்மானம் நிலைக்கவில்லை. நான் உங்களிடம் தோற்றுப்போனேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்! ஆனால் என் தோல்வியைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. இதற்காவது நீங்கள் பெரிய மனசுபண்ணிப் பதில் எழுதுவீர்களா என்றுதான் கவலையாக இருக்கிறது! உங்கள் உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று எழுதி இருந்தாள் ராதை.

ராகவனுக்கு ஆனந்தம் தாங்கவே முடியவில்லை! அந்தக் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துக்கொண்டேயிருந்தான்! லக்ஷம்தடவைகளுக்கும் மேலாகவே படித்திருப்பான். கடிதம் அப்படியே அவனுக்கு நெட்டுருவாகிவிட்டது. இருந்தும் அவனுக்குத் திருப்தியேற்படாமல் இன்னுமொருதடவை படிக்க ஆசைப்பட்டான்! உள்ளூர அவனுக்குப் பரமசந்தோஷம்! அவனும் அவளிடம் 'தோற்றுப்போனா'னென்பதை அவனே நன்கு அறிவான். ஆயினும் தான் வெற்றியடைந்தவனைப்போலவே இருக்க நினைத்து அவ்விதமே பாவித்துக்கொண்டான். கோபம்—தீராத கோபம் கொண்டவனைப் போலவே மேலும் அபிநயிக்க நிச்சயித்தான். அதன் பிரகாரமே—தன் இஷ்டத்திற்கு—அந்த ரங்க ஆசைக்கு—முற்றிலும் விரோதமாகவே—ராதைக்குப் பதில் எழுதாமலே இருந்துவிட்டான். அதைக்கண்டு ராதை 'மீண்டும் தனக்குக் கடிதம் எழுதுவாள்' என்பதுதான் அவன் அப்படிப் பேசாமலிருந்ததின் உண்மையான நோக்கம்! அவ்விதமே அவளைப் பழிவாங்குவதாக எண்ணம்! ராதை தனக்கு மறுபடி 'எழுதவேண்டு'மென்பதுதான் அவன் ஆசையும்! அப்படியே எழுதாதபோதிலும், அவளேயாவது உடனே புறப்பட்டுத் தன்னிடம் வந்துவிட்டாளாகாதாவென்ற நினைப்பு!

ஆனால் இதிலும் தோல்வி அவனுக்குத்தான்!

ராதை ராகவனுக்குத் திரும்பவும் எழுதவில்லை! அவளும் சீக்கிரத்தில் புறப்பட்டுவருவதாகவும் தெரியவில்லை.

ராகவனும் தனது தீர வைராக்கியத்தை விடுவதாயில்லை. ஆனால் நாளாக ஆக 'ராதையை மறுபடியும் கண்குளிர—மனங்குளிரப் பார்க்கமாட்டோமா' வென்ற அடக்கமுடியாத அவா ராகவனின் உள்ளத்திலே தலைதூக்கி நின்றது!

4

"ஸார்! போஸ்ட்!" என்ற குரலைக் கேட்டு, "ஏதடா அதிசயமாயிருக்கிறது!" என்றெண்ணிக்கொண்டே எழுந்து அவசரமாய் ஓடினான் ராகவன்.

தபால்காரன் அவன் கையில் கடிதமொன்றைக் கொடுத்துவிட்டுப்போனான். பரபரப்புடன் பிரித்துப் படித்தான் ராகவன்.

"அன்புள்ள ராகவனுக்கு,

இதுவரையில் ஏன் ஒருவரிகூட நீ எழுதவில்லை? ஏதானும் கோபமா? ராதை மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாள். நான் நாளையதினம்—புதன்கிழமை—சௌ. ராதையை அழைத்துக்கொண்டு அவ்விடம் வருகிறேன். எனக்கு நடுவில் கொஞ்சம் உடம்பு அசௌக்கியமாயிருந்தபடியால் இன்னும் முன்னாடியே அவளைக் கூட்டிவர ஸௌகர்யப்படவில்லை. நானும் உனக்கு எழுதமுடியவில்லை. நாளையதினம் புறப்பட்டு வருகிறோம்.

உன் அன்புள்ள.
ஸ்ரீனிவாஸன்"

ராகவன் மனம் எல்லையற்ற சந்தோஷத்தினால் துள்ளிக்குதித்தது! ஆனால் மறுநிமிஷமே அவனுக்குப் பொறுக்கவேமுடியாத கோபம் பின்னோடு வந்துவிட்டது!—"ஹூம்? இந்த நாலுவரியைக்கூட 'அவள்' கைப்பட எழுதக்கூடாதாம்! பிறந்தகத்தில் அப்படி முழுகிக்கிடக்கிறாள் போலிருக்கிறது! ஹூம்? அவ்வளவு அகம்பாவம்! திமிர்! வரட்டும். சொல்லறேன்!" என்று ஆத்திரப்பட்டான்!

'நாளைக்கு அவள் வரும்நேரத்திற்குச் சரியாக வாசல்கதவைப் பூட்டிக்கொண்டு எங்கேயாவது வெளியில் போய்விடலாம்? திரும்ப நான் வரும் வரையில், வாசற்படியிலேயே நின்றுகொண்டு, ஏனென்று கேட்பாரின்றி, அவமானப்படட்டுமே?' என்று ஒரு க்ஷணம் யோசித்தான். உடனேயே 'அவர்கள் வருவது எந்த வண்டி என்று குறிப்பிட்டு எழுதாதது அவன் ஞாபகத்திற்கு வந்தது. சரி, இருக்கட்டும்! அதற்காக நாம் வெளியில் ஓடுவானேன்? இங்கே இருந்துகொண்டே அவளுக்கு ஒரு சரியான பாடம் கற்பிக்கவேண்டும்!" என்றெல்லாம் இன்னும் ஏதேதோ யோசித்துக்கொண்டே அன்றைப்பொழுதை ஒருவாறு தள்ளினான்.

ஆயிற்று! புதன்கிழமை பொழுதும் விடிந்தது! அதிகாலையிலிருந்தே அதியாவலுடன் 'அவள்' வருகையை எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டான், ராகவன். மத்யானம் நெருங்க நெருங்க அவன் ஆவலும், ஆசையும் அதிகரித்துக்கொண்டேயிருந்தன.

வாசற்புறம் வண்டிகள் போகும் சப்தம் கேட்கும்போதெல்லாம் அவன் நெஞ்சு படபடக்கும்! தன் அறையிலிருந்தபடியே எட்டி எட்டிப்பார்த்து ஏமாறுவான்! நேராக வாசலில் போய்ப் பார்க்க ஏனோ அவனுக்குத் தைரியம் வரவில்லை. ஆனால் 'அப்படிச் செய்வது தனக்கு ரொம்ப 'கௌரவக் குறைச்சல்' என்று நினைத்து நினைத்தே ராகவன் துடிக்கும் தனதுள்ளத்தைச் சமாதானப்படுத்திவந்தான்.

வரும் வண்டிகளெல்லாம், ஒவ்வொன்றாக, 'கடகட'சப்தத்துடன் போய்க்கொண்டேயிருந்தன. அவன் எதிர்பார்த்தபடி ஒன்றும் அந்த வீட்டுவாசலில் நிற்கவில்லை. 'அவள் வரும் வண்டியல்லவா நிற்கும். மற்ற வண்டிகள் அந்த வீட்டில் ஏன் நிற்கும்? ஏனோ இது ராகவனுக்குத் தெரியவேயில்லை!

ஆயிற்று. பகல்பொழுது முழுவதும் கழிந்து சாயங்கால வேளையும் வந்தது; இன்னமும் தான் வருகிறார்கள்.

அதுவரையில் எதிர்பார்த்து எதிர்பார்த்து ராகவனுக்கு அலுத்துவிட்டது! "காலாற கொஞ்சம் வெளியிலாவது போய்விட்டு வரலாம்! காலைமுதல் எத்தனை நாழிதான் இப்படி வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது!" என யோசித்தவனாய், தன்னை ரொம்ப ஜோராக அலங்காரம் செய்துகொண்டு வெளியில் கிளம்பினான். வாசற் கதவையும் பூட்டிக்கொண்டு ராகவன் படியிறங்கியதுதான் தாமதம்!

எங்கிருந்தோ வெகு வேகமாகப் பறந்துவந்த குதிரைவண்டியொன்று, ராகவன் நிற்குமிடத்திற்குச் சரியாக வந்து, திடீரென்று பிரேக் போட்டதுபோல், 'டக்' என்று நின்றது!

வண்டிக்குள்ளிருந்து முதலில் ஸ்ரீனிவாஸனும், அடுத்தாற்போல் ராதையும் இறங்கினார்கள்!

ராகவன் திகைத்துப்போய் அப்படியே நின்றுவிட்டான்!

ராதை பாதி இறங்கியதும் இறங்காததுமாக இருக்கும்போதே அவளது அகன்ற, அழகிய விழிகளிலிருந்து பளிச்சென்று ஒரு மின்வெட்டுக் கிளம்பிவந்து ராகவனைத் தாக்கியது. அவளது கரிய, பெரிய விழிகளிலிருந்து வந்த அப்பார்வையின் சுழற்சியில் அகப்பட்டு ராகவன் தத்தளித்து நின்றான்!

அதே சமயம் ஸ்ரீனிவாஸனிடமிருந்து ஒரு கம்பீரமான புன்னகை அடுத்தாற்போல்

"என்ன ராகவா! ஸௌக்யமா? ஏது இப்படி ஒரு 'லெட்டர்' கூட எழுதாமலே இருந்துட்டே?" என்ற அஸ்திரம்.

ராகவன் க்ஷண நேரம் செயலற்று நின்றுன். அப்புறம் தன்னைத்தானே சமாளித்துக்கொண்டான். வெகு அவசரமாக வாசற் கதவைத் திரும்பவும் திறந்துவிட்டான். அவனை யறியாமலேயே—"அதெல்லாம் ஒண்ணுமில்லை; உள்ளே வாங்கோ, பேசலாம்!" என்ற வார்த்தைகள் வெளிப்பட்டன.

"நீயும் வா!" என்று சொல்லிக்கொண்டே சிரிப்புடன் தான் முதலில் உள்ளே நுழைந்தான், ஸ்ரீனிவாஸன்.

அடுத்தாற்போல் ராதை படியேறினுள். அழகிய முகாரவிந்தத்தில் தவழும் மோஹனப் புன்னகையுடனே, வழியில் நின்றுகொண்டிருக்கும் ராகவனைத் தன் கடைவிழிகளால் கடாக்ஷித்தபடி, அவன் மீது உராய்ந்து கொண்டே உள்ளே போனுள்! அவள் பின்னே மலர்ந்த மல்லிகையின் மணமும் மிதந்துசென்றது. தலையில் கொத்து மல்லிகைப் புஷ்பங்கள் அழகுடன் அமர்ந்திருந்தன.

ராகவன் அசந்தே போனுன்! அவள் மூன்றுமாதத்திற்கு முன்பிருந்த ராதையில்லை—இப்போது ரொம்பவும் மாறுதலடைந்திருக்கும் புது ராதையாகப் பரிணமிக்கிருள்—என்பதைக் கவனித்த அவனுக்கு ஆச்சர்யம் தாங்கவே முடியவில்லை! அபூர்வமான அவள் அழகு இப்போது இன்னமும் அதிகரித்திருந்தது. அந்த அழகிலே ஒரு மலர்ச்சி'யையும் கண்டான். வதனத்திலே முன்பில்லாத பொலிவு, அந்த மயக்கும் விழிகளிலே முன்பு காணப்படாத ஓர் பிரகாசம். எழிலுடன் விளங்கிய அவளது அங்கங்களிலே ஒரு பூரிப்பு. பிறந்தகம் போன ராதை சாக்ஷாத் 'கண்ணனின் காதலி' ராதையாகவே அல்லவா திரும்பி வந்து ராகவன் உள்ளத்தை மேலும் கவர்ந்துவிட்டாள்!

திகைப்புடன் உள்ளே நுழைந்தான்.

"வாருங்கள்! துரும்பாய் இளைத்துவிட்டீர்களே!" என்ற ராதையின் மதுரமொழிகள் அவன் செவியில் பாய்ந்து உள்ளத்தைக் கிளறிவிட்டன.

ராகவன் சீனிவாசனை நோக்கி மௌனமாய்ப் புன்னகை புரிந்தான்.

"இதோ நமஸ்காரம் செய்யறேன்" என்று சொல்லிக்கொண்டே ராகவன் காலடியில் மண்டியிட்டு நமஸ்கரித்து எழுந்தாள் ராதை. ராகவன் மெய் சிலிர்த்தது.

"இத்தனை நாளில் எனக்கு ஒரு கடுதாசி எழுத உங்களுக்கு மனசில்லையா? நான் போட்டலெட்டருக்குக்கூட பதில் எழுதாமல் இருந்துவிட்டேளே? என்மேல் என்ன கோபம்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

ராகவன் அதற்கும் பதில் சொல்லவில்லை. ராதையின் மலர்ந்த வதனம் 'சட்'டென்று சுருங்கியது. அதைக் கவனித்த ஸ்ரீனிவாஸன், அப்போது அங்கே நிலவிய சஹிக்கமுடியாத அமைதியைக் கலைக்க ஸமய சஞ்சீவியாகத் தலையிட்டான்—

"கோபமா! உன்மேல் கோபித்துக்கொண்டு இவன் எங்கே போவான், ராதா! கடுதாசி எழுத நேரமிருக்காது! உம்? அப்படித்தானே?" என்று ராகவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னுன்.

நிலைமையைச் சமாளித்துக்கொள்ள ராதையும் சிரித்தாள்—"இல்லைடா சீனு! உன் மாப்பிள்ளைக்கு என்பேரில் ஏதோ கோபம்தாண்டா! காரணம் இப்பொ சொல்ல மாட்டார்! 'அப்புறம் தான் சொல்லுவார்! சரி இருக்கட்டும்! அதைப்பத்தி அப்புறம் நான் விசாரித்துக் கொள்றேன்—எதற்கும் நீ இப்போ கடைத் தெருவுக்குப்போய், ராத்திரிசமையலுக்குநல்ல "காய்கறி'யா ஏதானும் பார்த்து வாங்கிவா! முதலில் சாப்பாட்டைக் கவனிச்சுக்கலாம்! உன் மாப்பிள்ளையைத்தான் பார்? எப்படி அதுக்குள்ளே 'கயிரு' இளைச்சுப் போய்ட்டார்ணு! இந்த ரெண்டு மூணுமாசமா நல்ல சாப்பாட்டைக் கண்ணாலும் காணுத உன் மாப்பிள்ளைக்குப் பாதி கோபமாக இருந்தாலும் இருக்கும்?" என்று சொல்லிச் சிரித்தபடியே ராகவனைப்பார்த்து. "உம்! அப்படித்தானே? இனிமேல் கவலைப்படாதேங்கோ! உங்களுக்கு இனிமேல்—இதோ, பாருங்கோ—'ஏ—ஒன் சமையலாக' 'நான்' செய்து போடறேன்! பூர்வாங்கமா இன்னிக்கு ராத்திரியே உங்களுக்கு 'என் கைப்பட' விருந்து சாப்பாடு! உம்? என்ன? அதோ! 'விருந்து' என்னதுமே' மூக்கு நுனியிலே கொஞ்சமாச் சிரிப்பு அரும்பறதே! எனக்குத் தெரிஞ்சு போச்சு! மறைக்காதேங்கோ!" என்ருள்.

ராகவன் உண்மையில் 'கபக்' கென்று சிரித்துவிட்டான்!

"சரி, நீங்கள் ரெண்டுபேரும் பேசிக்கொண்டிருங்கோ! நான் போய்ச் சாமானை யெல்லாம் வாங்கிண்டு நிமிஷத்தில் வந்துவிடறேன்!" என்று சொல்லிச் சமயம் பார்த்து நழுவ முயன்ருன் புத்திசாலியான ஸ்ரீனிவாஸன்.

"இல்லையில்லை—இரு அப்பா! நானும் உன்னோடு வரேன்!" என்று சொல்லிக்கொண்டே அவசரமாக அவனைப் பின் தொடர்ந்தான் ராகவன்.

"ஏன்? இங்கேயிருக்கப் பயமாயிருக்கோ?" என்று குறும்புச் சிரிப்புடன் ஸ்ரீனிவாஸன் கேட்க ராகவன் பேசாமல் அவனைப் பின்பற்றினன்.

அன்றிரவு ராகவனுக்கு முதல்தரமான விருந்து தான் செய்துபோட்டாள், ராதை. சேமியாப் பாயஸம்! முருங்கைக்காயும், வெங்காயமும்போட்டுச் சாம்பார்; உருளைக்கிழங்கு வறுவல்; வாழைக்காய்ப் பொடிமாஸ்; டாங்கர் பச்சடி; அசல் மைசூர் ரசம்; புத்துருக்கு நெய்; நல்ல ஆடைத் தயிர்! போதுமா!—சமையலும் வெகு அருமையாய்த்தானிருந்தது! நிஜமாகவே நல்ல சாப்பாட்டைக் கண்டு ரொம்ப நாளாகிவிட்ட ராகவனுக்கும் பரமானந்தமாயிருந்தது! நாக்கை நொட்டையிட்டுக்கொண்டு வாடிக்கிடந்த தன் வயிற்றை நிரப்பினன். மேலும் ராதை காட்டிய அன்பிலும், அவனை உபசாரம் செய்த தடபுடலிலும், சமைத்துப் பரிமாறும் அவளது கை இனிமையிலும் தன்னையறியாமலேயே மதிமயங்கிவிட்ட ராகவன் அளவுக்கு அதிகமாகவே அன்று உண்டான் என்றுதான் சொல்லவேண்டும்!

அப்புறம் மைத்துனன் ஸ்ரீனிவாஸனுடன் சிறிதுநேரம் பொதுப்படையாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, தன் படுக்கையறைக்குச் சென்றன்.

5

அன்றிரவு பதிஞேரு மணி சுமாருக்கு ராதை சகல அலங்கார ஒய்யாரங்களுடனும் கையில் பால் நிறைந்த கூஜாவுடனும் ராகவனின் அறைக்குள் நுழைந்தாள்.

ராகவன் சுவரின் புறமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டிருந்தான். அவன் முதுகுப்புறம் தான் ராதைக்குத் தெரிந்தது. எனினும் 'அவன் இன்னும் தூங்கவில்லை' யென்பதும் ராதைக்கு நிதர்சனமாகத் தெரிந்தது.

அவள் முகத்தில் லேசாகப் புன்னகை அரும்பியது.

ஜன்னல் வழியே வெளியே நோக்கினள். பூர்ண சந்திரிகை பாலை வர்ஷித்துக்கொண்டிருந்தது. மிருதுவான தென்றல் அறைக்குள்ளே மிதந்துவந்தது.

குலுக்கு நடையுடன் கட்டிலை அணுகினள். பாலை வைத்துவிட்டு ராகவன் அருகில் அமர்ந்து அவன்மீது தன் கையை வைத்தாள்.

அந்த அன்பு நிறைந்த ஸ்பரிசத்தின் அடியில் வளைந்துகொடுத்தான் ராகவன். 'சட்டென்று ராதையின் கையை எடுத்துத் தூர வீசினன்!

அவள் தனது அழகிய பல்வரிசை வெளியில் தெரியச் சிரித்துக்கொண்டே, "நிஜமாக என் மேல் ஏதானும் கோபமா? நான் என்ன செஞ்சேன்? தெரியவில்லையே? சொல்லிவிட்டு அப்பறமாவது கோவிச்சுக்கொள்ளுங்கோளேன்! அப்பவே பிடிச்சு, நானும் பாக்கறேன், 'வாயைத் திறப்பேன' என்கிறேளே?" என்று குரலில் அன்பொழுகக் கொஞ்சினள்.

ராகவன் மௌனம் சாதித்தான்.

ராதை மீண்டும் அவன் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்ப முயன்ருள்-"எங்கே? என்னைப் பார்க்கவும் கூடாதா? எங்கே உங்கள் திருமுகத்தைக் கொஞ்சமாவது என் பக்கம் திருப்புங்களேன்! நானுவது பாக்கறேன்!............"

ராதையின் லேசான பிடியிலிருந்து ராகவன் தன் முகத்தைத் திமிரிக்கொண்டான்!

ராதையின் முகம் சிறுத்துவிட்டது. கண்களில் நீர் மல்கியது. மறுபடியும் அவளே பேசியபொழுது அவள் குரலில் அழுகையின் கம்மல் நன்ருக வெளிப்பட்டது—"இதுக்குள்ளே என்னை இப்படிப் பிடிக்காமல் போய் விட்டதா உங்களுக்கு? எனக்குக் கடுதாசியும் எழுதாமல்—நான் உங்களுக்கு எழுதியதற்கும் கூட பதில் போடாமல் இப்பொழுதும்......?"

அவள் முழுவதும் சொல்லி முடிப்பதற்குள்ளாக ராகவன் ஆவேசத்துடன் குறுக்கிட்டான்—"போரும், போரும்! மூடு வாயை! 'நீ போனதும் கடிதம் எழுது'ன்னு நான் படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்க—நீயும் 'அடிக்கடி கடுதாசி எழுதறேன்'னு அப்போ ஒப்புக்கொண்டுவிட்டுப்போய்ஒண்ணரைமாசத்துக்கு அப்புறம் எழுதினளாம்! எழுத்து! அகம்பாவ

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின் டானிக்

த்தோடே 'அவனை'யும் 'இவனை'யும் எழுதச் சொல்லறது? 'சுருக்க வந்துடறேன்'னு சொல்லிவிட்டு மூணுமாசமா பொறந்தாத்து ஸௌகம்! அந்தச் சுகத்திலே'என்நினைப்பு'க்கூட மறந்தேபோயிடுத்து! இப்பொ என்னைச் சொல்ல வந்துட்டயாக்கும்?'' என்று ஆத்திரத்துடன் சீறி விழுந்தான்.

ராதை தன்னையுமறியாமல் சிரித்தாள். பிறகு நிதானமாக—''போறது! இப்பொவாவது இந்தமட்டில் என்னோடு வாயைத்திறந்து பேசினேளே! 'இந்தமாதிரி'ன்னு உங்கள் கோபத்துக்குக் காரணத்தை வாயைத் திறந்து சொன்னால்தானே எனக்குத் தெரியும்? இல்லாதபோனா நான் என்னத்தைக் கண்டேன்? நான்பாட்டுக்குச் சாதாரணமாகத்தான் நினைச்சுண்டிருந்தேன்? நீங்க அதையெல்லாம் இப்படி 'விபரீதமா எடுத்துண்டு கோவிச்சுப்பேள்'னு வாஸ்தவமா நான் நினைக்கவேயில்லை! 'இன்னம் முன்னாடியே வந்துவிடுவேன் நான். —ஆனா சீனுவுக்குத் திடீர்னு உடம்புக்கு வந்துடுத்து. அவன் எழுதல்லே?—நான் கடுதாசி எழுதல்லே'ன்னு நீங்க கோவிச்சுண்டிருக்கேள்! ஆனா 'நீங்களாகவே முதல்லே எனக்கு ஒரு கடுதாசி எழுதமாட்டேளா'ன்னு உள்ளூர ஆசைப்பட்டுக்கொண்டு நான் எதிர்பார்த்து எதிர்பார்த்து காத்திண்டிருந்தேன்! 'நீங்க எழுதலை'யேன்னு எனக்குக் கோபம்!—போறது, விடுங்கோ! எப்படியும் நான் செய்தது தப்புத்தான்! என்னை அதுக்காக இந்த ஒரு தடவை மாத்திரம் மன்னிச்சுக்கப்படாதா? போனதை நினைக்காதிங்கோ! மறந்துடுங்கோன்னா! உம்? இனிமே நான் எப்பவும் உங்கள் மனசுகோணாமையே நடந்துக்கறேன்? உம்? சரியா? ஆகட்டுமா?'' என்று இனிமையாகக் கொஞ்சினாள். அப்புறம் அவனைக் கடைக்கண்ணால் மயக்கிக்கொண்டே, முகம் சிவக்க—இப்பொ நான் உங்களைத் தொடலாமா! நீங்களும் என்னோடு பேசுவேளில்லையா!'' என்று அபரிமிதமான நாணத்துடன் வினவினாள்.

ராகவனுக்கும் அப்போது அவளை அப்படியே ஆசைதீர அணைத்துக் கொள்ளவேண்டுமென்றுதான் உள்ளமும், உடலும் பறந்தன. இருந்தும் தன் 'கௌவரவத்தை அவ்வளவு சீக்கிரத்தில் விட்டுக்கொடுத்துக் கொள்ளவும் மனசு இடங்கொடுக்கவில்லை.

''ஊஹூம்! நான் உன்னோடு பேசவே போறதில்லை!'' என்று கண்டிப்பான குரலில் சொல்லியபடியே மறுபடியும் சுவரின் புறமாகத் திரும்பிப்படுத்தான்.

''ஊஹூம்! நான் உங்கள் பேச்சைக் கேட்கப் போறதில்லை!'' நீங்களும் என்னோடு பேசறவரைக்கும் உங்களையும் சும்மாவிடமாட்டேன்! நானும் அப்படித்தான் தொடுவேன்!'' என்று விளையாட்டாகக் கொஞ்சிக்கொண்டே மறுபடி அவன்மீது கையைப் போட்டாள் ராதை.

ராகவன் அவள் பிடியிலிருந்து திமிறினான். ராதை மீண்டும் மீண்டும் அவனைத் தொடுவதும், அவன் அவள் கையைப் பிடுங்கி யெறிவதுமாகச் சிலநிமிஷங்கள் விளையாடினார்கள்!

''ஏ, அம்மாடியோ! உங்களுக்குத்தான் என்ன கோபம்! என்ன கோபம்! ஆனா உங்கள் பூச்சாண்டி யெல்லாம் என்கிட்ட மாத்திரம் பலிக்காது! வேணும்னாபாருங்கோ? உங்களை இப்போ ஒரே க்ஷணத்தில் சிரிக்க வைக்கறேன்!'' என்று சொல்லிக்கொண்டே ராகவனை ''கிசு கிசு'' மூட்டினாள் ராதை.

'குறுகுறு'ப்புத் தாங்கமுடியாமல் உடம்பை நெளித்துக் கொண்டே சிரித்தான் ராகவன். ''போறுமே, விளையாட்டு!'' என்று சிரிப்பினூடே சொன்னான்.

''யார் விளையாடறா! நீங்கள் தான் பச்சைக் குழந்தை மாதிரி யிருக்கேள்! இத்தனை வயசாகியும் இப்படித்தானா குழந்தைமாதிரி கோபமும்—என்னோடு 'டு' விடறதும்! உங்களுக்கே குழந்தை பிறக்க இப்போ காலம் வந்தாச்சு!.........''

''ராதா!',— வெகு அவசரமாகப் படுக்கையினின்றும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, அவளருகில் நெருங்கி உட்கார்ந்தான் ராகவன். —''ராதா! நிஜம்மாவா!'' என்றான் அசாத்ய ஆவலுடனே.

ராதையின் எழில் நிறைந்த முகாரவிந்தம் அளவற்ற நாணத்தினால் குபீரென்று சிவந்துவிட்டது! தலையைக் கவிழ்ந்து கொண்டு தன திருகரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டாள்.

முகத்தை மூடியிருக்கும் அவள் கரங்களை மெதுவாகவும், அன்புடனும் பற்றி விலக்கிக் கொண்டே—''ராதா! பின்னே உன் கடுதாசியில் கூட இதைப்பத்தி நீ ஏன் எழுதவில்லை.........?'' என்றான்.

ராதை லேசாகத்தலை நிமிர்ந்து கடைவிழிகளால் ராகவனை நோக்கினாள். புன்சிரிப்புடன், ''அப்பொழுதே எழுதிவிட்டால் இப்போ இப்படி ஆனந்த மயமாயிருக்கும் உங்கள் முகத்தை நான் பாத்தாலும் சந்தோஷப்படமுடியுமா!'' என்றாள்.

ஆனால்'தான் சொல்வது அப்பட்டமான பொய்' என்பதை அவளே அறிவாள்! உண்மைக்காரணம் அதுவல்ல—'தன் கணவன் தனக்கு முதலில் கடுதாசி எழுதாமல் அலக்ஷியப் படுத்திவிட்டான், பார்த்தாயா' என்று அவள் அவன்மீதுகொண்ட ஊடலிலே அப்போது வேண்டுமென்றே அதை எழுதாமல் விட்டுவிட்டாள்!

ஆனந்தம் பொங்கிவழியும் முகத்துடனே ராகவன், ''பாத்தியா! பாத்தியா! அப்பொவே

எழுதியிருந்தால்?......அடடா!" தெரியாமல் போச்சே எனக்கு!" என்று எதையோ நினைத்து ரொம்பவும் வருத்தப்படுபவன்போல் பரிதவித்தான்.

'தெரிந்திருந்தால்? என்ன செய்வேளாம்?" என்ற ஆச்சர்யத்துடன் வினவினுள் ராதை.

"இத்தனை கூட உன்னை வீணுகத் தவிக்க விட்டிருக்க மாட்டேனே!" என்ருன் ராகவன்.

ராதை புன்சிரிப்புக் கொண்டாள்—"அடடா! திடீர்னு இப்பொமட்டும் என்மீது என்ன பரிவு! என்ன அன்பு!"

ராதை தலை குனிந்துகொண்டாள். இருந்தாற் போலிருந்து எதையோ நினைத்துக் கொண்டவள் போலத் 'களுக்'கென்று சிரித்தாள்.

ராகவன் ஆச்சர்யமடைந்தவனுய்—"என்ன ராதா! திடீர்னு நினைச்சிண்டு சிரிக்கிறயே? எதைப்பத்தி?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

"ஒண்ணுமில்லை—ஒரு பழமொழி சட்டுனு என் ஞாபகத்துக்கு வந்தது"

"அதென்ன அப்படிச் சிரிப்பு மூட்டும் பழமொழி?"

"ஒண்ணுமில்லை யென்கிறேனே!— சொன்னுல் நீங்க மறுபடியும் என்மேலே கோவிச்சுண்டாலும் கோவிச்சுண்டுடுவேளோன்னு பயமாயிருக்கு! நான் சொல்ல மாட்டேன்"

"இல்லை ராதா! இனிமேலும் உன்னிடம் கோவிச்சுப்பேனு! நான் என்ன அத்தனை முட்டாளா! எங்கே? சொல்லு? நானும் கேட்டுச் சிரிக்கிறேன்? என் கண்ணில்லையா?"

"நிஜமா? சொல்லட்டுமா? அப்பறம் கோவிச்சுக்........."

"இல்லை, ராதா! சொல்லு!"

ராதா தாங்கமுடியாத சிரிப்பு மிதக்கும் குரலில் —"தெரியாதா —'அண்ணுசாமியின் கோபமெல்லாம் அஸ்தமனம் வரைக்கும்தான்' என்கிறது மாதிரி......!" என்று சொல்லிவிட்டு முகத்தை இரு கைகளாதும் மூடிக்கொண்டு, விரல்களின் இடுக்கால் ராகவனைப் பார்த்தபடியே மேலும்குலுங்கக்குலுங்கச் சிரித்தாள்!

"சீ! போக்கிரிக் கழுதை! அப்படியாசேதி! உம்? இப்போ உன்னைஎன்னசெய்றேன் பார்! உம்! எங்கே உன் முகத்திலிருந்து கையை எடு, சொல்றேன் இப்போ!" என்று பாசாங்குக் கோபத்துடன் சொல்லிக் கொண்டே அபரிமிதமான ஆசையுடன் ராதையின் இரு கரங்களையும் சேர்ந்தாற்போல் பற்றி இழுத்தான் ராகவன்,

அன்றைய பால் நிலவு வீண்போக வில்லை!



உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணு தபால் தலை அனுப்பினுல் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

எங்கும் கிடைக்கும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணு தபால் தலை அனுப்பினுல் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிளோ - இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்—2

விஜயாவின் காதல்

சு. சுப்புலக்ஷ்மி

மொகல் மன்னன் ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலம் ஹிந்துக்களுக்கு மிகவும் போதாத காலம். பாதுஷா ஔரங்கசீப் இஸ்லாம் மதத்தைப் பரவச் செய்யப் பல அக்ருத்யங்களைக் கடைப்பிடித்தார். புனிதமான இஸ்லாம் மதத்தை ஸ்தாபிக்க வாள்வலியால் கோரமான யாதனைகளைச் செய்தார்.

அநேக ஹிந்துக்கள் கொலையுண்டிறந்தார்கள். வேத புஸ்தங்கள் அக்னிக்கு ஆஹுதி செய்யப்பட்டன. ஹிந்து தேவாலயங்கள் இடித்துத் தகர்க்கப்பட்டன. சனாதன தீர்த்தங்கள் ஆபாசப்படுத்தப்பட்டன. பிராம்மணர், க்ஷத்திரியர் முதலிய ஹிந்துக்களைப் பலவந்தமாகக் குர்ஆன் கல்மாவைப் படிக்கச் செய்தார். சில தியாகிகள் மதத்திற்காக உயிரைக் கொடுத்தார்கள். சில பாபிகள் உயிருக்காக மதம் மாறினார்கள்; மற்றும் சிலர் கான் புகுந்தார்கள்; நாட்டை விட்டோடினார்கள்.

அவ்வாறு ஓடி வந்தவர்களில் சோபாலிகையும் ஒருவளாவள். சோபாலிகை க்ஷத்திரிய மங்கை. அவள் கணவன் விஜயநகர மன்னனின் சேனாதிபதியாக இருந்தான். திடீரென்று பாதுஷா ஔரங்கசீப் அந்நகரைத் தாக்கினார்; சேனாதிபதியை நயவஞ்சகமாகக் கொன்றார். பின் விஜய நகரத்தைச் சுலபமாகத் தம் வசப்படுத்திக்கொண்டார்.

மோசத்தினால் தன் கணவன் இறந்ததைக் கேட்டுச் சோபாலிகை மீளாத்துயர் எய்தினாள். "பேடிப்பயல் வஞ்சமாகக் கொலை செய்துவிட்டான்!" என்று வைதபடியே தன் ஒரே ஒரு அருமைப் புதல்வனை அணைத்துக்கொண்டு அழுதாள்.

அப்பொழுது அப்பாலனுக்குப் பத்து வயது. அவன் தாயின் அழுகையையும், துயரையும் கண்டு "அம்மா! அழாதே. அப்பாவைக் கொன்ற பாதகனைக் கூடிய சீக்கிரம் பழிக்குப் பழி வாங்கிவிடுகிறேன்......அம்மா! எனக்கு அஸ்திர சாஸ்திரம், வாள் வீச்சு முதலியவைகளைக் கற்றுக்கொடு!" என்றான்.

மைந்தன் வீரமொழிகள் தாயின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவன் எண்ணத்தைப் பூர்த்தி செய்ய விரும்பினாள். நீண்ட நேரம் யோசனை செய்தாள். முடிவில் அவ்வராஜகம் நிறைந்த நாட்டினின்று வெளியேறினாள். தக்ஷிண பூமிக்கு வந்தாள்.

தக்ஷிணத்தில் தாம்பிரபரணி நதிக்கரையில் ஓர் குருகுலம் பிரஸித்தமடைந்திருந்தது. சோபாலிகை அங்கு வந்தாள். குலபதியிடம் தன் விதியைக் கூறிக் கண்ணீர் விட்டாள். புருஷோத்தமரான குலபதி அவளுக்கு ஆதரவளித்து ஆச்ரமத்தை அடுத்துள்ள ஓர் குடிலில் வசித்து வர ஏற்பாடு செய்தார். அவள் உட்கருத்தை உணர்ந்து குலபதி அவள் புதல்வன் இந்துசேகரனுக்குப் பலகலைகளைப் பயில்வித்தார்.

இந்துசேகரன் குலபதியிடம் பயபக்தியுடன் க்ஷத்திரியனுக்குரிய கலைகளைப் பயின்றான். அவன் இயற்கையிலேயே க்ஷத்திரிய வீர ரத்தத்திலுதித்தவன். ஆகவே அவன் தந்தையைப்போலச் சிறந்த போர்வீரனாகச் சீக்கிரத்திலே ஆனான். இந்நிலையில் அவன் தாய் திடீரென்று மரணமடைந்தாள். அவள் இறக்கும்போது, "மைந்தா! நீ உன் வாக்குறுதியை மறந்துவிடமாட்டாயென்று நினைக்கிறேன். எனக்கு உறுதிமொழி அளி, நிம்மதியாகச் சாகிறேன்" என்று கூறினாள். இந்துசேகரன் கண்ணீர்ப் பெருக்குடன் உறுதிமொழி அளித்தான். அதுவே அவன் கண்முன் என்றும் அழியாத் தோற்றமாய் நின்றது. அவன் தன் கடமையை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனுக்குப் பதினெட்டு வயது. க்ஷத்திரியனுக்கு உரிய வீர தேஜஸ் அவனிடம் திகழ்ந்துகொண்டிருந்தது. அவன் உடல் உறுதிபெற்றுப் பளபளக்கும் எஃகுப் போலிருந்தது. கருத்தடர்ந்த அளகபந்தி சுருண்டு குன்றம் போன்ற தோளில் வீழ்ந்து அவன் வீரத்திற்குக் குடை பிடித்தது. முகத்திலே பிரகாசமும், மிருதுத் தன்மையும், மலர்ச்சியும் திகழ்ந்தன. விசாலமான நெற்றித்தடத்திலே அபூர்வமான காந்தி. வேயெனத் திரண்டிருந்தன புஜங்கள். பரந்தமார்பகத்தை பூணூல் ஊடுருவிற்று, அரையில் சுப்ரமான வஸ்திரம் விளங்கிற்று. எவ்விதப் போருக்கும் சளையாத வஜ்ர கம்பீரனாய்த் திகழ்ந்தான். அவனுடைய கம்பீரமான தோற்றத்தையும், வீரத்தையும் கண்டு ஆச்ரம வாஸிகள் ஆச்சரியமடைந்தார்கள். மாணவர்கள் அவனுடன் வலியச் சேர்ந்து அவன் தோழரானார்கள். அவன் குருகுலத்திற்கே ஓர்வித சோபையை அளித்தான்.

ஆச்ரம வாஸிகளுக்குத் தீங்கிழைக்கும் மிருகங்களைக் கொன்றும் தினைப்புனங்களை அழிக்கவரும் காட்டெருமை பன்றி யானை முதலிய மிருகங்களை வேட்டையாடியும் அப்பிரதேசத்தைப் பயமற்ற இடமாய்ச் செய்தான். அருந்தபஸிகளின் அருளுக்கும், தினை

புனங்களைக் காக்கும் இளங்கன்னியர்களின் அன்பிற்கும் அவன் பாத்திரமாயிருந்தான். அவனுடைய வீரத்திறனில் பலர் மயங்கினர். அவ்வாறு மயங்கியவர்களில் செஞ்சியரசி தாராபாய் புதல்வி விஜயாவே முக்கியமானவள். அவன் வில்லை நாணேற்றிக் குறி தவறாது அடிப்பதையும், வாள்கொண்டு வீரமாகச் சிலம்பம் வீசுவதையும், சுனையிலே குதித்து முதலைகளுடன் போராடுவதையும் கண்டு விஜயா மயங்கிப்போய் அவனை விட்டுப்பிரியாமலிருந்தாள். இந்துசேகரனும் அவளுடன் விகற்பமில்லாமல் பழகிவந்தான்.

—2—

அமைதி நிலவியிருந்த தக்ஷிணத்தின்மீது ஔரங்கஸீப் படையெடுக்கலானார். அவ்வமயம் தக்ஷிணத்தில் வேளாண்மை செழிப்புற்றோங்கி இருந்தது. மக்கள் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் வாழ்ந்து வந்தார்கள். இவைகளுக்கெல்லாம் காரணகர்த்தாவாயிருந்தவள் தாராபாய் என்னும் அரசியேயாவள். அவள் தக்ஷிணத்தில் பல கோட்டைகளைக் கட்டி ஜனங்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்துக் குடிகளின் அன்பிற்குப் பாத்திரமாய் இருந்தாள். குடிஜனங்கள் ஒவ்வொருவருடைய இதயத்திலும் தேசீய உணர்ச்சி ஏற்பட்டு நாடெங்கும் தேசாபிமானம் பரவிற்று. இச்சமயத்தில் தான் ஔரங்கசீப் தக்ஷிணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

தாராபாய் தனது மக்களை ஒன்று கூட்டிப் போருக்குத் தயாரானாள். இந்தச்செய்தி விஜயாவிற்குத் தெரிந்தது. உடனே அவள் ஆச்ரமத்தில் கல்வி பயிலும் க்ஷத்திரிய வீரர்களுடன் தாயிடம் வந்தாள். இந்துசேகரன் தான் ஆச்ரமத்தில் பயின்ற க்ஷத்திரிய வீரர்களின் தலைவனாயிருந்தான். அவன் வெகு நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த சந்தர்ப்பம் தன் முன்வந்து நிற்பதைக்கண்டு பேரானந்தமடைந்தான். தனது சேனாவீரர்களை அழைத்துக்கொண்டு அவன், தன் தாயின் உருவப்பட முன்னிலையில், "மாதா சபதத்தை நிறைவேற்றப்போகிறேன். தெய்வ வடிவங்கொண்ட உன் அருள் பார்வை அளி" என்று கூறியபடியே போருக்கெழுந்தான். முன்னணியில் அவன் போராட விரும்பித் தாராபாயின் உத்தரவைக் கேட்டான்.

தாராபாய் அவன் அபேட்சையை ஏற்றுக்கொண்டாள். ஆனால் விஜயா இதற்குச் சம்மதிக்கவில்லை. அவள் இந்துசேகரனிடம் வந்து, "சேகரா, முன்னணியிலா போராடப் போகிறாய்? வேண்டாம்............நான் சொல்வதைக் கேள்!" என்று பலவாறு கூறலானாள். ஆனால் அவன் அவள் போக்கைக் கண்டித்து, "விஜயா! என் மாதா ஆக்ஞைப்படி நடக்கப்போகிறேன். நீ கோழைத்தனமாக என்னுடன் வார்த்தையாட வேண்டாம்!" என்று கூறியபடியே இரணகளத்தை நோக்கி விரைந்தான்.

ஜனங்களின் தேசாபிமானத்தை ஒற்றர்கள் மூலம் அறிந்த ஔரங்கசீப் திகிலடைந்தார். தம்முடைய எண்ணம் சீர் குலைந்துபோய் விடுமென்பதைச் சந்தேகமற உணர்ந்தார். தக்ஷணமே சேனா வீரர்களுடன் தக்ஷிணத்தை விட்டோடினார். தலைநகரை அடைந்து சின்னாட்களுக்கெல்லாம் நோய்வாய்ப்பட்டு ஔரங்கசீப் காலமானார்.

இந்து மதத்திற்கே பரம சத்ருவாயிருந்த ஔரங்கசீப் இறந்ததைக் குறித்து இந்துக்கள் சந்தோஷமடைந்தார்கள். பயந்துகொண்டிருந்த சிற்றரசர்கள் எல்லோரும் தனித்தனியே தங்கள் தங்கள் ராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள். மொகல் சாம்ராஜ்யம் சீர்குலைந்தது. இந்தச்செய்திகளை அறிந்த இந்துசேகரன் அவ்வளவாக மகிழ்ச்சி கொள்ளவில்லை. தன் கையினாலே பாதுஷாவைக் கொல்ல முடியாமற் போனதைக் குறித்து அவன் பெரிதும் வருந்தினான். தன் தாய்க்கு அளித்தபடி சபதம் நிறைவேறுவதற்குள் பாதுஷா இறந்துபோனது அவன் மனதிலே பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியது. எல்லாப் பொருள்களையும் வெறுத்து அவன் மறுபடியும் குருகுலத்திற்கு வந்தான். சதா வேட்டையிலேயே தன் மனதைச் செலுத்தலானான்.

விஜயா காவ்யமும், அலங்காரமும் பயில்வதற்காக மறுபடியும் குருகுலம் வந்தாள். பழையபடியே இந்துசேகரனுடன் பழகி வந்தாள். இப்பொழுது அவள் சிருஷ்டி என்ற அற்புதத்தின் முக்கியமான அம்சமாகிய யௌவன அழகு என்பதைப் பெற்றிருந்தாள். அதன் ஆடம்பரம் அவள் கமல சரீரத்திலும், பேச்சிலும், நடத்தையிலும் அபரிமிதமாகக் காணப்பட்டது. அவளுடைய அபிலாஷைகள் வளர்பிறை மதியம்போல் வளர்ந்துகொண்டே போயின. உணவும் உறக்கமும்கூட அவள் சரியாகக்கொள்ளவில்லை. சதா இந்துசேகரனுடன் விளையாடுவதும், பேசுவதும் அவன் மனதைக் கவரும்படியான செயல்களைச் செய்வதாயும் இருந்தாள். அவள் இன்னும் இளம்பாலிகையே. ஆயினும் முழுவதும் அப்படிச் சொல்லமுடியாது. பகலுக்கும் இரவுக்கும் இடையிலுள்ள சந்தியாவைப் போல், பால்யம் யௌவனம் இவ்விரண்டு மற்ற நிலையில் அவள் விளங்கினாள். இவ்விரண்டினுடைய வனப்பு குணங்கள் இவைகளுடன் வேறொரு தனி அழகு பெற்று அவள் விளங்கினாள். அவள் மனதிலே எழுந்த தீவிர அன்புப்பெருக்கம் காதலாகிக் குவிந்தது.

ஆனால் இந்து சேகரனோ முற்றிலும் மாறுபட்டவனாக இருந்தான். அவன் மனம்

எதிலோ சிக்குண்ட குருடனைப்போல் தடுமாறிக்கொண்டிருந்தது. இந்தத் தடுமாற்றத்திலே அவன் அறிவுகூட மழுங்கியது. உணர்ச்சியும் மாறுபட்டது. தாய்க்கு அளித்தபடி ஔரங்கசிப்பைத் தன் கரத்தால் கொல்ல முடியவில்லையே என்ற கவலையே அவனை முழு முட்டாளாக மாற்றிற்று. எப்போது பார்த்தாலும் வேட்டையாடி துஷ்ட மிருகங்களை வதைப்பதிலேயே முனைந்திருந்தான். விஜயாவிடம் தன் வேட்டையைப்பற்றியும் குஹாதலத்தில் சென்று மிருகங்களோடு போராடி வெற்றி கொள்வதைப்பற்றியும் அடிக்கடி கூறுவான். ஆனால் அவளோ இவைகளைப் பொறுமையுடன் செவியேற்று அவனைப் புகழ்வாள். பின், தன் உள்ளத்திலே நிறைந்து ததும்பும் காதலை உருவகப்படுத்துவாள். அதற்காகவே விஜயா தன்னைப் பலவாறு அலங்கரித்துக்கொண்டாள். மெல்லியதுகிலையும் ஒளி மிளிரும் ஆபரணங்களையும், அணிந்துகொண்டு, நடைக்கொரு குலுக்கும் வெளிக்கொரு பகட்டும் விழிக்கொரு சிமிட்டும் மொழிக்கொரு பசப்பும் செய்து காட்டினாள்.

இருந்தும் இந்துசேகரன் மனம் சிறிதளவு கூட அசையவில்லை. எல்லாவற்றையும் மடையன்போல் பார்த்து, கேட்டு ஆனந்தப்படுவான். பின் வேட்டையைப்பற்றி ஆரம்பித்து விடுவான்.

இப்படியாக இவர்கள் காதல் ஒன்றுக்கொன்று முரணாக இருந்துகொண்டிருந்தது!

—3—

நாட்கள் சென்றுகொண்டிருந்தன. பெண்களின் அடக்க முடியாததும், நீக்க முடியாததுமான காதலின் மஹாசக்தி தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டு ஸ்திரமான மங்களமார்க்கத்தை அடைந்து பரம நிலையை அடைய முயன்றது. விஜயா தன் உள்ளத்தை அந்த ப்ரேம புருஷனுக்கு அர்ப்பணித்து விட்டாள். அகோர காதலின் ஜ்வாலையினால் அவள் தகிக்கப்பட்டாள். அவனுக்காக அவள் சகல தியாகமும் செய்யலானாள். எப்பொழுதும் பூவைப்போன்று சுகுமாரமான அவனுடைய தோற்றத்தின் தியானம்தான்! ஸகிகளிடமும் அவனைப்பற்றிய பேச்சுத்தான். காற்று இராத வேளையில் தன் நிறைவால் நதியின் நீர் அசைவதுபோல் இளமை இழைக்கும் சஞ்சலத்தின் பல தோற்றங்கள் அவளிடம் எதேஷ்டமாய்க் காணப்பட்டன.

குணதிசையில் செந்நிற புருஷனின் சோதி படர்ந்துகொண்டிருந்தது. விஜயா ஏதோ ஒரு ஸ்வப்பனத்திலிருந்து கண்விழித்து எழுந்தாள். குறு வேர்வையினால் கட்டுக்கடங்காத மயிர்ச்சுருள் அவள் செவி மருங்கில் வளைந்திருந்தது. கலகலவென்று குதிரையின் கழுத்தில் கட்டப்படும் மணிகளின் ஓசை கேட்டது. விஜயா படுக்கையிலிருந்தெழுந்து சாளரத்தின் மூலம் வெளியே பார்த்தாள்.

மிளிர்ந்து ஒளி துளும்பும் மேனியுடைய இந்துசேகரன் வேட்டைக்குப் புறப்பட்டுக்கொண்டிருப்பதைத் தன் அலர்ந்த விழிகளால் பருகினாள். உடனே அவன். தலைக்குமேல் ஆகாயத்தில் சில ஹம்ஸங்கள் வட திசையை நோக்கி வேகமாய்ப் பறந்துசெல்வதையும், அவைகள் மீது உதித்த சுக்கிரன் ஒளிபடவே அவைகளின் உடல் 'பளபள'வெனப்பிரகாசிப்பதையும் கண்டாள். துல்லிய வெண் பஞ்சு போன்ற நிலை குலைந்த ஆடை கீழே புரள, கதவைத் திறந்துகொண்டு அவனருகே வந்தாள். தன் அகன்ற விழிகளால் அவனிடம் அகவுணர்ச்சியைக் காட்டினாள். ஆனால் அவன், அதைக் கவனியாது குதிரையின் கடிவாளத்தை முடிந்து கொண்டிருந்தான்.

"க்ஷத்திரிய புருஷா!" என்றாள் இன்னிசையாள்.

இந்துசேகரன் திரும்பிப் பார்த்துவிட்டு, "ராஜகுமாரி! என்ன சமாசாரம்?" என்று கேட்டபடியே கட்டாரியை உறையில் சொருகினான்,

"ஒன்றுமில்லை. உன்னிடம் என் மனத்துயரை உரைக்க விரும்புகிறேன். உள்ளத்திலே கொதிக்கும் உணர்ச்சிப் பிழம்பை என்னால் தாங்கவே முடியவில்லை. நீ என் பர்ணசாலைக்குள் வா, எல்லாவற்றையும் விரிவாகச் சொல்லிவிடுகிறேன்!" என்று கூறி அவனை அழைத்தாள்.

"விஜயா! எனக்கு இப்பொழுது அவகாசமில்லை. நான் வேட்டைக்குச் செல்லவேண்டும்!" என்று கூறியபடியே குதிரைமீது ஏறினான். தோளின்பின்புறத்திலே அம்பறாத்தூணி நிறைய அம்புகளையும். கையிலே வில்லையும் கொண்டிருந்தான்.

"நல்லது போகலாம் இந்துசேகரா! வேட்டை முடிந்ததும், நீ என்னை ஆச்ரமத்தை அடுத்துள்ள பூம்பொழிலில் சந்திக்கவேண்டும். என்ன? நீ வருவாயா, இன்று மாலை........." என்று கேட்டாள்.

"வருகிறேன்" என்று கூறியபடியே குதிரையைச் செலுத்தினான். இந்துசேகரன். கருமணிக்கடகம் நிறைந்த கையிரண்டையும் கட்டிக்கொண்டு விஜயா அச்வம் மறையும் வரை பார்த்து நின்றாள்.

—4—

அதே தினம். வஸந்த காலத்திய மாலை நேரம். விஜயா நீலத்துகில் அணிந்துகொண்டு, கூந்தல் நிறைய நாள் மலர் புனைந்திருந்தாள். பூம்பொழிலின் நடுவிலே காணப்படும் தடாகக் கரையோரமாயமைந்த புல்தரையில் மல்காக்

கப் படுத்திருந்தாள். அவள் கண்கள் குண திசையை நோக்கின. முதலில் நிலாக் கதிர்கள் வீசின. பின் பிறைமதி புன்னகை பூத்து எழுந்தது. உடனே அருகே ஒளி துடித்துக் கொண்டிருந்த அருந்ததி நக்ஷத்திரம் தன் துடிப்பு அடங்கிப் பிரகாசித்தது. அந்தக் காக்ஷியைக் கண்ட விஜயா பெருமூச்செறிந்தாள். அவள் விழிகளில் முத்துக்கள்போல் நீர் அரும்பி உதிர்ந்தன. "அருந்ததி! உன்னைப்போன்ற பாக்யம் எனக்குக் கிடைக்குமா?" என்று கேட்டாள். திடீரென்று சந்திரனின் சுடரிலிருந்து யாரோ கீழே அச்வாரூடனாய் இறங்குவதுபோல் தோன்றிற்று. அவள் திகைத்து எழுந்து பார்த்தாள். தூரத்தில் ஆஜானுபாகுவான இந்துசேகரன் கம்பீரமான அச்வத்தின் மீது வேகமாக வந்து கொண்டிருந்தான்.

விஜயா அவனைக் கண்டதும் மெய்மறந்து போனாள். அவன் அருகே நெருங்க நெருங்க அவள் உள்ளத்தின் உணர்ச்சி வேகமும் அதிகரித்தது. ஹ்ருதயம் துடியாய்த் துடித்தது.

இந்துசேகரன் அவளருகே வந்து குதிரையைவிட்டு இறங்கினான். "விஜயா! இன்று சரியான வேட்டை கிடைத்தது. அடாடா! எத்தனை புலிகள், கரடிகள், முள்ளம் பன்றிகள், யானைகள் என் கூரிய கட்டாரிக்கும், கணைக்கும் பலியாயின தெரியுமா? கிடுகிடாய்த்துப் போயின மிருகங்கள்! காடே கலகலத்துப்போய்விட்டது!......... விஜயா! மற்றொன்று சொல்ல மறந்துவிட்டேனே. எதேச்சையாக நான் யானைக் கூட்டத்தில் சிக்கிக்கொண்டுவிட்டேன். அவைகள் ஏக காலத்தில் என்னைத் தாக்கின! உடைவாளை உருவிக்கொண்டு சுழற்றியபடியே அவைகளின் துதிக்கைகளை வெட்டி வீழ்த்தினேன். பின் அவைகள் பயந்து நாலுபக்கங்களிலும் சிதறி ஓடின........."என்றான் இந்து சேகரன்.

விஜயா அவைகளைக் கேட்டுப் பயமடைந்தாள். பின் அவனை நோக்கி, "க்ஷத்திரிய வீரனே! உன் வீரச்செயல்கள் மிகவும் போற்றத்தகுந்தவை. ஆனால் இனிமேல் பயங்கரமான இவ்வேட்டைகளில் இறங்கிவிடாதே! ஒரு வேளை உன் கை ஓய்ந்து, உடைவாளும் உடைந்திருந்தால் உன் கதி என்னவாகும்? வேண்டாம்.........இன்று முதல் நீ வேட்டையைமட்டும் விட்டுவிடு. உனக்குக் கோடி புண்ணியம் உண்டு நான்சொல்வதைக் கேள். நாம் இருவரும் இவ்வாச்ரமத்தை விட்டுப் போய் அரண்மனையில் வசிக்கலாம். என்ன, நீ வருகிறாயா?" என்று ஆரம்பித்தாள்.

"ஊஹூம் விஜயா! எனக்கு அரண்மனையும் அந்தப்புரமும் கட்டோடு பிடிக்கவில்லை. இந்த வனப் பிரதேசமும் வேட்டையும் தான் எனக்குநிரம்பப்பிடித்திருக்கின்றன. நீவேண்டுமானால் அரண்மனை செல். எனக்கு வேட்டை தான் உயிர். அதிலே தான் உற்சாகமும், ஊக்கமும், அதிகமாய்த் தென்படுகின்றன. நீ பெண்தானே, வேட்டையை இகழ்ந்து கூறுகிறாய். இந்த உயிர் என்ன சாச்வதமானதா? 'புனரபி மரணம்' 'புனரபிஜன்னம்......' ஆகவே நான் கவலைப்படவில்லை!" என்றான்.

"இந்துசேகரா! உன் வீர வாழ்க்கையைக் கண்டு என்மனம் மகிழ்கிறது. உன் மனோ திடமே திடம். நீ அதிக சூரன். வனத்திலே துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்கிறாய், சந்தோஷம்!.........உன்னைப் போன்ற ஒரு வீர புருஷனையும், அழகனையும் இதுவரைநான் கண்டதே இல்லை. ஆனால் நீ உன் கைகளால் மிருகங்களை வேட்டையாடுவதுபோல், ரூபத்தினால் மனித இதயங்களையும் வேட்டையாடுகிறாய்!"

"என்ன புதிர் போடுகின்றாய்? ராஜகுமாரி! மனித ஹ்ருதயங்களை வேட்டையாடுவதா!..."

",ஆம்!"

"அப்பேர்ப்பட்ட 'பாபி' நானல்ல விஜயா!"

"இல்லை நீயே தான்!"

"என்ன விஜயா, விளையாடுகின்றாயா!"

"விளையாட்டல்ல! வினையே தான் சேகரா, விரிவாக எல்லாவற்றையும் [கூறுகிறேன். வா தடாகக் கரைக்கு" என்றாள்.

இருவரும் தடாகக்கரை ஓரமாக அமர்ந்தார்கள். இருவருடைய பிம்பங்களும்தடாகஸ்படிக நீரில் பிரதிபலித்தன. விஜயா முதலில் காதலை வார்த்தைகளால் அவனுக்கு விளக்க முயன்றாள். தன் புன்னை மலர் போன்ற கரங்களை நீட்டி, இங்கிதமான குரலில், "இதோபார் இந்துசேகரா, பொய்கை நீரில் எவ்வளவு பிரபாகரமாகவும், ஆனந்தமாகவும் அருந்ததி நக்ஷத்திரம் சந்திரனுடன் கூடியிருக்கிறது, தெரிகிறதா? அதோ, அந்த அல்லிமலரைப் பார். அது தன் முழு மலர்ச்சியையும் காட்டுவதற்குக் காரணம் என்ன, தெரியுமா? வண்டுகளைத் தன்னிடம் அழைத்து அவைகளுக்குத் தேனையளித்து மயக்கி, தன் தண்ணிய தாதினை, இதோ மேலோங்கி நிற்கும் சந்தன விருக்ஷத்தின் தாதோடு இணைப்பதற்காகவே தான். இவ்வல்லி மேலோங்கி நிற்கும் சந்தன விருக்ஷத்தை எவ்வளவு ஆர்வத்தோடு பார்க்கிறது, பார்த்தாயா? சேகரா! இந்தக் காக்ஷிகளெல்லாம் உன் கண்களுக்கு இன்பத்தையும் மனதிற்குக் காதலர்கள் கூடும் சஞ்சலத்தையும் எடுத்துக் காட்டுகின்றனவல்லவா?" என்றாள்.

"இல்லவே இல்லை. விஜயா! என்னவோ நீ, கவி மாதிரி வர்ணிக்கிறாய், அதுமட்டுந்தான் தெளிவாகத் தெரிகிறது." அப்பொழுது அவன் மனம் மறுநாள் வேட்டையைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

விஜயாவிற்கு வெறுப்புண்டாயிற்று. அவன் மனப்போக்கைக் கண்டு கோபமடைந்தாள். தன் காதலை எப்படி எடுத்துரைப்பது என்பதைப்பற்றி மறுபடியும் யோசனை செய்தாள். ஆயினும் ஒன்றும் சரியாகப் புலப்படவில்லை, இந்நிலையில் வஸந்தன் ஆடம்பரமாக வந்து சேர்ந்தான். பொழில் முழுவதும் மதுரம் மடை திறந்தோடிற்று. அவனுடைய மலர்க் கணையை விஜயாவின் மீது பொழிந்தான். சகல திக்குத்திகாந்தங்களிலும் மன்மத சேஷ்டை வெகுவாக விளங்கிற்று. கருநிறமான ஆண்மான்கள் பிணைகளோடு கூடின. மதுகரமும் மதுகரியும் ஒரே மலரில் கூடித் தேன் பருகிக் களியாடின. மலர்க்கொடிகள் விருக்ஷங்களோடு சேர்ந்தன. தெற்கிலிருந்து திக்வதூவானவள் மந்தமாருதமாகிய பெருமூச்சை விட்டாள். எங்கு நோக்கினும் ஒரே இன்ப மயம்!

பரிசுத்தமான விஜயாவின் காதல், இயற்கையின் மோஹனத்தினால் அதி தீவிரமாகி மாறுபடுகிறது. ஆகவே அவள் தன் தளிர்க்கரத்தினால் இந்துசேகரன் பராக்ரமம் பொருந்திய புஜத்தைப் பற்றி, "வேட்டையிலேயே மனதைச் செலுத்தி அறிவிழந்திருக்கும் க்ஷத்திரியனே! இதோ என் அழகிய முகத்தைப் பார்........."என்றாள்.

"பார்க்கிறேன்........" அவன் அவள் முகத்தைப் பார்த்தான். அவள் முகத்திலே ஓர்வித சோபையும், மாயமான புன்னகையும் பூத்து நின்றன.

"இதை உன் மார்பில் சார்த்திக் கொண்டு அழப்போகிறேன்"

விஜயா தன் முகத்தை அவன் மார்பிற் பதித்துக் கொண்டு அவனைத் தழுவிக் கொண்டாள். ஸ்பரிசானந்தத்தினால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர் இந்துசேகரன் மார்பில் படிந்து வழிந்தது. இந்தக் காக்ஷியானது செந்நிறக் கடலோடு கூடியிருக்கும் செங்கதிர்ச் செல்வனை அறிவுறுத்தியது.

இந்துசேகரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை, அவன் பெருமூச்செறிந்தான். ஹ்ருதயமும் படபடவென்றடித்துக் கொண்டது. "ராஜகுமாரி! இதென்ன கூத்து. என்னைத் தழுவிக் கொண்டு ஏன் அழுகிறாய்? விஷயத்தைச் சொல். உனக்கு என்ன் வேண்டும்?" என்று கேட்டு அவள் முகத்தைப் பிடித்து நிமிர்த்தினான்.

விஜயா தன் உள்ளக் கருத்தை உரைக்கலானாள்; "இந்து சேகரா! என் மனதை வாட்டும் எண்ணம் இதுதான். நான் உன்மீது மகத்துவம் மிகுந்த காதல் கொண்டுவிட்டேன். உன்னைக் குருகுலத்தில் சந்தித்து உன்னிடம் பழகிய நாள் முதலே ஏற்பட்ட நட்பென்னும் அரும்பு காதலென்னும் மலராகி விட்டது. இனி, நீ என் இல்லத்தில் அடியெடுத்து வைத்து என்னைப் புனிதவதியாக்க வேண்டும்! உன்னுடைய மனைவியாகக்கொள்ளவேண்டும்! இதுவே என் பிரார்த்தனை!" அவள் இதயத்தினின்று எழுந்த நீண்ட வெய்துயிர்ப்பு இந்துசேகரன் இதயத்தில் பட்டது.

இந்து சேகரன் அவள் கருத்தை உணர்ந்து கொண்டான். அவளைத் தூக்கி உட்கார்த்தினான். "ராஜகுமாரி! எனக்கு இன்னும் காதல் உணர்ச்சி ஏற்படவில்லை. ஆகையால் உன் காதலை நான் திரஸ்கரிக்கிறேன். என்னிடம் காதலைப்பற்றிப் பேசாதே. ஜகத்தில் காதலின் போக்கே விசித்திரமாகும். காதல்தான் உலகத்தின் துக்கத்திற்குக் காரணம், காதல் புரிபவர்களுக்குத்தான் சுகத்தின் அனுபவம் தெரியுமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்குக் காதலெல்லாம் வேட்டை மீதுதான்" என்று கூறி எழுந்து செல்லலானான்.

"இந்து சேகரா! நில்." என்று கூறியபடியே அவனிடம் சென்றாள் விஜயா. அவன் இரு கரங்களையும் பற்றி, "இளமைமிக்கவனே! நான் உன்னை எத்துணை கடுமையான தபஸோடு காதலிக்கிறேன் தெரியுமா? ஆரூத காமாக்னி என்னுள்ளத்தில் எவ்வளவு தீவிரமாக எரிந்தோங்கி வளர்கிறது தெரியுமா? என் காதலை நிராகரிக்காதே. என் உடல், பொருள். ஆவி எல்லாவற்றையும் உன் பாதத்திலே அர்ப்பணித்து விட்டேன். மனம் இரங்கி அன்புடன் ஒரு கனிமொழி கூறு!" என்று யாசித்தாள்.

திடசித்தம் படைத்த இந்துசேகரன் மனம் இளகவில்லை. அவன் அருவருப்புடன், "போதும், விஜயா! என் கையைவிடு. நேரமாகிறது" என்று கூறித் தன் கரங்களை அவள் பிடியினின்று விடுவித்துக் கொண்டான்.

அபூர்வமான அழகு, ஸ்பரிச சுகம், கோரிக்கைகள் எல்லாம் நிர்த்தாக்ஷிண்யமாய்த் தவிடு பொடியாவதைக் கண்டு விஜயா தாங்கமுடியாச் சினம் கொண்டாள். கருணைப் பார்வையிலே தீக்ஷண்யத்தின் சுடர் தெறிக்க அவனைப் பார்த்தாள். கடுமையான குரலில், "கல்நெஞ்சுக்காரா! உன் வேட்டையில் தீவைக்க. வீணில் ஒரு பெண் சாபத்திற்கு ஆளாகாதே. என் கோரிக்கைக்கு இணங்கு. இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்" என்றாள். தன் இருகரங்களையும் விரித்து அவனை மேலே போகவிடாமல் தடுத்தாள்.

"விஜயா! நீ தப்பிதமான பாதையில் இறங்குகிறாய். ஆகையால் உன் காதலும், சாபமும் வியர்த்தமாகவே முடியும். வழிவிடுகிறாயா, இல்லையா?"

"முடியாது!"

"இதோ பார்......"—அவளை அப்படியே தூக்கி மரக்கிளை ஒன்றின் மீது அமர்த்தி, 'அதோ, அந்தக்கிளையைப் பார், ஓர் குயில்பேடு

ஜம்மியின்
லிவர்க்யூர் மூலம்
புனர்ஜன்மம்

ஜம்மியின்
லிவர்
க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப் படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத் தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராட்வே ரோட், மைலாப்பூர், மதராஸ்,
மசூலிப்பட்டணம், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர்,
திருச்சிராப்பள்ளி.

உன்னைப்போல் கூக்குரலிடுகிறது. அதோடு சேர்ந்து நீயும் கூக்குரலிடு'' என்று கூறியபடியே குதிரைமீது ஏறிக்கொண்டு விரைந்து சென்றான்.

விஜயா மேலே கூக்குரலிடும்குயிலைப்பார்த்து பெருமூச்செறிந்தாள். கிளையில் அமர்ந்த படியே இந்துசேகரனைப் பார்த்துக்கொண் டிருந்தாள், அவன் மறைந்ததும் கிளையினின்று குதித்தாள். ''உணர்ச்சியற்ற மடையன்! மலரை மிதித்துக்கொண்டு சென்றான்'' என்று நிந்தித்தபடியே சென்றாள்.

5

தன் மனோரதம் கூடாமையதால் விஜயா அள விடமுடியாத துயரிலும், லஜ்ஜையிலும், ஆழ் ந்து கிடந்தாள். தன்னுடைய மேன்மையான லாவண்யம், மோஹம், இவைகளுக்கு ஏற் பட்ட அவமானத்தை எண்ணி எண்ணி ஏங்கி னாள். இந்துசேகரனுடைய கள்ளங்கபடற்ற உள்ளத்தை உணர்ந்து துக்கப்பட்டாள். அவ னுடைய தீவிர ஜோதி ஸ்வரூபம் தன்னை விட்டு ஏன் அகலமாட்டேனென்கிறது என்பது அவளுக்கே தெரியவில்லை. இந்துசேகரனை அறவே மறந்துவிட அவள் முழு முயற்சியை யும் பிரயோகிக்கலானாள். அவனைச் சந்தித்த போதெல்லாம் வெறுப்புடன் நோக்கினாள், தலையைத்திருப்பிக்கொண்டு சென்றாள். ஆனால் அவள் தன் பர்ண சாலைக்குள் வந்து படுக் கையில் படுத்ததும் அவனைப்பற்றிய சிந்தனை கள் கார்மேகம்போல் எழும்பிவந்து அவளைச் சூழ்ந்துவிடும். மன உலகிலே பெரும் புயல் வீசி அவளை நிர்த்தூளிப் படுத்தும். உடனே கண்களை மூடிக்கொண்டு அவள் அவனைப் பற்றிய தியானத்திலே ஆழ்ந்துவிடுவாள். பல வித இன்பக்கனவிலே அயர்ந்து அவள் அப் படியே நித்திரையில் ஆழ்ந்துவிடுவாள்.

நிலைகுலைந்த மனத்தினளான விஜயா கடுமை யான மௌனவிரதத்தை அனுஷ்டித்து இந்து சேகரன் மனதைக் கவர்ந்தாள். அவன் உள் ளத்திலே ஒரு பெருங் கிளர்ச்சியை மூட்டினாள். அந்தக் கிளர்ச்சியினால் இந்துசேகரன் விஜயா விடம் தானாகவே வலியவந்து பேசும்படி நேர்ந்தது. ஓர் தினம் அவன் விஜயாவிடம் சென்று, ''விஜயா! நீ இப்படிப் பராமுக மாய் இருக்கலாமா? என்மீது நீ கோபிப்பதில் ஒருவித அர்த்தமுமில்லை. நான் என்ன செய் யட்டும்? எனக்கு அந்தப் பாழும் காதல் உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. இல்லா விட்டால் நான் உன்னைக் காதலிக்கமாட் டேனா விஜயா?'' என்றான் பரிதாபமாக.

விஜயா மெய்மறந்துபோனாள். தன்னிடம் கொண்டிருந்த கோபம், வைராக்கியம் வருத்தம் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டுப் பிரபாகரமாகக் கிளம்பினாள். அவள் முகத்திலே புதிய பிரகாசம் ஒளிர்ந்தது. இதழிலே கோமள வெள்ளி அரும்புபோல் புன்னகை உருவாயிற்று. இதயத்திலே

ஆர்வம் எழுந்தது. மிக்க இன்னிசையில், "இந்துசேகரா! நீ பெரிய சூன்யக்காரன். உன்னுடைய ஜாலவித்தையால் நீ என்னை இப்படியா ஆட்டிவைக்கின்றாய். இருக்கட்டும் உனக்கு நல்ல புத்திமதி கற்றுக்கொடுக்கின் றேன், பார்!" என்று மாலக் கூறினள்.

"விஜயா! நானு சூன்யக்காரன்? நானு ஜால வித்தை செய்கிறேன்? இல்லை நீ தவறுதலாகக் கூறுகிருய். நீயன்றோ என்னை ஆட்டுவிக் கின்ருய். என் மனதைக் கலைத்து ஆசையை எழுப்புகின்ருய்" என்ருன் இந்து சேகரன்.

"இருக்கலாம். ஒருவாறு நீ கூறுவது உண்மைதான். ஆனல் நான் அதர்மமாக ஒன்றும் செய்துவிடவில்லை. ஆண்களை மயக் கத்தானே பகவான் பெண்களைச் சிருஷ்டித் துள்ளார்!" என்ருள்.

"ஆம், விஜயா! நீகூறுவதும் சற்றுப்பொருத் தமானதுதான். ஆனல் பெண்கள் ஆண் களின் உள்ளத்தை உணர்ந்துநடக்கவேண்டும். கண்மூடித்தனமான செய்கை அழகிற்கு விரோதமானது. அழிவிற்கு அடிப்படை யானது."

விஜயா திடுக்கிட்டாள். சற்றே கோபமாக, "தெரிகிறது இந்துசேகரா! உன் மனப் போக்கு எனக்குத் தெரியும். அதை மாற்றும் சக்தி என்னிடம் இருப்பதை அறிந்தே உன் னிடம் தைரியமாகப் பிரயோகித்தேன். கிடைத்தால் வெற்றி கிடைக்கட்டும். இல்லா விட்டால் மரணம் கிட்டட்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே நான் இறங்கிவிட்டேன். நான், முன் பின் கருதாமல் கண்மூடித்தனமாக ஒன்றும் இறங்கிவிடவில்லை" என்ருள்.

இந்து சேகரன் சங்கை கொண்டான். "விஜயா! உன் எண்ணம் நிறைவேறுவது சக ஜமே. இப்பொழுது தான் என் மனதில் வர் ணிக்க முடியாத ஓர்இன்பம் தோன்றுகிறது. உன்னுடைய விடாமுயற்சியே இதற்குக் கார ணமாயிருக்கலாம்" என்ருன். உண்மையில் அவன் முகத்திலே மாருட்டத்தின் சாயை படர்ந்தது.

விஜயா ஆச்சரிய மடைந்தாள். "அப்படி யா? சுகுமாரா! என் உயிரை இதோ உன் பாதத்தில் சமர்ப்பணம் செய்து விட்டேன். நீ என்னைக் காப்பாற்றினலும் சரி, அல்லது அழித்தாலும் சரி, நான் கவலைப்படப்போவ தில்லை." என்று கூறிய படியே அவனை ஸாஸ் டாங்கமாக நமஸ்கரித்தாள்.

இந்துசேகரனுக்கு மயிர்க்கூச்செறிந்தது. மனதிலே அறிவுக்கும் உணர்ச்சிக்கும் போ ராட்டங்கள் ஏற்பட்டன. இரண்டும் மாறி மாறி வெற்றியடைகிறது. ஆனல் நிச்சயமான வெற்றியை எதுவும் அடையவில்லை. இருந்தா லும் பழைய வைராக்கியமென்னும் அசையாக் கோட்டை மட்டும் தகர்ந்து துகளாகி விட்டது. என்பது மட்டும் நிச்சயமாயிற்று. கிளர்ச்சியில் மூடுண்ட அவன், அவளை மெதுவாகத் தன் தாழ் பெருந்தடக்கையினுல் தூக்கி நிறுத்தி, "விஜயா! என் மனம் குழம்பிக் கொண்டிருக் கிறது. திட்டமாக ஒன்றையும் கூறமுடியாம லிருக்கிறது. இன்பமுமில்லை, துன்பமுமில்லை. இருளுமில்லை, ஒளியுமில்லை. ஆனல் சந்தியா காலத்தைப்போல் ஓர்வித புதிய தோற்றத் தை என் மனதில் காண்கின்றேன். இனி சாந்தி நிலவுவது மட்டும் நிச்சயம்! நீ எனக்கு விடை கொடு. நான் வேட்டைக்குச் செல்ல வேண் டும்." என்ருன்.

விஜயாவின் நெஞ்சு படபடத்தது. ஏதோ ஒருவித பயம் அவளை நடுங்கச் செய்தது. தனக்கு முன்வந்து நிற்கும் அருமையான இச்சந்தர்ப்பத்தை அவள் நழுவவிட விரும்ப வில்லை. பூந்துகில் பொலிந்த அல்குல் துவள அருகே மலர்ந்து மணம்வீசும் மல்லிகை மலர்களைப் பறித்து, "அன்பே! அவசரப் படாதே. இதோ, இம்மல்லிகை மலர்களைத் தொடுத்து உனக்கு மாலையிடப் போகிறேன் நான். நாமிருவரும் காந்தர்வவிவாஹம் புரிந்து கொள்ள வேண்டும். மதுவை அருந்திய பின்ன ரே மதுகரி மலரை விட்டுவிடும். அவசரப் படாதே!" என்று மலர்களைச் சேர்த்துத் தொடுக்கலானுள்.

ஆனல் அதற்குள் இந்து சேகரன் குதிரை மீது ஏறிக்கொண்டு "விஜயா! மாலை தொடு த்து வை. இதோ, சென்று ஓர் அரிமாவை வேட்டையாடி விட்டுச் சீக்கிரமே திரும்பி விடுகிறேன்.........என்ன?" என்றுகேட்டான். மோஹத்தின் தீவிரமான பிரகாசம் இன்னும் அவனிடம் ஏற்படவில்லை.

"சேகரா! நில், என் மனம் நீ வேட்டைக் குச் செல்ல அனுமதியளிக்க மறுக்கிறது. பிறகு நீ வேட்டைக்குப் போகலாம்" என்று கூறி அவனைத் தடுத்தாள்.

ஆனல் அவனே அவைகளைக் காதிற்போட் டுக்கொள்ளாமல் குதிரையின் கடிவாளத்தை இழுத்துவிட்டு வேகமாக அதைத் தட்டிவிட் டான்.

குதிரை வேகமாகப் பாய்ந்தோடி மறைந் தது. விஜயா கூச்சலிட்டுக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்து ஓடினுள். அவள் கையிலே கொண்ட பாதிமாலையின் மலர்கள் கட்டவிழ் ந்து வழி நெடுக உதிர்ந்தன.

6

மாலைப் பொழுது. பயங்கரமான காடு. பெரிய குன்றம் நிறைந்த பிரதேசம். வலிய சுத்த மரங்கள் நிறைந்திருந்தன. இண்டங் கொடிகளுடனேயே ஒரு சேரப் படர்கின்ற ஈங்கை நிறைந்த மரலின் தூறுகள் அநேகம் காணப்பட்டன. பேய்க்காற்று அடித்து மரங்களையும், கொடிகளையும் படாத பாடு படுத்தி வைக்கிறது. மரலின் தூறுகளில் இரத்தம் படிந்த வாயையுடைய துஷ்ட மிரு

கங்கள் தீப்பார்வையுடன் நெறியைப் பார்த்துக் கொண்டிருந்தன. அக் காட்டைக் கிழித்துச் செல்லும் பாதையில் சென்ற மனிதர்களின் எலும்புக் கூடுகளும், மிருகங்களின் எலும்புக் கூடுகளும் தாறுகளில் ஏதேஷ்டமாக இருந்தன.

மனதிலே உற்சாகமும், ஒருவித கலவரமும் கொண்ட இந்துசேகரன் பலமான யோசனையிலாழ்ந்தபடி குதிரையை மெதுவாக நடத்திக் கொண்டு அப்பாட்டையிலே வந்து கொண்டிருந்தான்.

திடீரென்று கோரமான கர்ஜனை கிளம்பி மலைப்பிரதேச மெங்கும் எதிரொலித்தது. இந்துசேகரன் நிமிர்ந்து பார்த்தான். ஓர் ஆண் சிங்கம் பிடரிமயிரை உதறிக்கொண்டு தீப்பார்வையோடு வாலை முறுக்கிக்கொண்டு பயங்கரமான முழக்கத்துடன் தன்னை நோக்கிப் பாய்ந்தோடி வருவதைக் கண்டான். "சபாஷ்! சரியான வேட்டை கிடைத்திருக்கிறது" என்று கூறி இடையிற் சொருகியிருந்த கட்டாரியை உருவிக்கொண்டான்.

இந்தச் சமயத்தில் அரிமா அவன்மீது பாய்ந்தது. இந்துசேகரன் அதை உதறித் தள்ளிவிட்டுக் குதிரையிலிருந்து கீழே குதித்தான். வீரமாக அதனிடம் போராடலானான். முதலில் அதன் முதுகிலேறிக்கொண்டு பிடரிமயிரைப் பற்றி உலுக்கினான். வாலை முறுக்கிச் சுற்றிக் கட்டினான். அது ஒரு உலுக்கு உலுக்கிக்கொடுத்து அவனைக் கீழே தள்ளிவிட்டது. பின் அவன் மீது பாய்ந்தது. உடனே இந்துசேகரன் தன் கரங்களால் அதன் முன்னங்கால்களைப்பற்றித் தூக்கிநிறுத்தி அதோடு சுழன்று விளையாடினான். ஏளனமாக அதைப் பார்த்து நகைத்தான். அது கோபாவேசத்துடன் கர்ஜனை செய்தது.

தூரத்திலே வந்துகொண்டிருந்த விஜயா இந்துசேகரன் சிங்கத்துடன் போராடிக்கொண்டிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டாள், அவள் சரீரம் பயத்தினால் நடுங்கிற்று. வேகமாக ஓடிவந்து அவனருகே நின்றாள். "இந்துசேகரா! ஐயோ! பேராபத்தில் சிக்கிக்கொண்டுவிட்டாயே" என்றுகூறிக் கதறினாள்.

இந்துசேகரன் ஆர்வத்தோடு அவளைத் திரும்பிப் பார்த்தான். அவன் உள்ளத்திலிருந்து ஏற்பட்ட ஆனந்தம் முகமண்டலத்தில் பிரகாசித்து இதழ்கள் மூலம் வெளிப்பட்டது. மிகவும் கோமளமான குரலில் 'அன்பே......' என்று தழுதழுக்கக் கூறி முடிப்பதற்குள் அரிமா அவன் அழகிய கண்டத்தைக் கவ்வி நெருக்கிற்று. "ஆ!" என்றலறியபடியே கீழே சாய்ந்தான் இந்துசேகரன். அவன் கையிற் கொண்ட கட்டாரியும் நழுவிக் கீழே விழுந்தது.

"ஐயோ என்றலறிக் கொண்டு விஜயா அக் கட்டாரியை எடுத்துச் சிங்கத்தின் மீது பலமாகக் குத்திப்பல காயங்களைஏற்படுத்தினாள். பயங்கரமான பேரிரைச்சலிட்டு அச் சிங்கம் உயிர் விட்டது.

விஜயா அழுதுகொண்டே தன் காதலனருகே வந்தாள், கொடிபோல் துவண்டு மண்ணில் விழ்ந்தாள். அவனை வாரி அணைத்துக் கொண்டு புலம்பினாள். அவன் மார்பிலே கையை வைத்துப் பார்த்தாள். உயிரிழந்த இதயம் கம்மென்று அடங்கிவிட்டதை அறிந்தாள். நம்பிக்கை இழந்து கதறினாள். அழுதழுது அவள் கண் சிவந்த பின் வாடிய தாமரை போலாயிற்று. வழிந்திருக்கும் ரத்தத்தை அவள் முகத்தில் வாரி வாரிப் பூசிக் கொண்டாள். அவனைப் பார்த்தாள். பழைய சம்பவங்கள் கடலலைகள் போல் ஒன்றன்பின் ஒன்றாக வந்து மறைந்தன. ஒவ்வொரு பொருளும் இரட்டித்துக் காணப்பட்டது அவளுக்கு. உயிர் வேகம் அடங்கலாயிற்று. மிகவும் ஈன ஸ்வரத்தில், "சுகுமாரா! உன் விளையாட்டு வினையாகவே முடிந்தது .... தெய்வமே! அமிர்தத்தைப் பருக வேண்டிய சமயத்திலா விஷத்தைப் பருக வேண்டும்? நல்லது, மோஹத்தில் பூர்ணமாகாத விஷயங்கள் மங்களகரமான மரண சாந்தியிலே யாவது பரிபூர்ணமாகட்டும்!" என்று கூறியபடியே உயிர் நீத்தாள்.

இரண்டு ஆத்மாக்களும் பின்னும் ஒன்று கூடின! இந்தக் காக்ஷிகளை யெல்லாம் கண்ணுற்ற அச்வம் கண்ணீர் விட்டு அழுது விழுந்து விழுந்து புரண்டது! பாவம்! பரந்த உலகில் அது தனிமையுற்றது!

ஹோமியோபதி

என்னும் நவீன வைத்திய சாஸ்திரத்தைத் தமிழிலோ, ஆங்கிலத்திலோ தங்கள் வீட்டிலிருந்தே படித்துத் தேர்ச்சி பெற்று, தாங்கள் டாக்டராகலாம். முழு விபரங்கள் அடங்கிய தமிழ் அல்லது ஆங்கிலப் பிரகடனத்திற்கு எழுதவும்.

★

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

டவுன் எக்ஸ்டென்ஷன் கும்பகோணம்.

தென் இந்தியாவின் தலை சிறந்த ஹோமியோபதி ஸ்தாபனம்.

காதலின் சின்னம்

பூவாளூர் சுந்தரராமன்

1

ஜிங்கால மடுகு கிருஷ்ணா ஜில்லாவில் உள்ள பழைய ஜமீன்தாரின் மாளிகை சென்ற ஏழு வருஷங்களாகப் பூட்டிக்கிடந்தது. திருமகள் தாண்டவமாடின கிருஹத்தை அவளுடைய தமக்கை சுவீகரித்துக் கொண்டு விட்டாள். அதற்கு ஜமீன்தாரின் மரணம் மட்டும் காரணமன்று. அவர் இறந்த ஒரே மாதத்திற்குள் அதே ஏக்கமாக இருந்த அவருடைய மனைவியும் இறந்தது சேர்ந்து கொண்டது. மதுசூதனனுக்குத் தன் பெற்றோர்களை ஒரே திங்களில் மறையச் செய்த இல்லத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டது. நறுமணம் கமழும் நந்தவனங்களும் சந்திரகாந்தக் கல் மேடைகளும்கூட அவனுக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. தாயாருடைய இறுதிச் சடங்குகளைச் செய்துவிட்டுப் பக்கத்தில்உள்ள நகரத்திற்குப் போய்விட்டான். அன்று முதல் மாளிகை பூட்டியே கிடந்தது; மனிதவாசனையே வீசவில்லை. தோட்டத்தில் மலர்ந்த புஷ்பங்கள் பறிப்பார் அற்று வாடி விழுந்தன.

திடீரென்று ஒருநாள் நகரத்திலிருந்து அந்த ஜமீன் மேனேஜருக்கு மதுசூதனன் வரப்போவதாகச் செய்தி கிடைத்தது. காவற்காரனுக்கு மாளிகையைச் சுத்தம் செய்து வைக்கும்படி உத்தரவு பிறந்தது. கடைசியில் மதுசூதனனுடைய கல்யாணம் அங்கே நடக்கப் போகிறதென்ற செய்தி வெளியாயிற்று.

மது மூன்று மாதங்களுக்கு முன் வட இந்திய யாத்திரை செய்துகொண்டே ஆக்ராவிற்கு வந்துசேர்ந்தான். அன்று பௌர்ணமி; அந்தப் பால் நிலவில் தாஜ்மஹாலைப் பார்க்கச் சென்றிருந்தான். அதனுடைய கண்கொள்ளாக் காட்சியில் மிகவும் லயித்துவிட்டான். ஷாஜகானுடைய காதலும், மும்தாஜ்பீகத்தினுடைய அற்புதமான ஸாகஸமும் அவனுடைய உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அந்த அமானுஷ்யமான சிருஷ்டியைத் திடமான காதல் ஒன்றுதான் நிர்மாணிக்க முடியும் என்று எண்ணினான். காதலின் அமரத்துவத்தை அழகுச்சின்னமாகக் கட்டிக் காண்பித்த ஷாஜகானைப் போற்றிக்கொண்டேயிருந்தது அவனுடைய வாய்.

மணிக்கணக்கில் அவ்வாறு மெய்மறந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுதுதான் சாயாதேவியைச் சந்தித்தான். இருவருடைய உள்ளங்களும் அந்தச் சந்திரிகையில் ஒன்றி விட்டன. அதற்குச் சாட்சியாக தாஜ்மஹால் நின்றது. அடுத்த நாள் சாயாதேவியின் வீட்டிற்கு விருந்தினனாக மது அழைக்கப்பட்டான். 'சாயாமில்ஸ்' சொந்தக்காரர் சக்ரவர்த்தி பாபுவின் மனம் குளிர்ந்துவிட்டது. சாயாதேவியை மதுசூதனனுக்குக் கொடுக்கச் சம்மதித்தனர். கல்யாணத்திற்குத் தேதியும் வைக்கப்பட்டது.

திரும்பவும் ஜமீன்தாரின் மாளிகையில் திருமகள் தாண்டவமாடினாள். மின்சாரச் சரவிளக்குக்கள் இரவில் தெய்வ லோகத்தை நினைவூட்டின. காடுபோல வளர்ந்திருந்த நந்தவனங்கள் சீராக வெட்டப்பட்டு அழகுடன் விளங்கின. கல்யாணம் பெரியதிருவிழாப் போல ஒருமாதம் நடந்தது.

மதுசூதனனுடைய இல்லற வாழ்க்கையில் நாட்கள் ஓடினதே தெரியவில்லை. சாயாதேவி தன்னுடைய ஆடல் பாடல்களினாலும் அன்பினாலும் அவன் மனதை முற்றிலும் அபகரித்துக் கொண்டுவிட்டாள். ஜமீனின் எந்த அந்தரங்க விவகாரமும் அவள் முன்னிலையில், அவளும் கலந்துகொண்ட அளவில் நடக்கும்.

2

எதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும். பௌர்ணமியுடன் அமாவாசையும் வந்துதான் ஆகவேண்டும். கல்யாணம் நடந்து ஒரு வருஷம் ஆவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருந்தன. அதற்குள் சாயாதேவிக்கு வந்த வியாதி அவளுடையகட்டையை மட்டும் பூமியில் கிடத்தி விட்டு உயிரைக் கவர்ந்து சென்றது.

மனைவி இறந்த பத்து நாட்கள் வரையிலும் மதுவை ஒருவராலும் பார்க்கமுடியவில்லை. மாளிகையில் ஒரு அறைக்குள் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு தன்னந்தனியனாக அரற்றினான். எல்லோரும் அவன் சோகத் தீயில் வெந்து இறந்து விடுவான் என்றே நினைத்தார்கள்; சிலர் அவன் சந்நியாசி ஆகி விடுவான் என்று ஜோஸியமும் கூறினார்கள். ஆனால் அதையெல்லாம்அவன் பொய்ப்படுத்தி விட்டுப் பதினைந்தாம் நாள் முதற்கொண்டு ஜமீன் காரியங்களைப் பார்க்க ஆரம்பித்தான்.

ஆனாலும் மதுசூதனன் தன் மாளிகையில் தன் மனைவி இருந்தபொழுது விகசித்த அழகு ஓடிவிட்டதைக் காணத் தவறவில்லை. தன்னில்லத்தில் நுழையும் பொழுது ஏதோ ஒருபக்கத்தில் இருந்து கிளம்பும் 'அவளுடைய' இனிய பாட்டையோ, கலகலவென்ற சிரிப்பையோ இப்பொழுது அவனால் கேட்க

முடியவில்லை. எவ்வளவு பேர்கள் அந்த மாளிகையைச் சுற்றிச் சுற்றி வந்தாலும், அவனுடைய மனதைக் கவர்ந்த ஜீவன் அங்கே இல்லை. அதனால் அவனுக்குத் திரும்பவும் அந்த இடம் சூன்யமாகத்தான் தென்பட்டது.

அன்று பௌர்ணமி. பூர்ணசந்திரன் எதிரில் இருந்த பெரிய அரச மரத்து இளம் தளிர்களில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். தென்றல் காற்று அவனுடைய மனதிற்கு இன்பத்தைக் கொடுக்கவில்லை. மது அமைதியற்ற மனத்துடன் மாடியில் உலாவிக் கொண்டிருந்தான். அந்தச் சந்திரிகை திரும்பவும் அவனை ஆக்ராவிலுள்ள தாஜ்மஹாலுக்கு இழுத்துச்சென்றது. அவன் அங்கே சாயாதேவியைச் சந்தித்ததும், கல்யாணம் செய்து கொண்டதும் நினைவிற்கு வந்தன. இதே எண்ணங்களால் அவனது மனம் சுழன்று சுழன்று வரும் பொழுது திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. தானும் தன்மனைவியினுடைய ஞாபகார்த்தமாக ஒரு அழகிய கட்டிடம் கட்டவேண்டுமென்று நினைத்தான். ஒரு நிமிஷத்தில் தோன்றின அந்த நினைவு அவனுடைய மனதில் ஆழமாகப் பதிந்து அவனை ஒரு முடிவிற்கும் வரச்செய்தது.

3

அடுத்த நாள் சுவர்ண நதியின் கரையில் கட்டிட நிபுணர்கள் பலர் ஒன்று கூடி, கட்டிடத்திற்குப் 'பிளான்' போட்டார்கள். சில நாட்களில் கட்டிடத்திற்கு வேண்டிய சலவைக் கல்லும் சுண்ணும்பும் வந்தமணியமாகவே இருந்தன. நாலா பக்கங்களிலிருந்தும் கைதேர்ந்த கொத்தர்கள் வரவழைக்கப்பட்டனர்; கட்டிடமும் கட்ட ஆரம்பமாயிற்று.

மது ஒவ்வொரு நாளும் கட்டிடத்தின் அருகிலேயே நின்று கொண்டு அப்போதைக்கப்போது திருத்தங்கள் பல சொல்லிவந்தான். கதவுகளை இடம் மாற்றி அமைக்கச்செய்வான்; முடியும் தறுவாயில் இருக்கும் ஒரு சுவரை இடித்து வேறு முறையில் அமைக்கச் செய்யவும் பின்வாங்கமாட்டான். ஒவ்வொரு அங்குல அமைப்பும் திரும்ப வேறு மாதிரியில் மாற்றி அமைத்தால் அக்கட்டிடத்தின் அழகு குறையும் என்று அவன் மனதிற்குப் படும் வரையில் அதை மாற்றத் தவறுவதில்லை. அதேமாதிரிதான் கட்டிட வர்ணங்களிலும் நாளைக்கொரு முறை வர்ணக் குழம்பை மாற்றி மாற்றிப் பூசச்செய்து அதன் அழகைப் பரீக்ஷை செய்வான். இன்று கட்டிடம் முழுதும் பசும் பொன்னால் ஆக்கப்பட்டதாகத் தோன்றும்; அடுத்தநாள் இலைப் பச்சை; கடைசியில் நிலைத்து நின்றது ஆகாய வர்ணமே. இவ்வளவு மாறுதல்களுடன் கடைசியில் 'சாயாமந்திரம்' மூன்றடுக்கு மாளிகையாக அழகுடன் பொலிந்தது.

மதுவினுடைய ஆசைக்கு அளவேயில்லை. கைதேர்ந்த சிற்பி ஒருவனை வரவழைத்துச் சாயாதேவியின் சிலை ஒன்றைச் சமைக்கச் செய்தான். அது அவள் உயிருடன் இருந்த பொழுது இருந்த அளவுடன் அற்புதமாக ஆக்கப்பட்டிருந்தது. சிற்பி அந்தச் சிலையில் உயிரையே ஊட்டியிருந்தான். அது சாயா மந்திரத்தின் முன் கட்டப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடைமீது அமர்ந்திருந்தது.

சாயாமந்திரத்தில் சாயாதேவி உயிருடன் இருந்த பொழுது கையாண்ட பொருள்கள் யாவும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. அவள் அணிந்து கொண்ட நகைகளும், ஆடைகளும் பல பீரோக்களில் வைக்கப்பட்டிருந்தன. அவள் கைபட்ட புஸ்தகங்கள், அவள் உபயோகித்த கட்டில்கள், நாற்காலிகளும் அழகாகத் தனித்தனியாக வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கட்டிடத்தைச் சுற்றிச் சாயாதேவிக்குப் பிடித்தமான புஷ்பச் செடிகளும் பழ மரங்களும் வைத்துப் பயிராக்கப்பட்டன.

மது அந்தக் கட்டிடத்தை யாவரும் காணப் பலவசதிகள் செய்து வைத்தான். அதற்காக ஏராளமான பணியாட்களை நியமித்தான். எல்லாருக்கும் மேலாக, அந்த 'மந்திரத்தின்' தலைவியின் ஸ்தானத்திற்கு துங்காஸதி என்ற ஸ்திரீயை நியமித்தான்.

துங்காஸதி எம். ஏ. பட்டம் பெற்றவள். அற்புதமான அழகும் வசீகரமான பேச்சும் அவளுக்கு அமைந்திருந்தன. சாயாதேவியின் சின்னத்தைப் பார்க்கவரும் பொது ஜனங்களை வரவேற்று, அவர்களிடம் மதுசூதனன்—சாயாதேவி இருவரின் காதற்கதையைச் சொல்லி, சாயாதேவி உயிருடன் இருக்கும்பொழுது அவளுடைய ஆசைகளையும் கனவுகளையும் சித்திரித்து விளக்கி, அந்தச் சின்னங்களையெல்லாம் காண்பித்து, அனுப்பி வைக்க வேண்டியது அவளுடையவேலை.

இவ்வள்வும் பூர்த்தியாக மதுசூதனனுக்கு ஆறு வருஷங்கள் ஓடிவிட்டன. அவனுடைய மனதில் கட்டற்றுத் தேங்கியிருந்த வருத்தம், அந்தக் கட்டிடத்தைக் கட்டச் செய்யும் பொழுது வெகுவாகக் குறைந்திருந்தது.

ஜமீனிலுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கட்டிடத்தைப் பார்த்தனர்; அவர்களுடைய ஆச்சரியம் சொல்லத் தரமன்று; 'உண்மையான காதல் தான் இவ்வளவு தூரம் மனிதனைச் செய்விக்கும்! காதலின் சக்தியை அளக்க எவரால் முடியும்?' என்று சொல்லிக் கொண்டே போயினர். அந்தக் காதலின் சின்னம், சூரியப் பிரபையிலும், சந்திரிகையிலும் ஊருக்கே அழகை அளித்துத் கொண்டிருந்தது.

4

சாயாமந்திரம் முடிவடைந்து ஆறுமாதங்கள் இருக்கும். அமைதி பரந்த இரவு; நிர்மலமான ஆகாயத்தில் அஷ்டமி சந்திரன். மது

எவ்வளவு முயன்றும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையைவிட்டு எழுந்து மேல் மாடியிலிருந்து வெளியே பார்த்தான். அவனுடைய மனைவியின் காதல் சின்னம் அந்தச் சந்திரிகையில் அவனுடைய நிலையற்ற காதல் வாழ்க்கையைக் காட்டி நின்றது. அந்தவேளையில் தன் காதலியின் சிலையைப் பார்க்க வேண்டும் என்ற விசித்திரமான ஒரு எண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. எவரும் அறியா வண்ணம் மாடியினின்றும் இறங்கி, சாயா மந்திரத்தை அடைந்தான். அவனுடைய காதலியின் சிலை அவனைப் புன் சிரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றது. அதன் அருகில் மது அசைவில்லாமல் நின்றுகொண்டிருந்தான்.

'கிளிக்'கென்று கதவைத் திறந்து கொண்டு துங்காஸதி அங்கே வந்ததும் மதுசூதனனைக் கண்டு வியப்புடன் நின்றுவிட்டாள்.

'பாபு! வேலையாட்களைக் கூப்பிடட்டுமா?' என்றாள் சிறிது சமாளித்துக்கொண்டு.

'வேண்டாம்; எனக்குத் தனிமைதான் வேண்டும்............இந்தச் சந்திரிகையில் தான் 'அவளுடைய' ஞாபகம் அதிகமாக வருகிறது............!'

மதுவினுடைய மனம், தான் முதல்முதலாகச் சாயாவைச் சந்தித்தபொழுது ஏற்பட்ட அநுபவங்களைக் கனவுகண்டு கொண்டிருந்தது. தன் காதலியின் சிலையையும், அந்தத் தென்றல் காற்றில் அழகாகப் பறக்கும் தலைமயிருடன் காட்சி அளித்துக் கொண்டிருக்கும் துங்காஸதியையும் மாறிமாறி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான், அடிக்கடி பெருமூச்சு விடும் சத்தம் அந்த அமைதியான இரவில் எதிரொலித்தது.

'என்னைக் கடவுள் இவ்வளவு சோதிக்க வேண்டாம்!' என்றான் சோகத்தால் உடைந்த குரலில்.

'தோட்டத்தில் சிறிது நேரம் உலாவினால் தங்கள் மனம் அமைதியுறும்' என்றாள் துங்கா.

இருவரும் தோட்டத்திற்குள் நுழைந்தனர். வாழ்க்கையில் சுகமும் கஷ்டமும் தென்படுவது போல, மரங்களின் நிழலும், சந்திர காந்தியும் பரவித் தோட்டமுழுதும் காணப்பட்டன. இருவரும் மௌனமாகவே, சுவர்ண நதியின் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

ஆவேசம் வந்தவன் போல, 'சாயா, சாயா!' என்று அழைத்துக் கொண்டே துங்காவின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டான்.

துங்காவிற்குப் பயம் வந்துவிட்டது. நடுக்கத்துடன் 'பாபு' நான் சாயா தேவி......அல்ல; துங்கா......துங்காஸதி......' என்றாள்.

'இல்லை......நீ என்னுடைய சாயாதான்! வா, இதோ நம்முடைய கல்யாண மண்டபம் இருக்கிறது.........வா.........' என்று துங்காவைச் சாயா மந்திரத்திற்குள் பரபரவென்று இழுத்துச் சென்றான்.

துங்காவிற்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. அவனுடைய கைப்பிடியிலிருந்து அவனுடைய உடம்பு கொதிப்பது தெரிந்தது. அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கும் என்று கூட அவள் நினைத்தாள்.

'சிறிது இளைப்பாறுங்கள்? உங்களுக்கு உடம்பு சௌகர்யமில்லை போலத் தோன்றுகிறது!.........' என்று, துங்கா மெதுவாக அவனை ஒரு நாற்காலியில் உட்கார வைத்தாள்.

'சே!......எனக்கு உடம்புக்கு என்ன? என்னுடைய துக்கத்தை ஆற்றிக்கொள்ள அவள் ஞாபகார்த்தமாக இந்தக் கட்டிடத்தைக் கட்டினேன். அது......என்னுடைய சோகத்தை வளர்க்கிறது!'

துங்கா ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டே நின்றாள்.

'துங்கா......இதோ பார்,! இன்று நீ என்னுடைய சாயாதேவியின் ஸ்தானத்தில் இருந்து என் முடிவுகாணாத சோகத்தை நீக்க வழி காணமாட்டாயா?......நான்.........' அதற்கு மேல் மதுவினால் பேசமுடியவில்லை.

அன்றிரவு துங்காஸதி அவனுடைய சாயா தேவியாக மாறினாள், ஏழு வருஷங்களுக்கு முன் சாயா அணிந்துகொண்ட நகைகளும் புடைவைகளும் துங்காஸதியின் இயற்கை அழகைப் பன்மடங்கு சோபிக்கச் செய்தன.

மறுநாள் அந்தப் பழைய சாயா தேவியின் சின்னங்கள் யாவும் மாற்றப்பட்டன. காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த நகைகளும், ஆடைகளும் பெட்டிகளில் புகுந்து கொண்டன.

அடுத்த வாரத்தில் துங்காஸதி ஜிங்கால மடுகுவின் ஜமீன்தாரிணி ஆகிவிட்டாள் என்று பத்திரிகையில் செய்தி வந்தது.

அடுத்த பௌர்ணமி அன்று சாயாமந்திரத்தில் சாயாதேவியின் சிலை காணப்படவில்லை; அது தோட்டத்து மூலையில் ஒரு கஜ ஆழத்திற்கு அடியில் பத்திரமாகப் புதைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது துங்காஸதி மதுசூதனனுடைய காதற்சின்னமாக விளங்குகிறாள்!

தொடர்கதை

இதென்ன உலகம்!

இலா சந்திர ஜோஷி ஹிந்தியில் இயற்றியது

மொழி பெயர்ப்பு—கிருத்திவாஸ்

'பெண்ணினம் ஆணினத்தை வழிபடுகிறது' என்று எந்த முட்டாளோ பிரசாரம் செய்து சென்றுவிட்டான். ஆணின் மனோகரத்தில், மந்திரத்தால் வசப்பட்டதுபோல மயங்கிவிடுகிறது பெண்ணினம். ஆணின் மதன மோகன ஸௌந்தரியத்தில் லயித்து, தான் விரும்பிய புருஷன் ஆண்மைவாய்ந்தவனா, அலித்தன்மை வாய்ந்தவனா என்பதையே அது சிந்தித்துப் பார்ப்பதில்லை. உண்மை வீரத்திற்கு மதிப்பிருந்த அந்தக் காலத்திலேயே உலகத்து மோகினி எனப் பெயர் பெற்ற ஹெலன்—வீரமே உருவெடுத்த ஆண்களை மதிக்காமல் 'நபும்ஸகத்துவம்' வாய்ந்த பாரிஸ் நகரத்தின் அழகில் மூழ்கித் தன் கணவனைப்பிரிந்து சென்று, கிரேக்க ஜாதிக்கே உலை வைத்துவிட்டாள். 'கிங்லியரி'ன் புதல்விகள் காதலித்திருந்த ஆடவனின் நீசத்தன்மை யாவரும் அறிந்ததே. ஸ்பெயினைத் தன் வசப்படுத்த முற்பட்டிருந்த நெப்போலியனுக்கு வெற்றி கிடைத்தது எப்படி? அவ்விடத்து ராணி, அழகு வாய்ந்த ஆடவனொருவனுடன் கள்ளக்காதல்கொண்டு தன் நாட்டையே அழித்துக்கொண்டுவிட்டதினால் தானே! பிரான்ஸின் 'லூயி' வம்சத்துக்கதைகள் யாவரும் அறிந்தனவே! இன்னும், நமது நாட்டிலேயே, தபோவனத்தில் வசித்துவந்த சகுந்தலை, துஷ்யந்தனின் அழகில் மூழ்கித் தானே தன்னுள்ளத்தைப் பறிகொடுத்தாள்? வீரத்தில் மூழ்கியா அவள் தன்னுள்ளத்தைப் அர்ப்பித்தாள், அதற்கு?

உண்மையில் அழகிய உருவம் வாய்ந்த ஆடவனைக் கண்டு பெண்ணுள்ளத்தால் சும்மா இருக்க முடியாது. தன் பலஹீனத்தை எதிர்த்துப் போராடும் எண்ணம் பெண்ணுள்ளத்தில் உதிப்பதே இல்லை. புருஷர்களிடம் அப்படி இல்லை. உண்மையான ஆண்மை வாய்ந்த ஆடவன், அரம்பையருக்குச் சமானமான அழகியாக இருந்தாலும் சரி, கண்ணால் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். ஏதாவது காரணத்தினால் ஒரு அழகியைக் கண்டு தன் ஆசையைத் தடுத்துக்கொள்ள முடியவில்லையென்றாலும், மனப்பூர்வமாகத் தன் உள்ளத்துடன் போராடித்தான் பார்ப்பான். ஆண்களின் இந்தப் போக்கை, என் தம்பியின் வாழ்க்கைச் சரித்திரத்தின்மூலம்தான் கண்டறிந்தேன். அவனுக்கு, இந்தக் குறுகிய வாழ்நாட்களுக்குள்ளேயே தன் மனத்திற்கிசைந்த பெண் கிடைத்தாளோ, என்னவோ, எனக்குத் தெரியாது. எனது தோழிகள், சிநேகிதிகள், காலேஜ் கூட்டாளிகள் முதலியவர்களில் எவ்வளவோ பேரை அவன் அறிவான். எல்லோரையுமே அவன் வெறுத்துத்தான் வந்தான். விரும்பவில்லை என்பதை என் கண்களாலேயே நான் பார்த்துள்ளேன்.

உலகத்தில் எவ்வளவோ மகத்துவம் வாய்ந்த தார்மிக இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றிலெல்லாம் ஆண்கள் பெண்களை மதித்ததே கிடையாது. 'பெண்ணின் ஞாபகத்தை அறவே ஒழித்துவிடவேண்டும்.' என்ற தத்துவத்தில் தான் ஆணினம் மூழ்கியிருக்கிறது. பெண்ணாசையை ஒழித்த பின்பே தான் ஆணினத்தின் தருமம் ஆரம்பமாகிறது. ஆனால் அந்தோ பாக்கியமற்ற பெண்ணே! 'ஆணின் சிந்தனை, கணவனைப் பூஜிப்பது; இவைதான் உனது தருமம். கணவனைத் தள்ளி விடுவாயாகில் உனக்குத் தருமம், அதருமம் என்பதே கிடையாது. ஆணின்றி உன் வாழ்வு சோபிக்காது. புருஷன் உனது வலையினின்றும் விடுபட விரும்புகிறான்; ஆனால், நீ உன் காதற் கட்டில் அவனைக் கட்டிப்போட முயலுகிறாய், இதற்கு என்ன காரணம்! உனக்கு 'அபலைத்தன்மை'யில் கர்வப்படுமாறு உபதேசித்ததுதான், காரணம். அதனால் உன்னுள்ளம் பலஹீனப்பட்டுவிட்டது. பெண்ணினம் தன் உண்மை உருவத்தை அறிந்துகொள்ள முன்வராத வரையில், அதன் உடல், பொருள், ஆவி அனைத்தும், நீசத்தன்மை, அடிமைத்தளை, பாவம் என்ற சேற்றில் அழுந்திக்கிடக்க வேண்டியதுதான்.

அந்தோ! என்ன காரணமோ தெரியவில்லை, பெண்ணினத்தின் 'பாதிவிரத்தியத்தை'ப் பொறுத்தவரையில் எனக்கு நம்பிக்கையே உதிக்கவில்லை. எனது இச்சொல்லைக் கேட்டு ஆண்களுக்குக் கொதிப்பு ஏற்படலாம். பெண்ணுள்ளத்தில் தன் இனத்தினிடம் ஏற்பட்டிருக்கும் பொறுமையை அவர்கள் அறிபவர்களில்லை, ஆனால் என் உள்ளத்துக் குமுறிக் கொண்டிருக்கும் தீ, பழிவாங்கும் நோக்கம், இவைகளைப் பெண்ணினம் நன்கு அறிந்து, துர்ப்பாக்கியவதியான என்னிடம் அனுதாபம் காட்டத் தவறாது என்று திடமாக நம்புகிறேன்.

'இது ஏதடா இது, தன்னைப்பற்றிய வருணனை அதிகமாகவும், கதை ஓட்டம் குறைவாகவும் இருக்கிறதே' என்று ஒருகால் வாசகர்கள் நினைக்கலாம். 'எனது கதையில் கதை ஓட்டம் அவ்வளவு முக்கியமானதல்ல. வருணனைதான் அதிக முக்கியம். வருணனைதான் என்கதை. என்கதை தான் வருணனை' என்பதை நான் சொல்லவா வேண்டும்?

12

ஒரு நாள் தந்தை ஏதோ, காரணமாகத் தம் நண்பர்களுக்கு விருந்தளிக்க எண்ணினார். எல்லாருக்கும் அழைப்பு அனுப்பப் பட்டது. ஆனால் முற்கூறப்பட்ட இரு வாலிபர்களுக்கும் வேண்டுமென்றேயோ அல்லது, மறதியினாலோ அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை. எனக்குச் சிறிது கோபம் ஏற்பட்டது. இவ்விஷயத்தைத் தந்தைக்கு ஞாபகப்படுத்தினேன். கூர்ந்த அறிவுடைய எனது தந்தை, கண்களில் புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு, 'ஏதோ மறந்தே போய்விட்டேனே! நல்லவேளை, ஞாபக மூட்டினாய்; இதோ அனுப்பிவிடுகிறேன்' என்று கூறினார். எனது வருங்கால அழிவை அறிந்தும் அவர் என்பாலுள்ள பிரியத்தினால், எனது வேண்டுகோளை மறுதலிக்காமலிருந்தார்.

விருந்து அன்றைய தினம், குறிப்பிட்ட நேரத்தில் ஒவ்வொருவராக எல்லோரும் வரவாரம்பித்தனர். அந்த இணைபிரியா—அசுவினி குமாரர்களைப்போன்ற—நண்பர்களிருவரும், நன்கு அலங்கரித்துக் கொண்டு, ஒருவிதப் புதுமை வீச வந்து சேர்ந்தனர். 'புகைந்தால் நிச்சயம் நெருப்பு இருக்கிறது' என்று ஒரு நியாயம் சொல்வார்களே! அதே மாதிரிதான், 'டாக்டரைப் பார்த்து விட்டால் புரொபஸர் இருக்கிறார்' என்று கண்ணை மூடிக்கொண்டே சொல்லிவிடலாம். இவ்விருவரையும் பார்ப்பதில்தான் ஜனங்களின் கண்கள் முனைந்திருந்தன. இருவரது முகம், உடை, நடை, பேச்சு எல்லாவற்றிலும் ஒருவித வசிகரண சக்தி நிலவியிருந்தது என்றே கூறிவிடலாம். பெண்கள் மயங்கினார்கள் என்றால் அது இயற்கை. ஆண்களும் ஆழ்ந்து கிடந்தார்கள் அவர்களது உருவத்தில், மயங்கி, என்றால், அவர்களது அழகைப்பற்றிச் சொல்வானேன்!

அவ்விரு நண்பர்களையும் என் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துத் தனது அதே பழைய பரிகாஸப் புன்முறுவல் ததும்ப—ஞாபக சக்திக்குறைவு காரணமாகத் தங்களிருவருக்கும் அழைப்பு அனுப்ப மறந்துவிட்டேன். நம் 'லஜ்ஜா' சரியான சமயத்தில் ஞாபக மூட்டினாள், அதனால் நீங்களிருவரும் அவளுடன் தான் உட்கார வேண்டும்' என்று என்னையும் கூர்ந்த பார்வையில் பார்த்து விட்டு மற்ற நண்பர்களை வரவேற்கச் சென்று விட்டார் எனது தந்தை. வெட்கம் சங்கோசம் இரண்டும் என்னைப் பிடுங்கித் தின்றன. ஆனால் அவ்விரு நண்பர்களும் ஒருவிதப் புன்னகையுற்றனர்.

முதன் முதல் அறிமுகம் ஏற்படும் பொழுது ஏற்படும் நாணம் எவ்வளவு பயங்கரமானது என்பதைப் பெண் வாசகர்கள் நன்கறிவார்கள். எனது முகம் வெட்கத்தால் சிவந்தது; தேகத்தில் வியர்வை துளிர்த்தது. டாக்டர் கன்னையாலால் 'ஆண்களுக்கியற்கையான கம்பீரத்வனியில் 'லஜ்ஜா' என்ற பெயரைச் சூட்டித் தங்கள் தந்தை தம் புத்திக்கூர்மையை வெளிக்காட்டி யிருக்கிறார். நாணத்திற்குப் பெண்ணினம் பெயர் போனது தான். ஆனால் படித்த பெண்மணிகளும் நாணிக் குனிவார் என்று எனக்கு இதுவரை தெரியாது' என்றார்.

இன்றுதான் டாக்டர் என்னுடன் முதன் முதலாகப் பேசினார். ஆனந்த உணர்ச்சியில் ரோமங்கள் சிலிர்த்தன. சங்கோசத்தைக் கூடிய வரை வெளிக்காட்டாத ரீதியில், 'அப்படியானால் 'நாணம்' என்பதை ஒருதுர்க் குணமாகத் தாங்கள் கருதுகிறீர்களா?' என்று புன்முறுவலுடன் வினவினேன்.

புரொபஸர் கிசோரிமோகன், நாணத்தைத் துர்க்குணமென்று சொல்லாது போனாலும், நற்குணம் என்றும் சொல்வதற்கில்லை. ஒரு விதத்தில் நம் நாட்டுப் பெண்மணிகள் இவ்வளவு தாழ்வுற்றிருப்பதற்குக் காரணம் அந்த நாணம் தானே என்று கூடத் தோன்றுகிறது. இந்த நாணத்தை விலக்கி விட்டால் அவர்களுக்கும்சமூகத்தில்'பிரஸித்தி' யேற்படும் என்பதுஎனதபிப்பிராயம்?' என்று பதிலளித்தார்.

டாக்டர் கன்னையாலால்:—மன்னிக்கணும் புரொபஸர். நான், நீங்கள் கூறுவதை ஒத்துக் கொள்ளத் தயாராயில்லை. நாணம் என்பது பெண்ணினத்தின் ஒப்புயர்வற்ற பெருங் குணம். அக்குணம் தான் பெண்கள்பால் ஆண்களைக் கவருகிறது. 'நாணம்' என்பது அவசியத்தைக் காட்டிலும் அதிகமிருக்கக் கூடாது. அதுமட்டுமல்ல, எந்த வஸ்துவுமே 'அதிஸர்வத்ர வர்ஜயேத்' என்ற சாணக்கிய நீதிப்படித்தானிருக்க வேண்டும்.?

நான், நாணத்தின் அணை சிறிது உடைந்ததும், இனிய புன்முறுவலுடன், விழிகளால் இருநண்பரது உள்ளத்தையும் துளைத்துக் கொண்டு டாக்டரிடம் கூறலானேன், 'நாணம்' என்பது எவ்வளவு அவசியமானது, எவ்வளவு அவசியத்திற்கவசியமானது என்பதற்குக் கணக்குவைத்துக் கொள்ள முடியுமா, 'எலெக்டிரிக் கரெண்டு' எவ்வளவு 'கன்ஸம்ப்ஷன்' ஆகிறது என்று தெரிந்துகொள்ள 'மீட்டர்' வைத்துக்கொள்வது போல? நாணத்தைக் குறைத்துக்கொள்வதோ, அதிகரித்துக் கொள்வதோ நம் கையிலிருக்கிறதா? ஆனால் நீங்களோ, டாக்டர். 'நரம்புகளிலேற்படும் விசேஷஉணர்ச்சிகாரணமாகத்தான்'வெட்கம்' என்று ஒன்று ஏற்படுகிறது. அது, மென்மையான நரம்புகளையுடையவனை விட்டுப் பிரியாது. மென்மையான தேகம் படைத்தவர்கள் வெட்கத்தைவிட்டுவிட முடியாது.

பெண்கள் மென்மையான தேகம் படைத்தவர்கள் ஆதலால், அவர்களது முகம் வெட்கத்தால் சிவந்துவிடுகிறது' என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். ஆம், நீங்கள் நரம்புகளைப் பலமானதாகவும் புஷ்டியானதாகவும் செய்வதற்கு ஏதாவது மருந்தொன்று 'பிரிஸ்கிரைப்' செய்து கொடுத்தால் சரியாகிவிடுகிறது.

என் கடைசி வார்த்தைகளைக் கேட்ட புரொபஸர் உரக்க நகைத்தார். டாக்டர் ஆனந்த உணர்ச்சியில் மிதந்தார்.

புரொபஸர் கூறினர்:— 'பேஷ், நல்லபோடு போட்டீர்கள். 'நாணம்' நரம்புகளின் மூலம் உண்டாகும் வஸ்து வென்றால், டாக்டர் சிகித்ஸை செய்யப்படவேண்டியது தான். டாக்டருக்கு இதற்கு 'மருந்து' தெரியும் என்று நினைக்கிறேன். இந்த வியாதிக்குச் சாப்பிடக்கூடிய மருந்தாக இராது. மேல் நாடுகளில் 'ஹிப்நாடிஸம்' 'வசிகரணம்' முதலிய சக்திகளால் சிகித்ஸை நடந்து வருகிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்களோ, என்னவோ? டாக்டர் இந்த வித்தைகளிலும் தேர்ச்சிபெற்றவர். தெரியாமலேஎவ்வளவோ, வியாதிகளைக் குணப்படுத்தி விடுகிறார். உங்களுக்கும் 'ஹிப்நாடிஸ் சிகித்ஸை' ஆரம்பித்திருப்பார். இல்லையேல் சீக்கிரமே ஆரம்பித்து விடுவார் என நம்புகிறேன்''

டாக்டரின் வார்த்தைகளைச் செவியுற்றபின் என் 'நாணம்' எங்கோ பறந்துவிட்டது என்பதை யறிந்துதான், புரொபஸர் என்னைப் பரிகசித்துக்கொண்டிருந்தார். டாக்டரின் கண்ணொளியும் பேச்சும் 'ஹிப்நாடிஸத்தை விடசக்தி வாய்ந்தவை, மோகன சக்தி வாய்ந்தவை, மோகன சக்தி நிரம்பியவை என்பது எனதபிப்பிராயம்.

13

இரு ஆடவர் என்னுருவத்தில் மயங்கி, புகழ்ந்து, பூரிப்பதைக்கண்டு, நாமும் ஒரு 'மகாராணி' என்ற எண்ணம் எனக்கு உதித்தது. நாங்கள் பேசிக் கொண்டிருந்த பேச்சில் ஒரு ஸ்வாரஸ்யமோ, மதிப்போ இல்லை. ஆனால் எங்களுள்ளத்தில் ஊடுருவிப்பாயும் காந்த சக்தி] அழியாதநிலை பெற்றுவிடும் என்று என் மனத்தில் ஏதோ கூறிக் கொண்டிருந்தது.

ஹிப்நாடிஸம், மெஸ்மெரிஸம், மெக்நாடிஸம் முதலிய வித்தைகள் கவைக்குதவாதவை. மேல்நாட்டில் 'மெடிகல் ஸயன்ஸைப்போல இவ்வித்தைகளும் பிரயோக மூலமாகக்கூட கற்பிக்கப்படுகின்றன. கேவலம் புஸ்தகம், லேபரெட்டரி முதலியவைகளில் கற்ற வித்தையைப் பெரிதாகக்கருதிக்கர்வமடைந்து விடுகிறன். மானிட சக்தியைச் சடமாக்கி, தன் இஷ்டப்படி ஆடவைத்தல், இயற்கையைத்தன் கைக்குள் போட்டுக்கொள்ளுதல் முதலியவை புஸ்தகத்திலுள்ள நியமங்களைப் படிப்பதனால் வந்துவிடக் கூடியவையா? நம் நாட்டுப்புறத்து நண்பர்கள் முராதாபாத் மதுரை முதலிய இடங்களில் பிரசுரமாகியிருக்கும் இந்திரஜால தந்திரஜால புத்தகங்களைப் படித்து 'ஹிப்நாடிஸ்ட்' ஆக விரும்புகின்றனர். 'ஹிப்நாடிக் ஸயன்ஸ்' என்ற அயல்நாட்டுப் புத்தகங்கள் நம் நாட்டு இந்திரஜால வித்தைப் புத்தகங்களைக் காட்டிலும் உயர்ந்தவையல்ல; இந்த இந்திரஜாலங்களில் ஆத்மானுபவத்திற்கு மகத்துவமே கொடுக்கப்படவில்லை' என்று உரைத்தார் டாக்டர்.

'ஹிப் நாடிஸம்' என்பதை வெறும் சப்த ஜாலம் என்று நினைக்கிறீர்கள்?' என்று கடுகடுப்புடன் கேட்டார் கிசோரி மோகன்.

ஒருகாலுமில்லை. 'ஹிப்நாடிஸம்' என்ற வார்த்தை அகராதியிலிருக்கும் பொழுது, ஏதாவது அர்த்தமில்லாமலா இருக்கும்? 'ஹிப்நாடிஸம்' புஸ்தகங்கள் மூலம் பயிலக்கூடிய வெளிக்கல்வியல்ல. மனிதனின் உள்ளத்துப்போக்கிற்குத் தக்கவாறு விகஸிக்கும் வித்தை அது. மகாத்மா புத்தர், மனித ஜாதியை எந்த வித்தைமூலம் ஆகர்ஷித்தார்? அவர் சென்னை மாகாணத்து அடையாறு பப்ளிஷிங்க்ஹௌஸ்மூலம் வெளியிடப்பட்ட வசீகரண யோகத்தைப் படித்திருந்தாரா அல்லது திருவல்லிக்கேணி பிரசுர கர்த்தர்களின் 'மெஸ்மெரிஸ'த்தைப் பயின்றாரா, அதற்கு?

டாக்டர் கன்னையாலால், ஆரம்பத்திலிருந்தே புரொபஸரைத் தோற்கடிக்க முயன்று கொண்டிருந்தார். இதற்கேற்றாற்போல் புரொபஸரும் தம் ஏளனவார்த்தைகள் மூலம் உரமேற்றிவந்தார். இதற்குக் காரணம் என்னவோ, ஒருகால் இருவருக்குமுள்ள போட்டியாயிருக்கலாம். எதுவாயிருந்தால் என்ன? எனக்குக் கர்வம் தலைக்கேறியது.

புரொபஸர் கிசோரிமோகன், ''மகாத்மா புத்தர் காலத்தில் 'ஹிப்நாடிஸம்' பிரசாரத்தில் இல்லை என்று நினைக்கிறீர்கள்? அதெப்படிக் கூறமுடியும்? 'ஹிப்நாடிஸம்' இல்லையென்றால், ஹடயோகம், ராஜயோகம் முதலிய அநேக யோகங்கள் இருந்தன, இவைகளெல்லாம் 'ஹிப்நாடிஸத்தின் மாற்று உருவங்கள். புத்தர் இந்த யோகங்களைப் பின்பற்றவில்லை என்று எவனுல் கூறமுடியும்?' என்று கேட்டார்.

புரொபஸரின் இந்தப் பேச்சு ஹாஸ்யம் நிறைந்ததாகத் தோன்றியது. அதனால் டாக்டர் 'கலகல'வெனச் சிரித்தார். டாக்டருக்குத்தான் 'வெற்றி' என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கிசோரிமோகனின் முகம் குன்றிவிட்

டது. தோல்வியுற்ற புரொபஸர் என்னையும் டாக்டரையும் மாறி மாறிப்பார்த்தார், டாக்டர் இவ்வேடிக்கைத் தர்க்கத்திற்குப் பதில் அளிப்பதை உசிதமென நினைக்கவில்லை. அவர் தம் மனப்போக்குப்படிக் கூறலானார். 'ரமணிகள் தங்கள் மோகன உருவத்தின் உதவியைக் கொண்டு உலகத்தையே ஆட்டிவைக்கிறார்கள். காந்த சக்திவாய்ந்த இரும்புப் பாறையைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த பெண்ணுள்ளம் ஆணினத்தைப் பிடித்து இழுக்கிறது. தன் அழகு என்னும் 'மெக்னாடி'ஸத்தின் உதவியைக்கொண்டு, ஆணுள்ளம் அதன் சக்தியில் சிக்குண்டு, மோதித் துகள்துகளாக ஆவதற்கும் அஞ்சுவதில்லை. பெண்களின் அழகு, உள்ளம், இரண்டிலும் உள்ள ஆகர்ஷணசக்திக்குக் காரணம், அவர்கள் ஏதோ யோகசாஸ்திரம் பயின்றிருக்கிறார்கள் என்று சொல்வதா என்ன?' பேய்ச்சிரிப்புடன் தன் பேச்சை முடித்துக்கொண்டார், டாக்டர்.

புரொபஸர் பேசாமலிருப்பதைக் கண்ட நான், ஒரு அலாதி நெளிப்பு நெளித்துக் கொண்டு, 'உங்களுள்ளமும் பெண்களுள்ளம் என்ற காந்தப்பாறையில் மோதித் தூள் தூளாகி விடுமோ?' என்று வினவினேன், டாக்டரை.

இக்கேள்வி கேட்டதும், நாணத்தால் வெட்கிக் குனிந்தேன். புரொபஸர் சற்று உரக்கவே சிரித்துவிட்டார். கூட்டத்துக் கண்களெல்லாம் எங்களை நோக்கின. என் வெட்கமற்ற முட்டாள் தனத்திற்காக வருந்தினேன். என் உள்ளம் படபடத்துக் கைகால்கள் 'வடவட'வென்று உதறின. ஓர் ஆண் பிள்ளையிடம் இம்மாதிரி கேள்வி கேட்டு விடுவேன் என்று நான் கனவிலும் கருதவில்லை.

ஆனால் டாக்டர் முல்லைப் புன்முறுவலுடன், கூர்மையான பார்வையில் என்னை நோக்கினார். அவரது அக்கூரிய பார்வைத்தீயின் காரணமாகப் புளகமுற்று உருகினேன். அவரது கண்களின் மின்னொளியில் என் கண்கள் பூச்சி பறந்தன. ஆசையிருந்தும் நிமிர்ந்து நோக்க முடியவில்லை, அவரை அரைக்கண்களுடன் சிறிது மேலும் கீழும் நோக்கி, வெட்கத்தினால் நாணிக் கண் புதைத்தேன். எனது கண்களின் மோகன சக்தி இருமடங்கு அதிகரித்து விட்டதோ என்று தோன்றியது. தனது கூரிய பார்வையின் சக்தியைக் கொண்டு, என்னுள்ளத்தில் இருப்பதை எப்படிக் கண்டறிந்தாரோ தெரியவில்லை. "உண்மையாக அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? என்று ஒரு கேள்வியைப்போட்டு வைத்தார். அவரது கண்களில் வரட்டுச் சிரிப்புத் தாண்டவமாடிக்கொண்டிருந்தது.

'இதென்ன அதிசயக் கேள்வி கேட்கிறீர்களே?' என்று மென்மையாக நடுக்கத்துடன் வினவினேன்.

'நீங்கள் அதிசயக்கேள்வி கேட்கிறீர்களா அல்லது நானா?—சரி!' அவரது விழிகளில் அதே வரட்டுப்புன்முறுவல் மறுபடியும் உதித்தது. நான் அதன் மயக்கத்தில் அபினியருந்தியவள்போல மயங்கிவிட்டேன்.

14

காதற் பேச்சு ஆரம்பமாவதற்குள்ளேயே, எனக்கு அது திகைத்துவிட்டது. என்னுள்ளத்தில் ஒருவித வெறுப்புமூண்டது. ஒரு குற்றமுமறியாத என் தந்தையை நிந்தித்துக் கொண்டும், தன்னைத்தானே நொந்துகொண்டும், நடுச்சபையில் எழுந்து பேசாமல் செல்லுவது அனுசிதம், நாகரிகத்திற்குப் புறம்பானது என்பதை அறிந்தும் வெளியேறினேன். வெளியே ராஜு லீலாவுடன் 'பாட்மின்டன்' விளையாடிக்கொண்டிருந்தான். உள்ளேயோ, மாபெருந் தலைவர்களும்,பிரசித்தபெற்ற மாதர்களும் குழுமியிருந்தனர். வேடிக்கை கேலிப் பேச்சுக்கள் இவை நடந்துகொண்டிருந்தன. உள்ளே வந்திருந்த இளம் மாதர் புதுப்புது 'மோஸ்தரில்' விதவிதமான அலங்காரங்கள் செய்துகொண்டு 'அழகுப்போட்டி' நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் ராஜு இவ்விஷயங்களில் சிறிதும் தன் கவனத்தைச் செலுத்தவில்லை. அர்த்தம், காமம் என்ற பேய்கள் தலைவிரித்தாடும் இக்கூட்டத்தில் வைராக்கியமே உருவெடுத்த அங்நக்ஷத்திரம் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

லீலாவின் நிஷ்களங்கமான இயற்கைக் கேலி விளையாட்டுக்களை அனுபவித்துக்கொண்டிருந்தான் ராஜு. எனக்கு என்னவோ, அது சிறிதும் பிடிக்கவில்லை. இருவரையும் உற்று நோக்கினேன். கண்களில் நீர்த்திவலை சுரந்தது. கண்ணைத் துடைத்துக்கொண்டு இருவரையும் நெருங்கினேன்.

லீலா என்னருகில் ஆசையுடன் ஓடிவந்து புன்முறுவலுடன் 'அக்கா நான் முதல் கேமில் தோற்றுவிட்டேன். இரண்டாவது கேமிலும் அண்ணாதான் அதிகப் 'பாயிண்ட்' எடுத்திருக்கிறான். எனக்குப் பதிலாக நீ விளையாடி ஜயித்துத்தாயேன்' என்றாள். என் மனம் ஒரு நிலையில் இல்லை. இருந்தாலும் லீலாவின் அன்பு ததும்பும் வேண்டுகோளைத் தவிர்க்க முடியவில்லை. 'சரி, நான் உனக்காக விளையாடுகிறேன்' என்று கூறி ரேகிட்டை வாங்கி ஆடவாரம்பித்தேன். ராஜு இவ்விளையாட்டில் வெகு சமர்த்தன். என்றாலும் அவனைத் தோற்க அடிக்கமுடியவில்லை. இதைக் கண்ணுற்ற லீலாவின் வதனம் சுண்டிவிட்டது. நான் மனதுள் கூறிக்கொண்டேன், "அந்தோ பிரியமுள்ள தங்கையே! இன்னும் உனக்கு உலகம்—உள்ளம் இவைகளை அறிந்துகொள்ளும் வன்மை உண்டாகவில்லை. ஒருநாள் உன்னுள்ளமும் இயற்கையின் பயங்கரத்தீயில் சிக்கிக்கொள்ளும். அப்பொழுது 'இவ்

வுலகம் ஆனந்தத்தில் மூழ்கிச் சந்தோஷமாக வாழ்க்கையைக் கடத்த எண்ணும் பெண்களுக் குரியதல்ல' என்பது தெரியவரும். 'சந்தோஷ வாழ்க்கை' என்ற படிப்பினையைப்பெற்ற பெண்கள் வாழ்வு பூராவும் இத்தீயில் வெந்து கொண்டுதானிருப்பர். அவர்கள் தலையில் இதுதான் எழுதப்பட்டிருக்கும் அம்மா.''

ஆனால் காரியம்?—பெண் என்ன காரியம் செய்யக்கூடியவள்! அர்த்தம், காமம், புவி யின் ஐச்வரியம் இவை நிறைந்த வீட்டில், கடவுளால் படைக்கப்பட்ட நாங்கள், என்ன வேலை செய்வது? நான் என்ன காரியத்தை நிர்வகிப்பது? ஏழைக் குடும்பத்தில் பிறந்த மாதர்களுக்கென இயற்கை கடமையை நிச் சயித்துவிட்டது. அவர்கள் சகோதரன்—சகோதரி, குழந்தை குட்டிகள் இவைகளைப் பராமரிப்பது, சமைப்பது, நெல் குத்துவது, மாவரைப்பது, பாத்திரங்கள் தேய்ப்பது, அதி திகள், தாய், தந்தை, மாமனார், மாமியார், கணவர், கொழுநன் முதலியவர்களுக்குச் சிச் ருஷை செய்வது முதலிய காரிய பாரங்களில் அழுந்திக்கிடக்கின்றனர். இந்தமாதிரியான சுயநலமற்ற, நிஷ்காம தர்மத்தில் ஈடுபடுவதி னால் ஸ்வர்க்க ஸுகம் கிடைக்கிறது. ஒரு கால் ஸ்வர்க்கமே கிடைக்குமோ, என்னவோ! ஆனால் எங்களிரு சகோதரிகளுக்கும் இப் புண்ணிய காரியத்தில் ஈடுபடும் பாக்கியம் கிட்டக்கூடியதுதானா? எந்தக்கார்யத்திற்கும் எங்கள் வீட்டில் வேலையாட்கள் நிரம்பியிருந் தனர். ஒரு தூசியை எடுக்கும் பாக்கியம் கூட எங்களுக்குக் கிட்டுவதில்லை. இப்படி இருக்கும்பொழுது, சுக ஸ்வப்பனங்களிலும், ஆனந்தக் கேளிக்கைகளிலும் மூழ்கியிருப்ப தைத்தவிர, எங்கள் உள்ளத்திற்கு வேறென்ன வேலை? இந்தக் கர்மபூமியில் பிறந்து சுகஸ் வப்பனங்களில் லயிக்கும் என் வாழ்க்கை வியர்த்தமாகிக்கொண்டிருக்கிறது என்பதை நான் நன்கறிவேன். கடமையில் மூழ்கும் ஆவல் மனத்துள் உதித்திருந்தபொழுதிலும், பிரவேசிக்க வழிதெரியவில்லை. விவாகமாகி யிருந்தாலாவது ஒரு வேலையில் ஈடுபடவழி யுண்டு. கணவன்—குழந்தைகளைப் பராமரிப் திலேயே பொழுதுபோய்விடும். வேறு சிந்தனை களில் மனம் நாடாது. ஆனால் அந்தப் பாக் கியமும் எனக்குக் கிட்டவில்லை. என் பிரச்னை எப்படிப் பட்டது? ஒரு புறம் முறுக் கான யௌவனப் பருவம் என்னை ஏதாவது செய்ய முறுக்கேற்றிக்கொண்டிருந்தது. மறு புறம் நான் காரியமில்லாமல் கொந்தளித்துக் கொண்டிருந்தேன் உள்ளுக்குள்.

நான் இம்மாதிரி சொல்வதைக் கேட்டு எல்லாரும் ஏளனம் செய்வார்கள் என்பதை நன்கறிவேன். வேலை ஏதாவது செய்யவேண் டுமென்று அவா உன்னுள்ளத்தில் உதிக்கு மாகில் தேச சேவை செய்வதற்கென்ன? பொதுக் கூட்டங்களில் சர்க்கா பிரசாரம் செய்தல், கிராமப் புனருத்தாரணத்தில் ஈடு பட்டு மாதர்களுக்குள் ஒருவித விழிப்பை ஏற்படுத்துதல் முதலிய காரியங்களைச் செய்து பொழுதைப் போக்கக்கூடாதா? இந்தக்காரி யம் எல்லாக் காரியங்களிலும் மேலானவை. உன்னைப் போலொத்த ஸ்வபாவம் வாய்ந்த பெண்களுக்கு இவை தகுதியானதுதான் என் றும் கூறுவார்கள்.

'அந்தோ! இக்காரியம் தாமஸ குணத்தின் மாற்றுருவம் என்பது தெரியாதா? பெண் ணுள்ளத்தில் ஏற்படும் காரிய ஆசை இந்த உபயோகமற்ற காரியங்களால் பூர்த்தி அடை யாது. பிரஸங்கம் புரிதல், பொது ஜனங் களின் சந்தோஷ ஆரவாரத்தில் பூரித்தல். மாலைக்குவியல்களில் மூழ்கிக் கிடத்தல், அரசியல் விருந்துகளில் திருப்தியுறுதல், மோட்டாரில் அமர்ந்து ஊர்வலம் வருதல், பக்த கோஷ்டிகளுக்குக் காட்சி அளித்தல் இவைகளினால் தேசத்திற்கோ மக்களுக்கோ என்ன பிரயோசனம் கிட்டப்போகிறது? இக்காரியங்களில் 'தியாகம்' என்பது உண்டா?

கிராமத்துப் பெண்டிர்களுக்கு அரசியல் ஞானம் தேவையாம்! நிர்ப்பாக்கியசாலியான இத்தேசத்தில் 'மாதர் விழிப்பு' என்றால் ஏதோ பெரிய விஷயமாகக் கருதுகிறார்கள். ஈச்வரனால் ஆமோதிக்கப்பட்ட கடமைகளைப் கடைப்பிடித்து ஒழுகுபவர், நம் நாட்டுக் கடமை வழுவாத கிராமத்துப் பெண்டிர்கள் தாம் என்பதைச் சிந்திப்பாரில்லை. அரசியல் உரிமைகளுக்காகக் கௌன்ஸிலில் விவாதிக் கும் அறிவு, பெண்களுக்கு எவ்வித முன் னேற்றத்தை அளிக்கப்போகிறது?

—15—

ஒரு 'கேம்' கூட விளையாட்டில் பூர்த்தியாகி இராது. டாக்டர் தம் இயற்கையான குறும் புப் புன்முறுவலுடன் 'பாட்மிண்டன்' கோர்ட்டில் வந்து நின்றார். அவர்மட்டும்தான் வந்திருந்தார். புரொபஸர் கிசோரிமோகன் வரவில்லை. சிறிது நேரத்திற்கு முன்புதான், அவர்களை அவமதித்து, அவர்களிடம் ஒருவித வெறுப்பைக் காட்டிவிட்டு, எனது அற்புத மான சஞ்சல ஸ்வபாவத்துடன், எழுந்து வெளிவந்திருந்தேன். ஆனால் மறுபடியும் அவரைக்கண்டதும், வாழ்வைப்பற்றிய கவ லையை அடியோடு மறந்து, அவரது வர்ணிக்க வொண்ணாத' அழகின் இனிமையைப் பருக ஆரம்பித்து விட்டேன். 'என் வாழ்வு இன் னும் வீணாகிவிடவில்லை—ஆண்களின் காதலைப் பெற்று ஆனந்தமெய்தும் தருணம் இனித் தான் ஆரம்பமாகப்போகிறது' என்ற சிந்த னையில் மூழ்கி, 'அழியா யௌவனம்' 'நசிக் காத வாழ்க்கை' என்பவைகளைப் பற்றிக் கனவு காணலானேன்.

'இதென்ன இது! உங்கள் 'ஹெல்த்'திற்கு இவ்வளவு எக்ஸர்ஷன் கூடாது என்பது தெரி யாதா உங்களுக்கு? இம்மாதிரியான 'நர்வ்ஸ்

டிஸீஸ்' களுக்கெல்லாம் 'கம்ப்ளீட் ரெஸ்ட்' தான் தகுந்த டிரீட்மெண்ட். கான்ஸர்வேஷன் ஆப் எனர்ஜீயின் அவசியத்தை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்' என்று டாக்டர் வந்ததும் உபதேசிக்க ஆரம்பித்துவிட்டார்.

டாக்டருடன் முதன் முதலாகப் பேசினது இன்றுதான். இதற்குள் இவ்வளவு அதிகப் பிரஸங்கித்தனமாக அவர் பேசுவது என் மனத்தில் பட்டிருக்கவேண்டும். ஆனால் உண்மையில் படவில்லை. டாக்டர்களின் 'பிரிவிலேஜ்'—விசேஷ உரிமை இதற்குக் காரணமாயிருக்குமோ என்னவோ! ஆனால் ஒரு சிறு சந்தேகத்துடன் ராஜுவின் முகத்தை நோக்கினேன். டாக்டரிடம் அவன் கொண்டிருக்கும் அலாதி வெறுப்பை அவனது முகபாவம் காட்டியது. நான் சிறிது பதட்டமடைந்தேன். ஒரு ஜன்ம விரோதியைப் பார்ப்பதுபோல டாக்டரை ராஜு கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். நான் தலைமுதல் கால்வரை நடுங்கினபொழுதும், டாக்டரது வார்த்தைகளுக்குப் பதில் கொடுக்காமல் இருக்கமுடியவில்லை.

'உலகத்தில் அனுபவசாலிகளெல்லோரும்,' அவயவங்களுக்குச் சரியான வேலை கொடுத்தால் தேகாரோக்கியம் கெடாது என்று கூறுகிறார்கள். ஆனால் நீங்களோ அதற்கு 'ரெஸ்ட்' கொடுக்கவேண்டுமென்று புதிதாகக் கூறுகிறீர்களே!" என்று கேட்டேன் மந்தஹாஸத்துடன்.

ராஜுவின் முகபாவத்தைக் கண்டதும் டாக்டரின் முகத்தில் மலர்ந்திருந்த முல்லைச்சிரிப்பு மாயமாய் மறைந்தது. இருந்தாலும் கூடிய வரை தம்மைச் சமாளித்துக்கொண்டு, "இது தான் லேடெஸ்ட் தியரி" என்றார்.

திடீரென ராஜு கலகல வென நகைத்தான், எதற்குச் சிரித்தானோ, எனக்குத் தெரியாது. அவனது இடது கையில் 'நூல் பந்து'ம் வலது கையில் 'ரேகிட்'டுமிருந்தன. 'நூல் பந்தை, உயர விட்டெறிந்து 'ரேகிட்'டினால் ஓங்கி அடித்தான். பந்து வானத்தில் மறைந்தது. 'எங்கு விழுந்தது' என்பதைச் சிறிதும் கவனியாமல் டாக்டர் முன்னிலையில் வந்து நின்றான். அவனது தேகாரோக்கியம், அழகு, திடம், களை இவைகளைக்கண்டு ஸ்தம்பித்து நின்றார் டாக்டர். பொய்க் கௌரவம் பாராட்டும் டாக்டர் உண்மைக்களை வாய்ந்த ராஜுவைக் கண்டு பின் வாங்குவதைக் காண, என்னுள்ளம் பூரித்தது. ஆனால் 'ராஜு எதையாவது உளறிவைக்காமலிருக்கவேண்டுமே' என்று மட்டும் ஹிருதயம் துடித்துக் கொண்டிருந்தது. 'பாட்மிண்டன்' கோர்ட்டைவிட்டு நகர்ந்து வர என் மனம் ஏனோ துணியவில்லை.

ராஜு ஏளனப் புன்முறுவலுடன் 'உங்களது இந்த 'லேடஸ்ட் தியரி' வெகு விசித்திரமானது' என்றான்.

என்னைச் சிறிது சமாளித்துக்கொண்டு முன்னேறி, 'இவன்தான் என் தம்பி ராஜு, டாக்டர்.—ராஜு, இவர்தான் டாக்டர் கன்னையா லால் என்பவர்' என்று பரிச்சயம் செய்து வைத்தேன்.

பரஸ்பர வணக்கம் முடிந்தபின். 'தங்கள் தந்தைமூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை இன்று காணும் பாக்கியம் கிடைத்தது பற்றி மகிழ்வுறுகின்றேன். தங்கள் வதனமும் சரீரமும் பார்க்கத் தக்கவைதான் என்பதில் சந்தேகமில்லை.

'டாக்டர் ஜனங்களைத் தம் பக்கம் வசீகரிக்கும் குணம் வாய்ந்தவர்' என்று புரோபஸர் கிசோரி மோகன் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனக்கும் சிறிது அதில் அனுபவமுண்டு. ஆனால் ராஜுவைப் போன்ற ஸ்வபாவம் வாய்ந்தவர்களும் உண்டு. அவர்கள் பிறரது மோகன சக்தியில் மயங்கமாட்டார்கள்' என்பது அவருக்குத் தெரியாது போலும். ராஜு ஏளனத்துடன் 'உண்மையாகவா? என் முகம் உண்மையில் பார்க்கத் தகுதியுள்ளதுதானா? என்று ஒரு கேள்வி கேட்டான்.

இச்சிறு பையனிடம் அவமானப்படும்படி நேருவதைக்கண்டு டாக்டர் கலங்கினார். மரப்பதுமையைப்போல, யோசியாமல் 'ஆம். உண்மையாக' என்று பதிலும் அளித்துவிட்டார்.

ராஜு 'கடகடவெனச்' சிரிக்கலானான்.

குளிர்ந்த வாசனையுடன்

உயர்ந்த முறையில் தயாரித்த

எவரெஸ்ட் (ஸ்பெஷல்)

&

அமர்ஜோதி

—: பேஸ் பவுடர்கள் :—

சந்தனாதி – அரைக்கீரை விதை – பிருங்காமலக தைலம் – மட்டிப்பால் பத்தி வில்லைகள்–அரகஜா – சந்தனப் பவுடர் முதலிய வாசனாதிரவியங்கள்

தயாரிப்பவர்கள்:

வி. ராமய்யர் அண் கோ.,

பர்ப்யூமர்ஸ்

கும்பகோணம்.

விதியும் காலமும்

கே. சுந்தரம்மாள்

சாயங்காலம் ஏழுமணி சுமார். "வேதனையிருள் விலகி விடியும் நாள் என்றோ" என்று ரேடியோவிலிருந்து வரும் இசைவாணியின் குரல், நடு ஹாலில் தொங்கும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டிருக்கும் கௌரியின் ஹ்ருதய பாவத்தின் சோகத்தைச் சித்திரிப்பது போலிருந்தது. அந்த நிலைமையில் வாசலில் வண்டிவந்து நின்றதை அவள் அறியாதது வியப்பல்லவே. பூட்ஸ்காலடியின் சப்தம் கேட்டு அவளின் மோன நிலை கலைந்தது. நிமிர்ந்து நோக்கினாள்; ஆச்சர்யத்தினால் அகல விரிந்தன அவள் கண்கள்.

'அம்மாஞ்சி!' என்றாள். மேலே வார்த்தை வெளிவராமல் நெஞ்சை அடைத்தது. ஊஞ்சலைவிட்டு இறங்கி நின்றாள்.

"கௌரீ! உன்தலையில் இப்பேரிடி விழுமென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. ஐயோ! எப்படி உருக்குலைந்து போனாய்? உம்" என்ற நீண்ட மூச்சுடன் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டான், கோபால்.

விரித்த கூந்தல் கண்களை மறைக்க "எல்லாம் விதியின் கொடுமை" என்றாள் கண்களின் நீர் கன்னத்தில் வழிய.

"வருத்தப்படாதே. என்ன செய்வது. எல்லாவற்றிற்கும் காலத்தின் கோலமும், மனிதர்களின் மந்த சுபாவமுமே காரணம்" என்றான்.

சற்றுநேரம் மௌனம் நிலவியது. பிறகு "அத்தை முதலியவர்கள் எங்கே?" என்றான்.

"அம்மாவும் அப்பாவும் ஓர் துக்கம் விசாரிக்கச் சென்றிருக்கிறார்கள். பாட்டி பின்கட்டில் படுத்துக்கொண்டிருக்கிறாள்."

"உன் அத்தை இவ்விடம் வரவில்லை?"

"இல்லையே. அப்படி வருவதாகப் பிரஸ்தாபமே கிடையாதே"

"சரிதான். முந்தாநாள் சென்னையில் பார்த்தபொழுது, நேற்று இவ்விடம் வருவதாகச் சொன்னாள்"

"என்ன விசேஷம் காலேஜ் விஷயமாக வருகிறாளா?"

"அதைப்பற்றித் தெரியாது". பின்னும் சற்றுநேரம் மௌனத்தில் கழிந்தது. இருவர் மனதிற்கும் பேச விஷயம் தோன்றவில்லை.

"அன்று அப்பாவிடம் இந்த அல்ப விஷயத்திற்காகச் சண்டை போட்டுக்கொண்டு, யுத்த முனைக்குச் சென்றீர்களே, என்ன பிரயோஜனம்? என் அதிருஷ்டக் குறைவு உங்களைப் பீடிக்காமல் காப்பாற்றினதுபற்றி என் அப்பாவுக்கு நீங்கள் வந்தனமன்றோ செலுத்த வேண்டும்? போனது போகட்டும். இனிமேலாவது ஓர் கல்யாணம் செய்துகொண்டு சுக வாழ்வை நாடுங்கள். ஆனால் ஓர் விஷயம் எச்சரிக்க என்மனம் விரும்புகிறது. இந்தியாவுக்குள் இருக்கும் பக்ஷத்தில் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். இல்லையேல் என்னைப்போல் ஓர் பேதையைப் பரிதவிக்கச் செய்யவேண்டாம்." என்றாள்.

"கல்யாணம் செய்துகொள்ளவேதான் வந்திருக்கிறேன். அதற்காக வெகு பிரயாசைப்பட்டுப் பங்களூருக்கு மாற்றிக்கொண்டேன். மூன்று வருஷம் நிச்சயம் மாற்றமாட்டார்கள். அதற்குள் யுத்தம் எப்படியோ பார்த்துக்கொள்ளுகிறது. ஏன் இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறேனென்றால் முன்னால் அவர்கள் சொற்படி போர்முனைக்குச் சென்று மிகவும் நுட்பமான விஷயங்களில் பாடுபட்டிருக்கிறேன். அதனால் தற்சமயம் என் சுகத்தை அவர்கள் கவனிப்பார்கள்" என்றான்.

"பெண்பார்த்து நிச்சயமாகிவிட்டதா? எந்த ஊர்?"

"கௌரீ! வளைத்து வளைத்துப் பேசுவானேன்? எனக்குக் கௌரீ கல்யாணத்தைத் தவிர வேறு எப்படி ஏற்பட முடியும்?

"இது என்ன? உங்களுக்குப் பைத்தியமா? இது நடக்கக்கூடிய விஷயமா? என்மனம் ஒப்பாது- நான் உங்கள்மீது வைத்தது உண்மை அன்பானால் உங்கள் வாழ்க்கைச் சக்கரம் மேன்மையான பாதையில் செல்லுவதையே என்மனம் விரும்பும். வாழ்க்கையூற்றின் காதல் நீர் அடியுடன் வற்றி உலர்ந்துவிட்டது. மறுபடி நீர் சுரக்குமா? சுரந்தாலும் பருக அருகதையாகுமா? நான் வைத்தியக்கல்லூரியில் சேருவதா? ஆனர்ஸ் வகுப்பில் சேருவதா என்ற பிரச்னையிலிருக்கிறேன். இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. அதற்குள், வருஷக் கணக்கும் பூர்த்தியாகிவிடும். அத்தையும் வந்து தீர்ப்புக்கூற முடியும். அதுதான் நடக்கக்கூடிய விஷயம்" என்றாள்.

"இந்தப் பதிலைக் கேட்கவா நான் விழாதவன் காலில் விழுந்து பிரமோஷனையும் தட்டிக்கொண்டு பங்களூர் மாற்றல் வாங்கிக்கொண்டு

வந்தேன். "கௌரீ, அன்று உன் தகப்பனார் ஆதரவு ஒன்றுமில்லாமல் உத்தியோகத்தை நம்பிப் பெண்ணைக் கொடுக்கமுடியாது' என்று சொன்னவுடன் என் மனம் பட்டபாடு? அதற்குமேல் உன்னிடம் பேசிப் பிரயோஜனமில்லை என்பதனாலும் உன் மனதையும் புண்ணாக்க வேண்டாமென்ற நினைப்பினாலும் உயிரை வெறுத்துப் போரில் முன்னணியில் நிற்பதாக எழுதிக்கொடுத்துவிட்டேன். உயிர்வாழும் நினைப்பே அற்ற நிலைமையிலும் உனது வாழ்க்கையானது மன நிம்மதியுடன் நடந்து வருகிறதா? என்பதை அறிய ஆவல் துடித்தது. தகவல் அறிய முடியவில்லை. இப்படி அல்லாடும் நிலைமையில் ஆறுமாதத்திற்குமுன் எனது உயிர் நண்பனும் நான் இருக்குமிடம் வந்துவிட்டான். 'உனது வாழ்க்கைத் தீபமானது ஏற்றியவுடன் அணைந்துவிட்டது' என்ற விஷயத்தைச் சொன்னான்.

"தீயை மிதித்ததுபோலிருந்தது அச்செய்தி. கொஞ்சநாள் சென்றதும் மூன்றுவருஷ காலமாக உயிர்விடத் தருணம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மனம் எந்த விதத்தில் உயிர்தப்பலாம் என்ற வழி தேடலாயிற்று. 'பெண்களின் முன்னேற்றம்' 'மறுமலர்ச்சி' என்றெல்லாம் மேடையேறிப் பேசிய நாம் செய்கையில் காட்டவேண்டிய சமயத்தை நழுவவிடக் கூடாது என்று தோன்றவே, பொருளாதாரப் புயல்காற்றினால் அலைத்துப் பிய்த்தெறியப் பட்ட காதல் செடியின் ஓர் சல்லிவேர் மறுபடி தளிர்க்கலாயிற்று. கௌரீ, நீ என்னிடம் வைத்த காதல் எத்துணையது? வாய் மறுத்தாலும் உன் மனம் மறுக்குமா?" என்றான்.

"நீங்கள் சொல்வது என்னவோ உண்மைதான். ஆனால் என் மனம் பசையற்றுவிட்டது. நீங்கள் சென்ற தினமே மனதின் உத்ஸாகமே அற்றுவிட்டது. ஆனாலும் கடமையை எண்ணி வருபவரின் அன்பை ஏற்கத் தயாராகவே பிரயத்தனம் செய்தேன். பிறகு இந்தப் பத்துமாத காலமாக ஹ்ருதயத்தின் மென்மையே அற்றுவிட்டது. எரிமலை கக்கும் அக்கினிக் குழம்பு போல் ஸதா தஹிக்கிறது ஹ்ருதயம். கல்வியின் குளிர்ச்சியால் ஓர் சமயம் சமனமாகலாம் என்பது எனது நம்பிக்கை. அதனால் என்னை மன்னியுங்கள். வேறு எவ்விஷயத்திற்கும் மனம் தயாராகவில்லை."

"கௌரீ! காதல் மென்மை. உலகின் முக்யத்வம் அதுவே. காதலே பிரிவின் தீயைக் கக்குகிறது. நேரில் பார்க்கும்பொழுது அதன் குளிர்ச்சி பூர்ண கலையின் குளிர்ச்சியைவிட—மந்த மாருதத்தின் ஸ்பர்சத்தைவிட—குளிர்ச்சியைக் கொடுக்கும். என் வார்த்தையைப் புறக்கணிக்காதே."

"வேண்டாம். இப்பேச்சை விட்டுவிடுங்கள். உறுதியுற்ற மனம் ஊசலாடத் தொடங்குகிறது உங்கள் சொல் வன்மையால்" என்று

சொல்லும் பொழுது, வாசலில் காரின் ஹாரன் சப்தம் கேட்டது. வாசற்பக்கம் திரும்பினாள். தாயும் தகப்பனும் வரவே பக்கத்து அறைக்குள் சென்றுவிட்டாள் கௌரி.

"வா! அப்பா! கோபால்! விடுதலைபெற்று வருவாயென்று கனவிலும் எதிர்பார்க்க வில்லை. எல்லாம் ஈசன் செயல்" என்றார்.

"எல்லாம் தங்கள் ஆசீர்வாதமே" என்று நிறுத்தியவன், கௌரியின் விஷயங்கள்தாம் மிகவேதனையளிக்கின்றன"

"ஊருக்குப் போய்விட்டுத்தானே வருகி றாய்? அம்மா அப்பா யாவரும் சுகம்தானே" என்றாள் அத்தை.

"கௌரியின் விஷயத்தைக் கேட்டதும், எனக்கு உலகமே முடிந்துவிட்டது போன்ற உணர்ச்சி தோன்றிவிட்டது. உங்களைப் பார்க் காமல் எப்படிப் போகமுடியும்?" என்றான்.

"என்ன பாபமோ. குடும்பத்தில் வழிவழி யாக வருகிறது. அத்தை மீனா எட்டு வயதில் இக்கோலங் கண்டாள். இவள் பதினெட்டில் இக்கோலங் கண்டாள். பார்ப்பார் சகிக்க வில்லை; நான் பாபி சகித்திருக்கிறேன்." என்று சொல்லும் பொழுதே அவள் கண்களில் நீர் நிரம்பிற்று.

"சரி சரி. போனதைப்பற்றி நினைத்து என்ன பலன். அவள் காதில் படும்படி எதை யாவது சொல்லி, அவள் மனதைப் புண்படுத் திக் கொண்டேயிருக்காதே. உள்ளே போ!" என்றார்.

அத்தையும் மருமகனும் உள்ளே சென்றார் கள். ஈஸிசேரில் சாய்ந்து கண்களை மூடி னார் விச்வநாதய்யர். அவரின் தங்கை மீனாவின் பால்ய வினைவுகள் மனத்திரையில் ஓடலாயின.

விச்வநாதய்யருக்கு இருபது வயது. கவர் மெண்ட் உத்தியோகம் ஏற்றுக்கொண்டார். எண்பது ரூபாய் சம்பளம். தகப்பனார் மரணப் படுக்கையிருந்தார். அவர் கண்மூடுமுன் ஏழு வயது மீனா கடைசிப்பெண்ணிற்குக்கல்யாணம் செய்தாகவேண்டும் என்றார். சீர்திருத்தக் கக்ஷியைச்சேர்ந்த விச்வநாதய்யர் கூடாது என்று தடுத்தார். காதில் வாங்குவார் யாரு மில்லை. பதினான்கு வயது பாலசுந்தரம் கல்யாணமான வருஷம் தீபாவளிக்கு முன் வாந்தி பேதியால் இறந்தான். குழந்தை மீனா சமூகத்தின் கொடுமைக்குத்தான் பலியானதை அறியாத நிலைமையில்,

"அண்ணா ஏன் நம்மாத்தில் தீபாவளி பண்ணவில்லை? எனக்கு ஏன் புதுப் பாவாடை தைக்கவில்லை?" என்று கேட்கும் மீனாவிற்கு என்ன விதமான பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. துக்கமோ கரை புரண்டு வந்தது. அந்தச்சமயம் அவ்விடம் வந்த பாட்டி,

"உன் அகமுடையான் செத்துப் போனான் அதனால் தீபாவளி இல்லை "என்றாள்.

"என் அகமுடையான் செத்துப் போனால் நான் புதுப் பாவாடை கட்டிக் கொண்டால் என்ன?" என்றாள் மீனா.

"இச் சொல் விச்வநாதனின் ஹ்ருதயத்தில் எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றினது போல் துக்கத்தைக் கிளப்பினது.

"துடைகாலி! உன் கழுத்தில்தான் பாம்பு பிடுங்கி விட்டதே. இனிமேல் உனக்கு ஓரிழவும் கிடையாது. மனுஷாள் வாயைப் பிடுங்காமல் உள்ளே தொலை" என்றாள்.

"விபர மற்ற குழந்தை அழலானாள். அவளை எடுத்து மடிமீது உட்காரவைத்துக் கொண்டு "பாட்டி! போதும் உன் பிரசங்கம். வளரும் செடியைக் கிள்ளினதோடல்லாமல் அக்கினியை அள்ளி வீசுவது போல் சொல் லம்புகளை எய்யாதே. அவளுக்கு நான் பதில் சொல்லிக்கொள்ளுகிறேன். நீ உள்ளே போ" என்று அதட்டினார். பிறகு "மீனா நம்மவீட்டில் ஒருவர் இறந்துபோனால் அவ்வருஷம் ஒருவித பண்டிகைகளும் கொண்டாடக்கூடாது என் பது நமது ஹிந்துக்களுடைய வழக்கம். அடுத்த வருஷம் உனக்கு நல்லதாக ஜரிகை போட்ட பட்டுப்பாவாடை வாங்கித் தருகிறேன்" என்றார் சமாதானமாக.

பிறகு வயது ஏறஏறத் தனது நிலைமையைத் தெரிந்து கொண்ட மீனாவின் உள்ளம் வேதனை யால் கருகிற்று. சமூகத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொன்றாகத் தலையெடுத்தன. தலை பின் னல் கூடாது, வளையல் குங்குமம் அணியக்கூ டாது. பள்ளிக்கூடம் போகக்கூடாது என்ற கட்டுப்பாடுகள் உண்டாயின. தனது பாட்டி, அத்தை இவர்களைப்போல்தான் தானும் காலம் கழிக்க வேண்டுமென்று நினைக்கும்பொழுது அவள் ஹ்ருதயம் வெடித்துவிடும் போல் தோன்றியது. பதினாறும் வயதில்தமையனிடம்,

"அண்ணா, எப்படியாவது என்னை இக்குடும்ப விவகாரத்தில் அகப்படாமல் தப்ப வைத்து விடு. படிப்பிற்கு வசதி செய். எனக்காக வீட்டில் நீ கொஞ்சம் எதிர்க்க வேண்டும். இந்த உதவி செய்தாயானால் என்றென்றைக் கும் கடமைப்பட்டவளாக இருப்பேன். சமூகமும் உன்னைப் பின்பற்றும். என்னைப் போன்ற பேதையர்களுக்கு இவ்வுதவி எவ்வளவோ நன்மை செய்வதாகும்." என்றாள்,

அவளது பரிதாபகரமான தோற்றமும் சொல் லும் அவர் மனதில்மாறுத உறுதியைக் கொடுத் தன. உடனேயே பட்டணத்தில் ஓர் கலாசாலை யில் சேர்த்து, உயர்தர ஹாஸ்டலிலும் இருக்க

ஏற்பாடுசெய்தார். "குடும்பகௌரவம் போய் விட்டது. இனி இருக்கும் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்யாணமாகவேண்டாமா? இது என்ன அநியாயம்" என்று கூப்பாடு போட்டார்கள். சண்டை மிகவும் பலமாக நடந்தது. விச்வநாதய்யருக்குத் திட்டுக்கள் ரொம்பக் கிடைத்தன. அவள் விதி அவ்வளவு தான். படிக்கவைத்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடுமோ? என்றெல்லாம் வசைமொழி பாடினார்கள். ஒன்றையும் காதில் வாங்காமல் கருமமே கண்ணாகக் கருதினர்.

தற்சமயம் மீனா எம். ஏ. எல். டி. பெண்கள் கலாசாலையில் புரொபஸராக இருக்கிறாள். அதனால் அவர்கள் குடும்பம் ஜாதிப்ரஷ்டம் செய்யப்படவில்லை. பெண்கள் பிள்ளைகளெல் லாம் நல்ல இடங்களில் கல்யாணம் செய்யப் பட்டனர். மீனாவை யாவரும் கொண்டாடி னார்கள். எங்கும் அவளுக்கு நல்வரவே கிடைத் தது. 'விபசாரி' என்றும் ஒருவரும் ஏசவில்லை. அவளைப் பின்பற்றி அவளைப்போன்ற பேதை யர் அநேகர் முன்னுக்கு வந்தார்கள். அவள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவளை அனு சரித்தார்கள். படித்து முன்னேறி இன்னொரு வர் தயவை நாடாமல் சுதந்திரமாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். "பால்ய விவாகத்தின் கொடுமையைச் சீர்திருத்தினோம். ருதுமதி விவாகம் செய்தோம். இந்தப் பெண்விதியும் இப்படியா முடியவேண்டும்" என்று ஓர் நீண்ட மூச்சு விட்டார். பிறகு அதுதான் மனிதர் கொடுமை. இது விதியின் கொடுமை. ஆனால் தனது நிலைமையையும் காலத்தின்போக் கையும் அறியும் சக்தியையும் வயதையும் அடைந்து விட்டாள் கௌரி. அவள் விஷயத்தில் நாமே ஒருவிதக்கொடுமையைத் தான் செய்தோம். மனம் விரும்பிய மணாளனை மணக்கவிடாமல் செய்தோம். தற்சமயம் அவள் சம்மதித்தால்......அப்பா; அது எப்படி முடியும்? அவள் விதி. அவ்வளவுதான். இந்து சமூகத்தில் நடக்காத விஷயத்தை நாம் மாத்திரம் எப்படிச் செய்யமுடியும்? மீனாவின் வாழ்க்கையை அவளும் பின்பற்ற வேண்டி யதுதான். என்ற முடிவுக்கு வரும்சமயம்.

"அப்பா, சாப்பிட வரவில்லையா" என்ற கௌரியின் குரல் அவர்சமாதியைக் கலைத்தது. அவளுக்குப்பின் கோபால் நிற்பதைக் கண்ட தும் அவரையும் அறியாமல் அவர் மனம் துணுக்குற்றது. "ஈசனே, உனது சித்தம் எப்படியோ" எனச் சிந்தித்தவாறே சாப்பிடச் சென்றார்.

2

மறுநாள் காலை எட்டுமணி காப்பி சாப் பிட்டானதும், மாடியிலுள்ள அறையில் மேஜையின் பக்கத்தின் நாற்காலியில் உட் கார்ந்து கொண்டிருந்தாள் கௌரி. மேஜைமீது ஓர் புஸ்தகம் விரிக்கப் பட்டிருந்தது. ஆனால் அவள் எதிரிலுள்ள ஜன்னல் வழியாக வெறும் வெளியை நோக்கியவாறு, மனோரதம் செல்லும் பாதையில் கவனத்தைச் செலுத்தியிருந்தாள். கோபால் வருவானென்று கனவிலும் எதிர் பார்க்கவில்லை. பள்ளி வாழ்க்கையில் நடத்திய காதல் நாடகம், பரீக்ஷை முடிந்ததும் பள்ளிக் கூட சம்பந்தம் அற்றுவிடுவதுபோல் அற்று விட்டதையும் பின் மனம் ஒவ்வாத வாழ்க்கைப் புயலில் சிக்கி உழன்றதையும் கடைசியில் மனம் சூன்யமாகக்கல்வித்துறையில் சாந்தியை நாடலாம் என்ற சமயம், கோபாலின் வருகை தனது மன அமைதியைக்குலைத்து, சலனமுறச் செய்வதையும் எண்ணி, இனி விதி நமக்கு எவ் வித வழி காட்டுமோ என்ற சிந்தனைக்கு முடிவுகாணாத நிலைமையில் அவள் கண்களை இரு கரங்கள் மூடின.

அவ்விதம் விளையாடக்கூடியவர்கள் தற்சம யம் அவ்விடம் யாருமில்லையாதலால், திடுக்கிட் டுப் பதறிவெடுக்கெனக் கண்ணிலிருந்தகையை எடுத்து உதறிவிட்டுத் திரும்பினாள். புன் சிரிப் புடன் நின்றுகொண்டிருந்தான் கோபால்.

"இது என்ன செய்கை அம்மாஞ்சி!" என் றாள் சற்றுக் கடுமையாகவே.

"ஏன்? இதிலென்ன புதுமை. நமது பழைய விளையாட்டுத் தானே? உன்னைப் பராதீனமான நிலைமையில் பார்க்கவில்லை. மனமும் எண்ண வில்லை. அந்த நிலைமையின் பழக்கத்தின் தன் மையை மறக்கமுடியுமா?" என்றான் புன் சிரிப்புடன்.

"ஐயோ! வேண்டாம். வேலியே பயிரை அழித்தால் விளைவதெப்படி? என்னைக் காப் பாற்றுங்கள். சமூகத்தின் வசைமொழிக்கு ஆளாக்காதீர்கள். உங்கள் எண்ணம் நடை பெற வசதியில்லை."

"கௌரி, வேலி பயிரை அழிக்கவில்லை. காவ லுக்கே ஏங்கி நிற்கின்றது. உன் உள்ளத்தை மறைக்காமல் உண்மையை ஒப்புக்கொள்; உனது அந்தராத்மா என்னை அடியுடன் வெறு க்கிறது என்று சொல்லுவாயா?"

"ஆமாம், உங்கள்மேல் வெறுப்புத்தான் தோன்றுகிறது. காதலின் மலர் விகஸித்த காலம் மலையேறி விட்டது. கருகி உலர்ந்து மண மிழந்த மலரே எஞ்சி நிற்கின்றது. ஹோமத் திற்குதவாத அவிஸ். பூஜைக்கு அருகதையற்ற மலர். உங்களிடம் காதல் என்பது எப்பவோ அற்றுவிட்டது. தயவுசெய்து என்னைவிட்டுப் போய்விடுங்கள்." என்றாள்.

"இதைப்பார்! உனது வார்த்தைகள் ஹ்ரு தய பூர்வமாகவா வருகின்றன. சமூகத்திற் குப் பயந்தே நடிக்கிறாய். என்னை வெறுக் கிறேனென்று நீ சொல்லுவதை உனது அந்த ராத்மா ஒப்புக்கொள்ளுமா? எங்கே என்னை நிமிர்ந்துபார்த்து உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்" என்று மேஜைமீது சாய்ந்து நின்றபடி அவள் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண் டான்.

அவன் கையைத் திமிரவோ, பதில் பேசவோ அவளுக்குச் சக்தியற்றுவிட்டது. அசைவற்று உட்கார்ந்திருந்தாள். ஒருவர் கண்கள் மற்றவர் கண்களை ஊடுருவிப் பாய்ந்தன. ஹ்ருதயாகாசம் தெளிந்தது. எண்ணத்தின் மேகமே சஞ்சரிக்கவில்லை. இந்த நிலையில் பத்து நிமிஷங்கள் சென்றன. "ஆம் நீங்கள் சொல்வது உண்மை. உங்களை வெறுப்பது என்பது முடியாத விஷயந்தான். அதற்காக என் உறுதியைக் குலைக்கவேண்டாம். வசைமொழிக்கு ஆளாகாமல் செய்யுங்கள். அன்றும் இன்றும், என்றும் எனது காதல்தெய்வம் தாங்கள்தான். உங்கள் வருகையினால் எனது உறுதி குலைந்து, ஆடிக்காற்றுப் பஞ்சுபோலாயிற்று. கெஞ்சி வேண்டிக்கொள்ளுகிறேன். என்னை விட்டுச் சென்றுவிடுங்கள். உங்கள் வாழ்க்கைத் துறையில் உங்களுடன் செல்ல அநேகம் படகுகள் காத்திருக்கின்றன. சோபையிழந்த படகு தனித்துறையில் செல்லட்டும். அத்தையைப் போல் நானும் உத்யோகம் செய்யப்போகிறேன். அதுவே எனது கடமை. உலகமும் அதையே ஒப்புக்கொள்ளும்." என்றாள்.

"கௌரீ! உலகம் நாசமாய்ப் போகட்டும். அதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. உனது மாசற்ற அன்பே எனது ஜீவனின் முக்ய அம்சம். நான் உன்னைவிட்டுச் செல்லப்போவதில்லை. உனது வாழ்க்கைப் படகு ஆனந்த சாகரத்தில் மிதந்துகொண்டிருந்தால், அந்தத் திசையைக்கூட நான் எட்டிப்பார்க்க விரும்பமாட்டேன். உனது மலர்ச்சியே எனது கடமையின் வெற்றி. வெட்டிப் பேச்சுடன் நில்லாது காரியாம்சத்தில் செய்து வழிகாட்டுவதே எனது கடமையின் வெற்றியாகும். உன் அத்தை மீனா இன்று வருவாள். என் இஷ்டம் தான் நிறைவேறும்" என்றான்.

"அத்தை படிக்கவேண்டிய வசதி செய்து கொடுப்பாள். இவ்விஷயத்திற்கு ஒப்புக்கொள்ளமாட்டாள்." என்றாள்.

"எனக்குப் பூர்ணசம்மதம், இதைமுடிக்கவே இவ்விடம் வந்தேன்" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினாள். மீனா அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

"அத்தே, எப்பொழுது வந்தாய்?" என்றாள் ஆச்சர்ய பாவம் தொனிக்க.

"சற்றுமுன் வந்தேன். காப்பி சாப்பிட்டு விட்டு உன்னைத் தேடிவந்தேன். உங்கள் வாக்குவாதமும் கேட்டேன். உனக்காகவே அவனை யுத்தமுனையிலிருந்து பங்களூர் வரும்படியான ஏற்பாட்டை எவ்வளவோ சிரமத்துடன் செய்தேன். இன்றைக்கு எட்டாம்நாள் பங்களூரில் ஆனந்தமாகத் தாம்பத்ய வாழ்க்கை நடத்துவாய்" என்றாள் மீனா.

"இதெல்லாம் என்ன அத்தை, ஒன்றும் வேண்டாம்" என்றாள் பாசாங்கான கோபத்துடன்.

சைபால்

CIBOL

(வெளி உபயோகத்திற்கு)

—முகப்பரு, சொரிசிரங்கு, வேனில்கட்டி,— பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சேத்துப்புண், கரப்பான், படை, புழுக்கடி முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும் — சிறந்தது. —

எரிச்சல் கிடையாது —

— துணிகளில் கரை பிடிக்காது

— நறுமணம் உள்ளது —

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:—

THE SOUTH INDIAN MFG. COY.

44, DHANAPPA MUDALY ST.

MADURA

"அம்மம்மா என்ன கோபம்? உன் மனம் எனக்குத் தெரியும். பெற்றதாயிடமா கற்ற வித்தையைக் காண்பிப்பது. நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவேன். நான் அந்த நாளின் கட்டுப்பாட்டை மீறினேன். இப்பவும் துணிந்தே செய்யப்போகிறேன். எந்த ஸனுதனி என்னை வரவேற்கவில்லை. பணம் பேசும் அம்மா பேசும்" என்றாள் மீனு.

மத்யானம் மூன்றுமணி. ஞாயிற்றுக்கிழமை யாதலால் விச்வநாதய்யர் வீட்டிலிருந்தார். நடு ஹாலில் தொங்கும் ஊஞ்சலில், விச்வநாதனும், புரொபஸர் ஸீதாராமனும் உட்கார்ந்திருந்தார்கள். விச்வநாதன் பிள்ளை ஜாதகமும் புரொபஸரின் பிள்ளை ஜாதகமும் பொருந்துகின்றனவா? என்று பார்க்க, ஜோஸ்யர் முத்துஸ்வாமி தீக்ஷிதரும், திதியை ஞாபகப்படுத்தவந்த ராமஸ்வாமி சாஸ்திரியும் பஜனைமடவகுலுக்குவந்த கனபாடிகளும் மூன்று நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள். ஸ்கிரீனுக்குப் பின்னால், விச்வநாதய்யர் சம்சாரமும், தாயாரும், மாமியாரும், ஜாதகப்பலனைக் கேட்பதற்காக உட்கார்ந்திருந்தார்கள். அந்தச் சமயம் அவ்விடம் வந்த மீனுவை,

"வா அம்மா! எப்பொழுது வந்தாய். இப்படி உட்கார்" என்று பரிவுடன் ஓர் நாற்காலியைச் சுட்டிக் காட்டினார் புரொபஸர். தமையனுக்குப் பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள்.

"ஜாதகம் திவ்யப் பொருத்தம். முகூர்த்தம் வைக்கவேண்டியதுதான் பாக்கி" என்றார் ஜோஸ்யர்.

"ஜோஸ்யர், முதலில் ஓர் கல்யாணத்திற்கு முகூர்த்தம் பாரும். பிறகு இந்தக் கல்யாண முகூர்த்தம் வைக்கலாம்" என்றாள் மீனு.

"யாருக்காகச் சொல்லுகிறாய் மீனு?" என்றான் தமையன்.

"கௌரிக்கும் கோபாலுக்கும்" என்றாள் நிதானமாக.

"என்ன? என்ற சொல்லானது ஆச்சர்யத் தொனியுடன் எல்லார் வாயிலிருந்தும் ஏக காலத்தில் எழுந்தது. துள்ளி எழுந்த பாட்டி மீனு அருகில் வந்து நின்று "என்னடீ மீனு, என்ன உளறுகிறாய்?" என்றாள்.

"உளறவில்லை.ஸ்பஷ்டமாகத்தான் சொல்லுகிறேன்" என்றாள் போர்வீரன் தைரியத்துடன்.

"இதெல்லாம் என்னம்மா. அவரவர் விதியை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். உன்னைப்போல் அவளையும் படிக்க வைத்துவிடுகிறேன். அது தான் உத்தமம். நீ சொல்லும் விஷயம் வழக்கமில்லாத செய்கை குடும்பத்திற்கு இழிவு" என்று முடிக்கு முன் "சாஸ்த்ரவிரோதம். விதியின் செயலைமாற்ற நாம் யார்? அவளுக்கு வாழவேண்டிய விதியிருந்தால் அவன் ஏன் சாக வேண்டும்? இவளால் இவனுக்கும் கெடுதி ஏற்படலாம். விதியை மாற்றியுமைக்க நம்மால் முடியாது அம்மா" என்றார் கனபாடிகள்.

"அடி மீனு! நீ படிக்கணும் படிக்கணும் என்று குதித்தாய், ஜாதி ஆசாரத்தைவிட்டாய், தொலைந்து போகட்டும். அதுபோல் அவளும் இருக்கட்டும், இந்தக்கேவலமான விஷயத்தை வாய்விட்டும் பேசாதே; மஹா தோஷம். காலத்திற்கேற்ப விதியமைகிறது. அதற்கெல்லாம் என்ன செய்யமுடியும்" என்றாள் பாட்டி.

"பாட்டி! காலத்திற்கேற்ப விதி அமைகிறது" என்றாயே. அது முற்றிலும் உண்மை. நான் இப்பொழுது சொல்லப்போகும் விஷயங்களைக்கேட்டு எனக்கு விடை சொல்லுங்கள், நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஒரு விஷயம் ஆராய்ந்து பார்ப்போம். சாரதா சட்டம் ஏற்படுவதற்குமுன் வியாழானுகூலமென்பதை ஐந்துமுதல் பன்னிரண்டுவயது வரை. அதிகம் போனால் பதினொன்கு வயதிற்கு மேற்படாமல் விதியானது வரும்படி செய்து வந்தது. ஸௌகரியம் போல் கல்யாணங்கள் நடந்து வந்தன. பிறகு சாரதா சட்டம் அமுலுக்கு வந்ததும் அந்த விதியானது நிச்சயமாகப்பதினொன்கு வயதுவரை வியாழானுகூலமென்பதை வரும்படி செய்வதில்லை. பிறகும் சிலபேர்களுக்கு இருபது வயதானாலும் வராமல் செய்கிறது. இதுமாதிரி கல்யாணங்கள் நம் அனுபவத்தில் எவ்வளவு நடைபெறுகின்றன. சமீபத்தில் கல்யாண வயதுப் பெண் என்றால் பதினைந்து வயதானால் சிறிய பெண் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற சட்டத்தை மனிதரை ஆட்டிவைக்கும் விதியே காலத்தை அனுசரித்து நடத்தும்பொழுது, நாம் மட்டும் அதையேன் எதிர்க்கவேண்டும்? அந்த விதி என்பது தீக்ஷண்யமானால், சாரதா சட்டம் அமுலுக்கு வரமுடியுமா? ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு வயதை நிர்ணயித்த விதிபதினொன்கு, வயது வரை கல்யாண காலமே வராமல் செய்து வருகின்றது. அப்படியிருக்கும் பொழுது, விதியின்மேல் பழிபோட்டு மனித இஷ்டத்தை நிறைவேற்றுவது எவ்வளவு கேவலம்?

இரண்டாவதாக,அக்காலங்களில் "விடோ" (Widow) "என்றால் பிறருக்கு அடிமையாக வாழ்வதேவிதி" என்றுஏற்பட்டிருந்தது,எனது காலத்தில் அடிமைத்தளையைத் தகர்த்துக் கொண்டு, படித்துச் சுதந்திரம்பெற முயற்சி செய்தார்கள். ஆனால் எதிர்ப்பு எவ்வளவோ இருந்தும் அப்பொழுது அவ்விதி படிக்க முடியாமல் தடுக்கவில்லை. எதிர்ப்பில்-வசைமொழியில்-சுதந்திரம் பெற்றோம் நாங்கள். அபக்கியாதியில் விடுதலை பெற்றோம். தற்காலத்தில் பதினைந்து வயதிற்குட்பட்ட விடோவைக்காண முடியாது. இப்பொழுது விதியானது காலத்தை அனுசரித்து விடோவாகும் எழுத்தைப் பதினைந்துக்குமேல் தான் விதித்

ரிகத்தை அனுசரிக்கும் என் தமயனார்கூட பணத்திற்கே முதன்மை கொடுத்தார். காதலைத் திரஸ்கரித்தார். விதி கர்மானுசாரம் என்பதுபோல் மனமற்றவாழ்வு சிதைந்தது. இனிமேல்தான் கௌரியின் வாழ்க்கை ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்கப்போகிறது. நீங்கள் யாவரும் சம்மதம் கொடுத்தேயாக வேண்டும். நான் சொன்ன விஷயங்களில் தப்பிதம் இருந்தால் எடுத்துக் காட்டுங்கள், ஒத்துக்கொள்ளுகிறேன்'' என்றாள்.

'ரொம்ப அழகு. ஆட்டைக் கடித்தது மாட்டைக் கடித்தது. அம்மையாரையும் கூடக் கடித்துவிட்டது' என்பது போலிருக்கிறது. மீனா! போரும் உன் பிரசங்கம்; குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பு தோன்றிவிட்டாயே. உன்னை இஷ்டப்படி படிக்க வைத்ததின் பலனா? வேணுமானால் உன்னைப் போல் படிக்கட்டும். குடும்பத்தின் பெயர் சந்தியில் நிற்க இந்தக் கல்யாணப்பேச்சு வேண்டாம்; இந்தக் கோபாலன் இதற்காகவா ஓடிவந்தான்.''

"அம்மா போரும் வாயை மூடிக்கொள்; உன் காலம் மலையேறிவிட்டது. நான் படிக்கப் போனபொழுது நீயும் பாட்டியும் அத்தையும் கூப்பாடுபோட்டீர்கள். என் உடன் பிறந்தார்கள் அவர்கள் குழந்தைகள் யாவரும் நல்ல ஸ்திதியில் நல்ல இடத்தில்தான் சம்பந்தம் செய்தார்கள். நான் படித்ததற்காக ஒருவரும் தடைசொல்லவில்லை. அதுபோல் கௌரியின் விஷயமும் நடைபெறும். காலத்தையொட்டி விதி அமைகிறது. இக்கல்யாணம் நடந்தே தீரும். என்ன அண்ணா! உன் அபிப்பிராயம் என்ன?'' என்றாள்.

"எனக்கு ஸர்வஸம்மதம். கனபாடி, ஜோஸ்யர், சாஸ்திரி புரொபஸர் அபிப்பிராயம் என்னவோ?'' என்றார்.

"எனக்கு ஆக்ஷேபணையே கிடையாது. உங்கள் அபிப்பிராயம் என்ன ஸனாதனிகளே'' என்றார் புரொபஸர்.

"மீனா சொல்லிய விஷயங்களை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். ஆனால் பழக்கமில்லாதபடியினால் சமூகக் கட்டுப்பாட்டிற்காகவும் எங்கள் ஜீவனம் நடப்பதற்காகவும் ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. அதனால் எங்களைக் காட்டிக்கொடுக்காமல், ரிஜிஸ்டர் கல்யாணம் செய்துவிடுங்கள். எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை'' என்றார். தொந்தரவு ஒன்றும் எங்களுக்கு ஏற்படாது என்றார்கள் மூவரும்.

"அது கூடாது கோழைத்தனம். விதிப்படி மாங்கல்யதாரணம் செய்யவேண்டும். தக்ஷிணை மூன்று மடங்கு பவுனாகவே'' என்றாள்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"மீனா, ஓர் சிறு கேள்வி, மாங்கல்யதாரணம் என்கிறாயே, விதியால் இவன் ஆயுளும் குறைவானால் பிறகு?'' என்றார் கனபாடி.

"ஆண் பிள்ளைகள் ஒன்று, இரண்டு, மூன்று சிலர் நாலுகூடச் செய்யவில்லையா? அதுபோல் நினைத்துக்கொள்ளுங்கள். ஆனால் பெண்கள் ஹ்ருதயம் சகிப்புத்தன்மையுடையது. இரண்டிற்குமேல் மனம் ஏற்றுக்கொள்வது கடினம். விதியே வழிகாட்டும். வயதும் மீறிவிடும். கௌரிவிஷயம்இவைகளையெல்லாம் ஒட்டினது அல்ல. முன்னால் நடக்கவேண்டியது தவறிவிட்டது'' என்றாள்.

"இது தெய்விகத்தினால் சேர்க்கப்படுவதால் தேவ சன்னிதியிலேயே நடக்கட்டும். ஓர் கோவிலில் நடத்திவிடுவோம் என்றார்'' சாஸ்த்ரி.

"நீங்கள் மூவரும் வந்து நடத்தி வைக்க வேண்டும்'' என்றாள் மீனா.

"நீங்கள் கல்யாணவிமரிசையைப் பேப்பரில் போடும்பொழுது எங்களைப்பற்றி ஒன்றும் எழுதாமலிருந்தால் நாங்கள் வரத் தயார்'' என்றார் கனபாடிகள்.

"மெத்த சந்தோஷம். அப்படியே செய்கிறோம். மெத்த வந்தனம்'' என்றாள் சிரித்துக்கொண்டே மீனா.

"பிறகு பதினைந்தாம் தேதி கௌரி கல்யாணமும், முப்பதாம் தேதி விச்வநாதய்யர் பிள்ளை சிவராமனுக்கும் புரொபஸர் பெண் சுசீலாவிற்கும் கல்யாணமும் செய்வதாகத் தீர்மானஞ் செய்தார்கள்.

ஃ ஃ ஃ

கால சக்கரம் நான்குமுறை உருண்டது, ஓர்நாள் காலை "கௌரி! கௌரி! என்று'' கையில் பிடித்த தந்தியுடன் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே வந்தான் சிவராமன்.

"என்ன விசேஷம் அண்ணா'' என்று கேட்டுக்கொண்டே வெளியில் வந்தாள் கௌரி.

"உனக்கு நாட்டுப்பெண் பிறந்திருக்கிறாள்'' என்றான்.

"சந்தோஷம்'' என்று சொல்லிக்கொண்டே கோபால் இருக்கும் அறைக்குள் ஓடினாள்.

"மூன்று வயது பாலகனைத்தோளில் தூக்கிய வண்ணம் இவளை நோக்கிவந்தான் கோபால். அருகில் வந்ததும் "ஆ, காட்டுங்கள்'' என்றாள் கௌரி. பிறகு சக்கரையை வாயில்போட்டுவிட்டு "நாட்டுப்பெண் பிறந்திருக்கிறாள். ராஜா உனக்கு ஸம்சாரம் பிறந்திருக்கிறாள்'' என்று குழந்தையை வாங்கிக் கொஞ்சினாள்.

"கௌரியின் கன்னத்தை லேசாகக் கிள்ளிய வண்ணம் இந்த ஸந்தோஷமெல்லாம் யாரால் கௌரி'' என்றான் கோபால்.

"விதியும் காலமும் ஒன்றுகூட்டிவைத்தாலும் காரண கர்த்தா என் அத்தை மீனாதான்'' என்றாள் குதூகலத்துடன். இவைகளின் தாத்பர்யம் ஒன்றையும் அறியாத நிலைமையில் "அப்பா! அம்மாகிள்ளறா'' என்று தாயின் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டான் ராஜா.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

திருக்கிறது. முன்னால்ஐந்துவயதுமுதல் விடோவாகும் எழுத்தைவிதித்த விதியானது தற்காலம் மாற்றியமைக்கும் பொழுது; மனிதனின் உறுதியும், எதிர்ப்புத் தன்மையும் நன்மையான வழியில் செல்லும்பொழுது; விதி அனுகூலம் செய்கிறது. வீணாக அதன் அதன்மேல் பழிபோட வேண்டாம். தற்காலத்தில் விடோ படிப்பது'' என்பது ஸர்வ ஸகஜமாகிவிட்டது. ஒரு குடும்பத்திலும் அதை இழிவாகக்கருதவில்லை. விதிகாலத்தை அனுசரிக்கிறது.

ஓர் உதாரணம்—நானும் எனது பெரியம்மா பெண் குஞ்சுவும் ஏறக்குறைய ஒரேவயதில் ஒரு வருஷம் முன்பின்னாக விடோவானோம். எனது தமையனார் என்னை ஸம்சாரச் சுழியில் அகப்படாமல் தப்புவித்தார். எதிர்ப்புக்களை ஸஹித்தார். நான் சுதந்திரமாக வாழ்ந்து வருகிறேன். எனக்கு எங்கும் நல்வரவு. என்னை அழைப்பதே பாக்யமென்று நினைக்கிறார்கள். குஞ்சுவைக் கண்டிப்பாக ஜாதி ஆசாரத்தை மீறக்கூடாது என்று சொல்லி விட்டார்கள். கட்டுப்பாட்டில் நிம்மதிபெற்றதாக யாவருக்கும் எண்ணம். ஆனால் அவள் இப்பொழுது தனது மனதிலுள்ளதை இஷ்டப்படி வெளியிடக்கூட சுதந்திரம் கிடையாது. ஏன்? சாப்பாடு-தூக்கம், ஸ்னானம் இவைகூட அவள் இஷ்டப்பட்ட பொழுது செய்துகொள்ள முடியாது. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஆபத்துக் காலங்களில் இரத்தத்தை முறித்துப் பாடுபட வேண்டியது அவள் கடமையாகிறது. ஆனால் அவள் வருகையை யாராவது சந்தோஷமாக வரவேற்கிறார்களா? காரியம் முடியும்வரை சற்று மரியாதை. பிறகு எப்பொழுது தொலையப் போகிறாள் என்ற நினைப்பு. விசேஷங்களில், குடும்பங்கள் ஒன்று சேரும் பொழுது, அவள் செய்திருக்கும் நன்மைகள் ஒருவர் நினைவிலும் தோன்றுவதில்லை. மனிதர் பிசகாமல் நடப்பது சாத்யமாகுமா! ஏதாவது சமயங்களில் அவள் செய்திருக்கும் தவறுதல்களைப் பெரிய விஷயமாகச்சொல்லி ஒன்றுசேர்ந்து தூற்றுவார்கள். இவ்விஷயங்களை எனது கண்ணால் கண்டு காதால் கேட்டே சொல்லுகிறேன். அவள்மேல் இரக்கப்படும் என் அம்மாகூட, "ஐயோ! அதன் தலையெழுத்து? விதி, என்ன செய்வது" என்ற அனுதாப வார்த்தை கூறுவதோடு சரி. விதியா அவளை அப்படி ஆட்டி வைக்கிறது? மனிதர் செய்யும் கொடுமைக்கு விதியின் பெயர் சாக்கு. நாங்கள் இருவரும் விடோ. எனது நிலைமைக்குக் காரணம், மனிதனா? விதியா? தெய்வமா? அவளையும் படிக்க வைத்திருந்தால் அந்த விதி அவளுக்கு நிச்சயம் விடுதலையளித்திருக்கும்.

மூன்றாவதாக விடோவான யாவரும் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்பது எனது கக்ஷியல்ல. படிக்க வசதியற்ற நிலைமையில், மனமிருந்தால் செய்துகொள்ளலாம். மனதை அடக்கும் சக்தியற்ற நிலையில் அவசியமேதவிர, உறுதியும் தைரியமும் இருக்கும் பக்ஷத்தில், தனிப்பட்ட வாழ்க்கை உத்தமம்தான். கௌரியைப்போல் காதல் ஒரு பக்கம், கல்யாணம் ஒரு பக்கம் நடந்து, அதிலும் விடுதலை பெற்று, கோபாலைப்போல் காத்திருப்பவர்கள் கல்யாணம் செய்துகொள்வதில் குற்றமென்ன? விதியே காலத்தையொட்டி இவ்விதம் அமைத்திருக்கின்றது. உலக வாழ்க்கையில் பற்று இருக்கும்பொழுது ஆதரவும், குழந்தைகளும் இல்லாத யௌவன நிலைமையில், பலபேர்கள் துர்நோக்கிற்கும், அபவாதத்திற்கும் ஆளாகாமல் கல்யாணம்செய்துகொள்வது அவசியம் என்று சொல்லுகின்றேனே தவிர சம்சார சம்பந்தமில்லாத நிலைமையில் தான், உலகத்திற்குச் சேவை புரியலாம்; சுயநலம் கருதாமல் எத்துறையிலும் துணிந்து பாடுபடலாம். இக்கல்யாண விஷயத்தில் முயற்சிசெய்து நாலுபேர்கள் நடந்தால் அப்பொழுது விதியானது, அவர்களுக்கு நிச்சயம் உதவியளிக்கும். அப்படி உலகை ஆட்டிவைக்கும் விதியே காலத்தை அனுசரித்து நடத்தும் பொழுது நாமும் நிச்சயம் காலத்தை அனுசரித்தே நடக்கவேண்டும். அதனால் கோபாலனுக்கும் கௌரிக்கும் கல்யாணம் நடக்கத்தான் வேண்டும்'' என்று முடித்தாள்.

இவளின் பிரசங்கத்தைக் கேட்டு யாவரும் பிரமித்துவிட்டார்கள். ஒருவருக்காவது இன்னபதில் சொல்வதென்று தெரியவில்லை. கடைசியாக,

"மீனா உன் கக்ஷி போற்றத்தகுந்தது. நான் ஆமோதிக்கிறேன்'' என்றார் புரொபஸர்.

"நீ சொல்லுவதெல்லாம் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம்தான். ஆனால் சாஸ்திரம் இடம்கொடுக்கவில்லையே, அதை எப்படி அனுசரிப்பது?'' என்றார் ஜோஸ்யர்.

"சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லை'' என்பதற்கு என்ன ஆதாரம் காட்டுகிறீர்கள்? மேலும் சாஸ்திரத்திலுள்ளபடி நாம் எல்லா விஷயங்களையும் நடத்திவருகிறோமா? முதலாவதாகப் 'பிராமணன் சேவகாவிர்த்தி செய்யக்கூடாது' என்பது விதி. எல்லோரும் வேத பாராயணம் செய்துகொண்டு யாசிக்கப் புறப்பட்டால், போட்டுக் காப்பாற்றுவது யார்? வித்தையை விற்கக்கூடாது. நீங்கள் ஜோஸ்யம் சொல்வதற்குப் பணம் வாங்காமல் போனால் உங்கள் குடும்பம் நடக்கும் வழி என்ன? 'விதி பணம் கொடுக்கும்' என்று இருக்கமுடியுமா? "சாஸ்த்ராயச ஸௌகர்யாயச'' என்று இரண்டையும் ஒத்துச்செய்ய வேண்டியதுதான். உங்கள் ஸ்மிருதியே ஓரிடத்தில் புனர்விவாகத்தைப்பற்றிச் சொல்லுகிறதல்லவா? இடம் பொருள் காலம் இவைகளை அனுசரித்து இக்கல்யாணத்தை அவசியம் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியம். படிப்பு இக்காலத்தில் ஸர்வஸகஜமாகப் போனதுபோல் இன்னும் கொஞ்சநாளில் இதுவும் ஸகஜமாகிவிடும். கௌரியும் கோபாலும் காதலால் கட்டுண்டார்கள். நாக